# உதயன்

Uthayan - A lively National Tamil Daily

சுடர்: 30 கதிர்: 012 வள்ளுவர் ஆண்டு: 2045 கார்த்திகை 22, திங்கட்கிழமை 08.12.2014


**காலநிலை**
மழை பெய்வதற்கான சாத்தியம் அதிகம். மாலை வேளை மழை பெய்யக் கூடும்.

## ஜீ.சி.ஈ.சாதாரண தரப் பரீட்சை நாளை ஆரம்பம்

கரணவாய், டிசெ.8
ஜீ.சி.ஈ.சாதாரண தரப் பரீட்சைகள் நாளை செவ்வாய்கிழமை முதல் ஆரம்பமாகி 18ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன. இந்தப் பரீட்சைக்கு நாடு முழுவதிலும் உள்ள சுமார் 5.லட்சத்து 77 ஆயிரத்து 220 மாணவர்கள் தோற்றவுள்ளனர். பக்.21

## வேட்பு மனு தாக்கல் இன்று

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் இன்று நடைபெறவுள்ளது. முற்பகல் 9 மணி முதல் முற்பகல் 11 மணி வரை வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும் என்று தேர்தல்கள் செயலகம் அறிவித்துள்ளது. அதேவேளை, ஜனாதிபதித் தேர்தலுக்காக இது வரை 18 பேர் கட்டுப் பணம் செலுத்தியுள்ளனர். பக்.22

## கட்சி தாவினார் அகில இலங்கை பிரதேச சபை தலைவர்

யாழ்ப்பாணம், டிசெ.8
அகில இலங்கைப் பிரதேசசபைத் தலைவர், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலிருந்து, பொது எதிரணிக்கு தாவியுள்ளார். முல்லேரியா பிரதேச சபைத் தலைவரான பிரசன்ன சோலங்கவே இவ்வாறு கட்சி மாறியுள்ளார். பக்.21

# சிறுபான்மையினரது ஆதரவு வேண்டாம்

### தனித்துக் களமிறங்கி வெற்றிபெறுவோம் என மஹிந்த அபேவர்தன இறுமாப்பு



கொழும்பு, டிசெ.8
சிறுபான்மை மக்களின் வாக்குகளோ அல்லது அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளின் ஆதரவோ எமது ஜனாதிபதிக்குத் தேவையில்லை என்று கூறியுள்ளார் அமைச்சர் மஹிந்தயாப்பா அபேவர்தன. 'நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்டே போரை முடிவுக்குக் கொண்டு வந்தோம். தமிழ் புலம்பெயர் அமைப்புக்கள் ஈழக் கனவை நனவாக்க கங்கணம் கட்டிக் கொண்டு இருக்கின்றன." – என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
கண்டியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். பக்.21

## மைத்திரி மீதான நடவடிக்கைக்கு அமைச்சர் குழு எதிர்ப்பு

யாழ்ப்பாணம், டிசெ.8
பொது எதிரணி வேட்பாளராக களமிறங்கியுள்ள மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிரான ஒழுக்காற்று விசாரணைகளை நிறுத்துமாறு, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு, ஆளுங்கட்சியின் அமைச்சர் குழு ஒன்று அழுத்தம் கொடுத்துள்ளது என்று தெரியவருகின்றது.
ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அமைச்சர்கள் பொது எதிரணிக்கு தாவினர். பக்.21

## பள்ளிவாசல் பாதுகாவலன் மைத்திரி



ஜனவரி 8ஆம் திகதி ஸ்தாபிக்கப்படும் அரசானது அனைத்து மதங் களுக்கும் சம உரிமை வழங்குவதுடன், அனைத்து மக்களினதும் மதச் சுதந்திரத்தையும் பாதுகாக்கும் என்று எதிரணியின் பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேன நேற்று சூளுரைத்துள்ளார்.
அத்துடன் பள்ளிவாசல்கள் மீதான தாக்குதல்களைத் தடுத்து நிறுத்தி அந்தப் பள்ளிவாசல்களின் பாதுகாவலனாக நான் இருப்பேன் எனவும் அவர் உறுதி வழங்கியுள்ளார். பக்.09

# போர் வெற்றியை பங்கிட இயலாது

### கோத்தபாய ராஜபக்ஷ கொந்தளிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 8
"ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே இறுதிக் கட்டப் போரை நடத்தி முடித்தார். அந்தப் போர் தொடர்பில் முழு முடிவும் அவரே எடுத்தார். போரை நடத்தி முடிப்பது தொடர்பில் அவர் யாரிடமும் எதையும் கேட்கவில்லை. போர் வெற்றி, முழுமையாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கே உரியது.– இவ்வாறு தெரிவித்தார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சகோதரரும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருமான கோத்தபாய ராஜபக்ஷ.
"ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே இறுதிப் போரின் காலத்தை தீர்மானித்தார். அதனைச் செய்வதற்கு யாரும் அவரிடம் கேட்கவில்லை. அது அவரால் மேற்கொள்ளப்பட்ட அரசியல் ரீதியான முடிவு. ஜனாதிபதியின் செயலராக லலித் வீரதுங்க நியமிக்கப்பட்ட பின்னர், பாதுகாப்புச் செயலராக என்னை நியமித்தார்."– என்றும் அவர் கூறியுள்ளார்.
ஹோமகமவில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கூட்டம் ஒன்றில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். பக்.21

# புலிகளை விடவும் மஹிந்த மோசம்



### சாடுகின்றார் சம்பிக்க ரணவக்க

விடுதலைப் புலிகள் 30 ஆண்டுகள் மேற்கொண்ட அழிவுகளைக் காட்டிலும் கடந்த 5 ஆண்டுகளில் மஹிந்த ராஜபக்ஷவின் அரசு நாட்டில் ஏற்படுத்தியுள்ளது.
மைத்திரிபால சிறிசேன தேர்தலில் வெற்றி பெற்றதும், மக்கள் நீதி மன்றம் அமைக்கப்பட்டு, நிதிய மைச்சு, பெற்றோலியக் கூட்டுத்தாபனம் உட்பட அமைச்சுக்கள், திணைக்களங்களில் இடம்பெற்ற ஊழல்களை விசாரிக்க வேண்டும். – இவ்வாறு கடுமையாகச் சாடியுள்ளார் முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க. பக்.02

பொதுபல சேனாவும் முஸ்லிம் மக்களும் பக். 06

# திடீர் ராணுவ அணிவகுப்பால் மன்னாரில் நேற்றுப் பரபரப்பு



மன்னார், டிசெ.8
மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சன்னார் இராணுவ முகாமில் பயிற்சி பெற்ற இராணுவச் சிப்பாய்களின் அணிவகுப்பு நேற்று ஞாயிற்றுக்கிழமை மன்னார் நகரில் திடீரென இடம் பெற்றது. பக்.21

## மஹிந்தவின் பரப்புரையில் இராஜதந்திரிகள்

ஜனாதிபதித் தேர்தல் பரப்புரை நடவடிக்கைக்காக வெளிநாட்டுத் தூதரகங்களில் பணியாற்றும் இராஜதந்திரிகள் பலர் இலங்கைக்கு அழைக்கப்பட்டுள்ளனர் என்று தகவல்கள் கசிந்துள்ளன. பகிரங்கப்படுத்தப்படாத இந்தப் பணிக்காக அவர்களுக்கு விசேட கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன என்றும் அந்தத் தகவல்கள் கூறுகின்றன. பக்.22

# தேர்தலுக்கு முன் திருப்பதி தரிசனம்

### வேட்புமனுத் தாக்கலான்தும் பறப்பார் மஹிந்த

யாழ்ப்பாணம், டிசெ. 8
வேட்புமனுத் தாக்கல் செய்தவுடன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்தியாவுக்குச் செல்லவுள்ளார். அங்கு திருப்பதி கோயிலுக்குச் சென்று வழிபாடு செய்யவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.
அதேவேளை, 'சாத்தானுக்கு சாமரம் வீச வேண்டாம்' என்று ஜனாதிபதியின் இந்திய வருகையை முன்னிட்டு, பா.ம.க. நிறுவுனர் ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். அதேவேளை, ம.தி.மு.க பொதுச் செயலாளர் வை.கோ, ஜனாதிபதியின் பயணத்தை எதிர்த்துப் போராட்டம் நடத்தவுள்ளதாக அறிவித்துள்ளார்.
ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பு மனுத் தாக்கல் இன்று இடம்பெறவுள்ளது. பக்.21

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# செய்திகள்

# விடுதலை புலிகளை விடவும் நாட்டை அழித்தவர் மஹிந்த

## முன்னாள் அமைச்சர் சம்பிக்க சாடுகின்றார்



யாழ்ப்பாணம், டிசெ.8
விடுதலைப் புலிகள் 30 வருட காலத்தில் மேற்கொண்ட அழிவு களைக் காட்டிலும், கடந்த 5 வருடங்களில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசுகூடிய அழிவுகளைநாட்டில் ஏற்படுத்தியுள்ளது என்று முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள் ளார்.
தனியார் தொலைக்காட்சி ஒன்றில் ஒளிபரப்பப்படும் அரசியல் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கருத்துத்தெரிவிக்கும்போதேஅவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
"இன்று சர்வதேச சந்தையில் மசகுஎண்ணெயின்விலைகுறைந்துள்ளது. இலங்கையில் பெற்றோல் 63 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட வேண்டும். எனினும் 150 ரூபாவுக்கே தற்போது விற்பனை செய்யப்படுகின்றது.

ப 1 விரிவு

கொழும்புநகரை அழகுபடுத்துவதாககூறிமேற்கொள்ளப்படும்அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக நூற்றுக்கு 7 வீதவட்டிஅடிப்படையில் கடன் பெறப்படுகின்றது.
இந்தநிலையில்கொட்டாவபகுதியில்மேற்கொள்ளப்படும்அதிவேக பாதையின் ஒரு கிலோமீற்றர் நிர்மாணிப்புக்காக 717 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளது.
அனைவரும் குற்றம் சுமத்துவதன் அடிப்படையில் குறித்த அபிவிருத்திகளின் போது 10 சத வீத தரகுப் பணம் பெற்றுக்கொள்ளப்படுவதாக கூறப்பட்டாலும் உண்மையில் 10 ஆயிரம் வீதம் பெற்றுக் கொள்ளப்படுகின்றது" – என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.
"மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றதன் பின்னர், மக்கள் நீதிமன்றம் அமைக்கப்பட்டு அதில் இலங்கையின் நிதியமைச்சு, பெற்றோலிய கூட்டுத்தாபனம் உட்பட்ட பல்வேறு திணைக்களங்களில் அமைச்சுக்களில் இடம்பெற்ற ஊழல்கள் விசாரிக்கப்பட வேண்டும்" – என்றும் அவர் கோரிக்கை விடுத்தார். (ற–5)

# பதிவு செய்யப்பட்ட முகவரிடம் இருந்தே பசுக்கள் கொள்வனவு

## திருட்டைத் தடுக்க வடக்கு மாகாண விவசாய அமைச்சு நடவடிக்கை

யாழ்ப்பாணம், டிசெ.8
யாழ்ப்பாணத்தில் இருந்து நல்லினப்பசுக்கள்களவாடப்பட்டுவேறு மாவட்டங்களுக்குக் கடத்தப்படுகின்ற சம்பவங்கள் அதிகரித்திருப்பதை அடுத்து, பதிவு செய்யப்பட்ட முகவர்களிடம்இருந்துமாத்திரமே இனிமேல் அரசசார்பற்ற நிறுவனங்கள்மாடுகளைக்கொள்வனவு செய்யவேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது. வடமாகாண விவசாய, கமநலசேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம்மற்றும்சுற்றாடல்அமைச்சர் பொ.ஐங்கரநேசன் இதனைத் தெரிவித்துள்ளார்.
"பசுக்கள்களவுபோயுள்ளனஎன்று பொதுமக்கள் பலர் எங்களிடம் முறைப்பாடுகளைத் தெரிவித்துள்ளார்கள். போர்க்காலத்திலும், போருக்குப் பின்னரான கடந்த ஐந்து வருடங்களிலும் மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆற்றிய பணி மகத்தானது. அதேசமயம், அரசசார்பற்ற நிறுவனங்களால் ஆயிரக்கணக்கான கால்நடைகள் இதுவரையில் பொதுமக்களுக்கு வழங்கப்பட்ட போதும் எதிர்பார்த்த அளவுக்கு பால் உற்பத்தி அதிகரிப்போ அல்லது கால்நடை அபிவிருத் தியோ ஏற்படவில்லை." – என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
"இதற்குப் பெரும்பாலும் வடக்கிலேயே பசுக்களை வாங்கி வடக்குக்குள்ளேயே விநியோகிப்பதும் ஒரு காரணம். இங்கு மாடுகள் கைமாற்றப்பட்டு இடம்மாற்றப்படுகின்றனவே தவிர அவற்றின் எண்ணிக்கை அதிகரிக்கப்படவில்லை. மாடுகளுக்கிடையில் அக இனக்கலப்பு நிகழ்வதால் பசுக்களின்தரம்குன்றிப்பால்உற்பத்தியும் வீழ்ச்சி காணத் தொடங்கியுள்ளது. இதனால் வடக்குக்குள்ளேயே மாடுகளை வாங்கி வடக்குக்குள்ளேயே விநியோகிக்கும் திட்டத்தைக்கைவிடுமாறும்,வேறு மாகாணத்திலிருந்துபசுக்களைக் கொண்டுவர முடியுமாக இருந்தால் மாத்திரமே வாழ்வாதாரமாகப் பசுக்களை வழங்கும் திட்டத்தை முன்னெடுக்குமாறும் அரசசார்பற்ற நிறுவனங்களிடம் கோரியுள்ளோம்." – என்றும் அவர் தெரிவித்தார்.
"தற்போது பசுமாடுகளை வழங்குவதைவிட, உள்ளூரில் அக இனக்கலப்பில் தரம் குறைந்து செல்லும் பசுமாடுகளைத் தரம் உயர்த்தும் திட்டமே அவசியம். இதற்கு நல்லினக் காளைகளை வடபகுதிக்கு எடுத்துவரவேண்டும். சில நிறுவனங்கள் தரகர்கள் மூலமாகவே மாடுகளைக் கொள்வனவு செய்கின்றன. வடக்கில்போதியஎண்ணிக்கையில்நல்லின மாடுகள் இல்லாமையால், பசுமாடுகள் களவாடப்பட்டுக் கடத்தப்படுகின்றன. இதனைத் தடுப்பதற்காகக் கால்நடை விற்பனையில்ஈடுபடும்முகவர்களை எமது அமைச்சில் உடனடியாகப் பதிவு செய்யுமாறு கோரவுள்ளோம். அவ்வாறு பதிவு செய்யப்பட்ட முகவர்களிடம் இருந்து மாத்திரமே, அதுவும் கால்நடைத் திணைக்களத்தால் காதுகளில் அடையாளம் இடப்பட்ட மாடுகளை மாத்திரமே அரச சார்பற்ற நிறுவனங்கள் வாங்கி விநியோகிக்கவேண்டும் எனவும் இது பற்றிய தரவுகள் உடனுக்குடன் அமைச்சில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனவும் அறிவுறுத்தவுள்ளோம். இதனால் ஓரளவுக்கேனும் மாடுகள் களவாடப்படுவதையும், கடத்தப்படுவதையும் தடுக்க முடியும்" – என்றும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ற)

# பட்டப் பகலில் பெண்ணின் சங்கிலியை அறுக்க முயற்சி

## திட்டம் பிசுபிசுத்ததால் தப்பியோடினான் திருடன்

பட்டப் பகல் சந்தை நோக்கி சைக்கிளில் சென்று கொண்டிருந்த இளம் பெண்ணை மோட்டார் சைக்கிளில் பின் தொடர்ந்து சென்ற இளைஞர் ஒருவர் பெண் அணிந்திருந்த ஒரு லட்சம் ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலியை அறுக்க முற்பட்டார். ஆயினும் அந்தப் பெண் சங்கிலியைக் கெட்டியாகப்பிடித்துக்கொண்டதால்திட்டம்நிறைவேறாததிருடன்அவ்விடத்தில் இருந்து தப்பியோடியுள்ளான். இந்த துணிகரமான கொள்ளை முயற்சி நேற்றுக் காலை பகல் 10 மணியளவில் மானிப்பாய் இலங்கை வங்கிக்கு முன்பாகச் செல்லும் முத்துத் தம்பி வீதியில் நடைபெற்றது.
உடுவில், மல்வத்தைச் சேர்ந்த திருமண இளம் பெண் ஒருவர் மானிப்பாய் மத்திய சந்தைக்குச் சைக்கிளில் சென்று கொண்டிருந்தார். மோட்டார் சைக்கிளில் பின்தொடர்ந்து சென்ற இளைஞர் ஒருவர் மக்கள் நடமாட்டமில்லாத இடத்தில், பெண்ணின் கழுத்தில் இருந்த சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலியை இழுத்து அறுக்க முற்பட்டார்.
ஆனால் அந்தப் பெண் சங்கிலியை இறுக்கமாக கையால் பிடித்தவாறு திருடன், திருடன் என்று கூச்சலிட்டுள்ளார். அதைக் கேட்டு தூரத்தில் இருந்தவர்கள் ஓடிவர, தன் திட்டம் நிறைவேறாது என்று புரிந்து கொண்ட இளைஞர் அங்கிருந்து தப்பியோடியுள்ளார். அந்தப் பகுதியில் முன்னர் இருதடவைகள் இவ்வாறு சங்கிலி அறுக்கப்பட்டுள்ளது என்று மக்கள் தெரிவித்தனர். (ற–115)

# கொழும்புத்துறையில் குண்டு மீட்பு

யாழ்ப்பாணம், டிசெ.8
கொழும்புத்துறை பகுதியில் ஜொனி பட்டா என்ற அழைக்கப்படும் பழைய குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளது என்று யாழ். பொலிஸார் நேற்றுத் தெரிவித்தனர்.
கொழும்புத்துறை பிரதான வீதிப் பகுதியில் இந்தக் குண்டு மீட்கப்பட்டுள்ளது. கடந்த வாரங்களில் பெய்த மழையால் குறித்த குண்டு வெளித்தெரிந்துள்ளது. அந்தப் பகுதியைச் சேர்ந்த ஒருவர் யாழ். பொலிஸாருக்கு வழங்கிய தகவலின் பிரகாரம் யாழ். பொலிஸாரும், இராணுவத்தினரும் இணைந்து நேற்றுமுன்தினம் இரவு குண்டை மீட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற–106)

# யாழ்.நகரில் நேற்று பாதீனியம் ஒழிப்பு



யாழ்ப்பாணம், டிசெ: 8
யாழ்.நகரில் நேற்று பாதீனிய ஒழிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.
யாழ். கோட்டையை அண்டிய பகுதிகளில் வளர்ந்திருக்கும் பாதீனியங்கள் கிருமிநாசினி கொண்டு விசிறப்பட்டு அழிக்கப்பட்டன. வடக்கு மாகாண விவசாய அமைச்சு இந்தப் பாதீனிய அழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றது.
குடாநாட்டில் பாதீனியங்கள் பெருகும் இடங்கள் கண்டறியப்பட்டு, அவை கிருமிநாசினியைக் கொண்டு அழிக்கப்பட்டு வருகின்றன. (ற–17)

# ஒருங்கிணைப்பு கூட்டம் மீண்டும் ஒத்திவைப்பு

## அமைச்சர் டக்ளஸ் கொழும்பு செல்வதே காரணம் என்று தகவல்

இன்று நடைபெறவிருந்த யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இரண்டாவது தடவையாகவும் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. இணைத் தலைவர்களுள் ஒருவரான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கலந்துரையாடலில் பங்குபற்ற முடியாது என்று தெரிவித்தமையாலேயே அது ஒத்தி வைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.
யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தை கடந்த மாதம் 26 ஆம் திகதி நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால் இறுதி நேரத்தில் கூட்டம் இரத்துச் செய்யப்பட்டது. இருப்பினும் அன்றையதினம், பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் துறைசார் மீளாய்வு மாத்திரம் இடம்பெற்றிருந்தது. மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் 8 ஆம் திகதி இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.
இந்த நிலையில், நேற்றுத் திடீரென இன்று இடம்பெறவிருந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தை ஒத்திவைத்துள்ளதாக, யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் அறிவித்துள்ளார். தவிர்க்க முடியாத காரணத்தால் கூட்டம் பிற்போடப்பட்டுள்ளதாகவும், உரிய திகதி விரைவில் தெரியப்படுத்தப்படும் என்று மாத்திரம் குறிப்பிட்டுள்ளார்.
அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அவசரமாகஇன்றுகொழும்புசெல்வதாலேயே கூட்டம் ஒத்திவைக்கப்பட்டதாக நம்பகரமான தகவல்கள் தெரிவித்தன. இது தொடர்பில் உறுதிப்படுத்திக் கொள்வதற்கு, அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்துடன் தொடர்பு கொள்ள முயற்சித்தபோதும், அவர் தொலைபேசி அழைப்புக்கு பதிலளிக்கவில்லை. (ற–5)

# பொலிஸை தாக்கி விட்டு தப்ப முயன்றவர் கைது

பொலிஸாரை தாக்கி விட்டு தப்பியோட முயன்ற சந்தேக நபர் ஒருவரை துன்னாலை பகுதியில் வைத்து நெல்லியடி பொலிஸார் கைது செய்துள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று மதியம் துன்னாலை கலிகை பகுதியில் நடந்துள்ளது.
கோடா உற்பத்தி இடம்பெறுவதாக கிடைத்த தகவலை அடுத்து நெல்லியடி பொலிஸ் நிலையத்தை சேர்ந்த 5 பொலிஸ் உத்தியோகத்தர்கள் வாகனத்தில் துன்னாலை பகுதியில் உள்ள இடத்தை சுற்றி வளைக்க முற்பட்டனர். அப்போது அங்கிருந்த சந்தேக நபர்கள் தம்மைத் தாக்க முற்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
அதனையடுத்து மேலதிக பொலிஸார் வரவழைக்கப்பட்டது, சந்தேகநபர் மடக்கிப் பிடிக்கப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். சுற்றிவளைப்பில் 12 லீற்றர் கோடா மீட்கப்பட்டது என்றும், இது தொடர்பில் பெண்ணொருவரும் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ற–109)



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்**: பொருளாதார வளம் சீராக இருக்கும். அதே வேளையில் செலவும் அதிகரிக்கலாம். குடும்பத்தில் சந்தோஷம் நிலவும். உறவினர்கள் மத்தியில் தொடர்ந்து கருத்து வேறுபாடு வரலாம். அவர்கள் வகையில் சற்று ஒதுங்கி இருங்கள்.

**இடபம்**: பிள்ளைகளால் பெருமை காணலாம். அயலாரிடம் இருந்து வந்த கசப்புணர்ச்சி நீங்கும். திருமணம் போன்ற சுபநிகழ்ச்சிகள் தங்கு தடையின்றி நடைபெறும். உத்தியோகத்தில் வேலைப்பளு அதிகரிக்கும்.

**மிதுனம்**: உத்தியோகத்தர்கள் அதிக வேலைப் பளுவை சுமந்தாலும் அனைத்தையும் சுலபமாகச் செய்வீர்கள். அலைச்சல்கள் வரலாம். சிலருக்கு விரும்பிய இடமாற்றம் கிடைக்கும். கோரிக்கைகள் நிறைவேறும்.

**கடகம்**: சக ஊழியர்கள் உதவிகள் செய்து அனுசரணையாக இருப்பார்கள். உங்களிடம் கொடுக்கப்பட்டுள்ள பொறுப்புகளை நீங்கள் திறமையாகச் செய்வீர்கள். அதிக உழைப்பைச் செய்தவர்களுக்கு ஏற்ற பொருளாதார வளம் வந்து சேரும்.

**சிங்கம்**: தொழில் ஆரம்பித்தவர்களுக்கு பொன்னான காலகட்டமிது. மூதலீடுகளை திருப்பி எடுப்பதோடு மட்டுமல்லாமல் லாபத்தையும் அள்ளுவீர்கள். வரவு செலவு கணக்கில் இருந்து வந்த சந்தேகங்கள் நீங்கும்.

**கன்னி**: சிறிது முயற்சி எடுத்தாலும் வாய்ப்புகள் வந்து குவியும். புதிய ஒப்பந்தங்களை துணிந்து ஏற்றுக் கொள்ளலாம். எதிர்பார்த்த புகழ் ,பாராட்டு கிடைக்கும். மாணவமணிகள் சிறிது சிரத்தை எடுத்தாலே பெருவெற்றி பெறலாம்.

**துலாம்**: வழக்கு விவகாரங்களில் வெற்றி கிடைக்கும். பித்தம் மயக்கம் போன்ற உபாதைகள் நீங்கும். உணவுக் கட்டுப்பாடு தேவை. நெருப்பு தொடர்பான வேலைகளில் இருப்பவர்களுக்கு மிகுந்த கவனம் தேவை.

**விருச்சிகம்**: நல்ல பொருளாதார வளமும் மேன்மையும் உண்டு. நன்மைகள் அதிகம் கிடைக்கும். எடுத்த காரியம் அனைத்தும் வெற்றிகரமாக முடியும். மதிப்பு மரியாதை சிறப்படையும். செல்வாக்கு ஓங்கும்.

**தனுசு**: குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். மனைவி வழியில் அவ்வப்போது ஏற்பட்ட கருத்து வேறுபாடு, மோதல்கள் அடியோடு மறையும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். திருமணம் போன்ற சுபநிகழ்ச்சிகள் நடந்தேறும்.

**மகரம்**: வீட்டு விடயத்தில் இருந்து வந்த தாமத நிலை மாறும். புதிய சொத்து வாங்கலாம்.தொழில் சிறக்கும். பிள்ளைகளால் பெருமை ஏற்படும். உத்தியோகத்தில் மேலதிகாரிகளை அனுசரித்துச் செல்லுங்கள்.

**கும்பம்**: உத்தியோகம் பார்ப்பவர்கள் உன்னத நிலையை அடையலாம். பதவி உயர்வு, சம்பள உயர்வு போன்றவை இருக்கும். மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். சக ஊழியர்களின் உதவி கிடைக்கும்.

**மீனம்**: வேலையின்றி இருப்பவர்கள் மிகுந்த முயற்சிக்குப் பின் வேலை பெறுவர். வேலை நிமித்தமாக வெளியூர் சென்றவர்கள் மீண்டும் குடும்பத்திடம் ஒன்று சேர்வர்.







# கவர்ச்சிப் பெண் பிரியங்கா



ஆசியாவின் கவர்ச்சிகரமான 50 பெண்கள் பட்டியலில் பொலிவூட் நடிகை பிரியங்கா சோப்ரா முதலிடத்தை பிடித்துள்ளார். இந்த ஆண்டுக்கான பட்டியல் கடந்த வியாழக்கிழமை வெளியிடப்பட்டது.

ஆசியாவின் கவர்ச்சிகரமான பெண்கள் பட்டியலில் முதலிடத்தில் இருப்பது பொலிவூட் நடிகையும், பாடகியுமான பிரியங்கா சோப்ரா.

முன்னதாக கடந்த 2012 ஆம் ஆண்டிலும் பிரியங்கா தான் ஆசியாவின் கவர்ச்சிகரமான பெண்ணாகத் தேர்வு செய்யப்பட்டார்.

கடந்த ஆண்டு பட்டியலில் முதலிடத்தில் இருந்த பொலிவூட் நடிகை கத்ரீனா கைப், இந்த ஆண்டு 4 ஆவது இடத்தில் உள்ளார். பிரபல தொலைக்காட்சி நடிகை த்ரஸ்தி தாமி இரண்டாவது இடத்திலும், மற்றொரு தொலைக்காட்சி நடிகையான சனாயா இரானி 3 ஆவது இடத்திலும் உள்ளனர்.


# கொஞ்சம் சிரிங்க பாஸ்...

மாணவன் : பரீட்சையில் சித்தியடையாததற்கு என்னோட மறதிதான் காரணம்!
ஆசிரியர் : இப்பவாவது உணர்ந்தியே!
மாணவன் : கையில் பிட் இருந்தும் அதைப் பார்த்து எழுதவில்லை. அது இருந்ததையே மறந்துட்டன்.

உன் கணவர் உடம்புக்கு முடியாமல் படுத்த படுக்கையாக கிடந்தாரே... இப்ப எப்படியிருக்கார்.
ஏதோ பரவாயில்லை... காலையில் எழுந்ததும் தேநீர் மட்டும் போட்டுத் தாறார்.

ஏன் ஸ்கூட்டரைத் திருடினாய்...?
போக்குவரத்து பொலிஸ்காரர் தான் சீக்கிரம் வண்டிய எடு... வண்டிய எடுன்னு அவசரப்படுத்தினாரு!

# எப்படியெல்லாம் தீர்ப்பு கொடுக்கிறார்கள்




இங்கிலாந்தைச் சேர்ந்த ஒரு பெண் கர்ப்பிணி ஆக இருந்தபோது தினமும் மது அருந்தி வந்தார். அவருக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. குழந்தை மூளை வளர்ச்சி இன்றி பிறந்ததால் அந்த தாய் குழந்தையை பராமரிப்பு இல்லத்தில் சேர்த்து விட்டார்.

தற்போது அந்தக் குழந்தைக்கு 7 வயது ஆகின்றது. மூளை வளர்ச்சி இல்லாததால் உடல் நலம் பாதிக்கப்பட்டு உள்ளதால் பராமரிப்பு இல்லத்தை சேர்ந்தவர்கள் குழந்தையின் தாய் மீது நீதிமன்றத்தில் வழக்கு த் தொடர்ந்துள்ளனர்.

அதில் கர்ப்பிணி ஆக இருந்த போது அதிகமாக மது அருந்தியதால் தான் குழந்தையின் மூளை வளர்ச்சி பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, குழந்தையின் மருத்துவ செலவுக்கு நஷ்டஈடு வழங்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள் இங்கிலாந்து சட்டப்படி கருவில் இருக்கும் குழந்தையை ஒரு நபராக கருத முடியாது. எனவே அவருக்கு எதிராக ஒரு தாய் குற்றம் செய்ததாக கருத முடியாது என்று தீர்ப்பளித்துள்ளனர்.

தாயையும் சேயையும் பிரிக்கக்கூடாது என்னும் நல்லெண்ணத்தாலேயே



தமிழன் சிக்கன் பிரியாணியில் முட்டையையும் சேர்த்தான்

# செய்திகள்

## மைத்திரிக்கு வடக்கு மக்கள் நன்றியோடு இருக்க வேண்டும்

### வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிச.7

பொது எதிரணியின் ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கு வடமாகாண மக்கள் நன்றியுடையோராக இருக்க வேண்டும் என்று கூறியுள்ளார் வடக்குமாகாணசுகாதார அமைச்சர் மருத்துவர் ப.சத்தியலிங்கம்.

வவுனியா பொது மருத்துவமனையின் சிறுநீரக நோயாளர்களுக்கான குருதி சுத்திகரிப்பு நிலையம், தாய், சேய் பாலூட்டும் ஊக்குவிப்பு நிலையம், இளையோர் நேய சுகாதார மையம் ஆகியவை நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டன. அந்த நிகழ்வுகளில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"இவற்றுக்கு நிதியுதவி வழங்கிய முன்னாள் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவுக்கு வடக்கு மக்கள் நன்றிக் கடனுடையவர்களாக இருக்க வேண்டும். அவர் 8.5 மில்லியன்ரூபாநிதியுதவிவழங்கியிருந்தார்."– என்று அவர் தனது உரையில் குறிப்பிட்டார்.

"சிறுநீரகப் பாதிப்புக்கள் கூடிய மாவட்டமாக அனுராதபுரமும் அதற்கு அடுத்ததாக வவுனியா மாவட்டமும் உள்ளன. வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த மக்கள் சிறுநீரகம் தொடர்பான நோய்களைக் குணப்படுத்த யாழ்ப்பாணம் அல்லது கொழும்பு வைத்தியசாலைகளுக்குச் செல்ல வேண்டிய நிலை காணப்பட்டது. அதையடுத்து சுகாதார அமைச்சராக இருந்த மைத்திரிபாலசிறிசேனவிடமும்,நிகொட், ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றிடம் உதவி கோரினோம்"– என்றும் தெரிவித்தார்.

"புனர்வாழ்வு அளிக்கக் கூடிய வைத்தியசாலையொன்றைமாங்குளம் பகுதியில் அமைக்கவுள்ளோம். வடக்கு மாகாணத்தில் போரால் பாதிக்கப்பட்ட 40 ஆயிரம் இளம் விதவைகள் உள்ளனர். 20 ஆயிரம் விசேட தேவைகள் உடையோர் உள்ளனர். உளநலம் பாதிக்கப்பட்ட ஆயிரக் கணக்கானவர்கள் உள்ளனர். 2015 ஆம் ஆண்டு பாதீட்டில் உளவளசேவையை மேம்படுத்தப் பலதிட்டங்களை முன்வத்துள்ளோம். இந்திய அரசுக்கு இது தொடர்பான திட்ட முன்வரவை முன்வைத்துள்ளோம்." – என்றும் அவர் அங்கு கூறினார்.

கொழும்பு அரசிடம் நாம் கோரிய நிதியில், 27 சதவீதமே கிடைத்தது. ஆனால் அது போதாது. அடுத்த ஆண்டு இந்தத் தொகையை விடக் கூடிய தொகையையே எதிர்பார்க்கின்றோம்"– என்றும் அவர் அங்கு சுட்டிக்காட்டினார்.

(ற–4,402)



## பொலிஸாருக்கும் மோ.சைக்கிள்கள்

### நாடளாவிய ரீதியில் நேற்றுமுன்தினம் விற்பனை

யாழ்ப்பாணம், டிசெ.8

பொலிஸ் உத்தியோகத்தர்கள் தமது பணிகளை இலகுவாக மேற்கொள்ளும் பொருட்டு வடக்கு மாகாணம் உட்பட நாடளாவிய ரீதியில் அவர்களுக்கு மோட்டார் சைக்கிள்கள் குறைந்த விலையில் விற்பனை செய்யப்பட்டன. குறித்த மோட்டார் சைக்கிள்கள் 50 ஆயிரம் ரூபாவுக்கு அவர்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன.

யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரிவுக்கு உட்பட்ட பொலிஸ் நிலையங்களில், 30 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு யாழ்.உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பிரசாத் ரணசிங்க மோட்டார் சைக்கிள்களை வழங்கினார்.

காங்கேசன்துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரிவுக்கு உட்பட்ட பொலிஸ் நிலையங்களைச் சேர்ந்த 32 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு தெல்லிப்பழை பொலிஸ் நிலைய வளாகத்தில் வைத்து காங்கேசன்துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் ஜெயவர்த்தன மோட்டார் சைக்கிள்களை வழ்ங்கினார்.

மாங்குளம் பொலிஸ் அத்தியட்சகர் பிரிவுக்கு உட்பட்ட 7 பொலிஸ் நிலையங்களைச் சேர்ந்த 30 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு மாங்குளம் பொலிஸ் நிலையத்தில் வைத்து மாங்குளம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் றொசான் விஜயரத்ன வழங்கினார்.

மன்னார் மாவட்டத்தில் உள்ள தலைமன்னார், மன்னார், விடத்தல்தீவு, இலுப்பைக்கடவை, மடு, முருங்கன், சிலாபத்துறை ஆகிய 7 பொலிஸ் நிலையங்களில் கடமையாற்றும் 31 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான மோட்டார் சைக்கிள்கள், மன்னார் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் வைத்து வழங்கப்பட்டன.

மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சந்தன அலகக் கோன் மற்றும் உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஐ.ரி.சுகதபால ஆகியோர் இணைந்து அவற்றை வழங்கினர்.

(ற–4,56,86)

## வடமாகாண சபை அமர்வை நேரில் பார்த்தார் மூர்த்தி

வடக்குமாகாணசபையின் வியாழன்நடைபெற்றஅமர்வை,யாழிலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்தின் பதில் தூதுவர் டி.மூர்த்தி நேரில் சென்றுபார்வையிட்டார்.


வடக்கு மாகாண சபையின் 20 ஆவது அமர்வு, கைதடியிலுள்ள பேரவைச் செயலகத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

வடக்குமாகாண பேரவைச்செயலகத்தின் அழைப்பின் பேரில், யாழிலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்தின்பதில்தூதுவர்டிமூர்த்தி அமர்வுக்குச் சென்று, சபையின் விசேட அதிதிகளுக்கான இடத்தில் அமர்ந்திருந்து அமர்வை மாலை வரையில் பார்வையிட்டார்.

இந்திய மத்திய அரசால், வடக்கு மாகாணசபை உறுப்பினர்களுக்கு 8 கார்கள் வழங்கப்பட வுள்ளன என்று தெரிவிக்கப் பட்டிருந்தது. அதற்கு எதிராக அநாமதேய துண்டுப் பிரசுரம் உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட்டிருந்தது. இந்தப் பின்னணியில் இந்தியத் துணைத் தூதுவர் கலந்து கொண்டுள்ளார்.

(ற–5)





மன்னார் கடற்கரைப்பகுதியை சுற்றுலா மையமாக மாற்றியமைக்கும் திட்டம் ஒன்றை லங்கா பிறிட்ஜிங் தனியார் நிறுவனம் முன்னெடுத்துள்ளது. மன்னார் தாழ்வுப்பாடு கடற்கரைப்பகுதியில் சுமார் 5 ஏக்கர் பகுதியில் சுற்றுலாப்பயணிகளைக் கவரக்கூடிய விதத்தில் ஓய்வு இருக்கைகள் மற்றும் நிழல்குடைகள் ஆகிவற்றை அமைப்பதுடன் தள்ளுவண்டிக் கடைகளும் அமைக்கப்படவுள்ளன. அங்கு வருகை தரும் சுற்றுலாப்பயணிகளின் வருகை அதிகரிப்பை நோக்காகக் கொண்டு இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதன் முதற்கட்டமாக கடற்கரையை துப்பரவு செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மன்னார் வர்த்தக சம்மேளனம், மன்னார் நகர சபை ஆகியனவும் இணைந்து இந்தத்திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளன. (ற–14)

## நீங்கள் கத்துங்கள் வெற்றி பெறுபவர் மஹிந்தவே

### இப்படிக் கூறுகின்றார் வட மாகாண சபை எதிர்க்கட்சி உறுப்பினர் தர்மபால

யாழ்ப்பாணம், டிசெ. 8

நீங்கள் இங்கே தொடர்ந்து கத்தினால், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு இலகுவாக வாக்குகள் கிடைக்கும் என்று வடக்கு மாகாண சபை அமர்வில் தெரிவித்துள்ளார் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின்உறுப்பினரும், எதிர்க்கட்சி உறுப்பினருமான தர்மபால செனவிரட்ண.

கடந்த வியாழக்கிழமை நடந்த வடக்கு மாகாணசபையின் அமர்வில், ஆளுங்கட்சி உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் இனப்படுகொலை தொடர்பில் சமர்ப்பித்த பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"சர்வதேசத்திடம் காசு கொடுத்து ஆயுதங்களை நாங்களும் வாங்கினோம். நீங்களும் வாங்கினீர்கள். அழகாக இருந்த இலங்கையை நாசமாக்கினோம். இப்போது அதே சர்வதேசத்திடம் தீர்வுக்காக நீங்கள் செல்லப் போவதாகச் சொல்லுகின்றீர்கள். இந்த வாயாலேதான் எல்லாம் வந்தது. இவ்வளவு பிரச்சினைக்கும்வாய்தான்காரணம். நாங்கள்தான் சண்டை பிடிக்கின்றோம். எங்களின் பிள்ளைகளாவது எதிர்காலத்தில் சந்தோசமாக இருக்க வேண்டும். நீங்கள் இங்கே கத்திக் கொண்டிருந்தால், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு இன்னமும் நல்ல வாக்குகள் கிடைக்கும். அவர்தான் ஜனவரி 8 ஆம் திகதியும் ஜனாதிபதியாக வருவார். நீங்கள் வேண்டுமானால் அவரிடம் மேலும் 10 லட்சம் ரூபா வாங்கி, கார்களை வாங்குங்கள்"– என்று அவர் மேலும் கூறினார்.

(ற–5)

# ஜனாதிபதி மஹிந்த விற்ற மோ.சைக்கிளால் குழப்பம்

## புதிய சுற்றறிக்கையினால் திண்டாட்டத்தில் அரச ஊழியர்

யாழ்ப்பாணம், டிசெ.8
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் வழங்கப்பட்ட மோட்டார் சைக்கிளினால் அரச உத்தியோகத்தர்கள் மத்தியில் பல்வேறு குழப்பங்கள் ஏற்பட்டுள்ளன. மோட்டார் சைக்கிள் வழங்குவதற்கு முன்னர் தெரியப்படுத்தப்படாத நிபந்தனைகள் தற்போது தெரியப்படுத்தப்படுவதாலேயே இந்தக் குழப்பங்கள் உருவாகியிருப்பதாக ஊழியர்கள் கூறுகின்றனர்.

குறிப்பாக வாகனத்துக்கான காப்புறுதியை, தேசிய காப்புறுதி நிதியத்தின் ஊடாக மாத்திரம் மேற்கொள்ளவேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளதாலேயே குழப்பம் ஏற்பட்டுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த கடந்த ஒக்ரோபர் மாதம், யாழில் வைத்து அரச உத்தியோகத்தர்களுக்கு மோட்டார் சைக்கிள்களை விற்பனை செய்திருந்தார். ஆண்களுக்கான மோட்டார் சைக்கிள் 50 ஆயிரம் ரூபாவுக்கும், பெண்களுக்கான மோட்டார் சைக்கிள் 45 ஆயிரம் ரூபாவுக்கும் விற்பனை செய்யப்பட்டிருந்தன.

இது தொடர்பிலான சுற்றறிக்கை, தேசிய வரவு–செலவுத் திட்டத் திணைக்களத்தினால் ஓகஸ்ட் மாதம் 22 ஆம் திகதி அனுப்பப்பட்டிருந்தது.

இதில் மோட்டார் சைக்கிலுக்கான காப்புறுதி பெறுவது தொடர்பில் எந்தவொரு விடயமும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. இதன் பின்னர் செப்ரெம்பர் மாதம் 30 ஆம் திகதி, குறித்த சுற்றறிக்கைக்கு மேலதிகமாக தேசிய வரவு–செலவுத் திட்ட திணைக்கள பணிப்பாளர் நாயகத்தினால் மேலும் ஒரு சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

அதில் மோட்டார் சைக்கிள்களுக்கு முழுமையான காப்புறுதி, தேசிய காப்புறுதி நிதியத்தின் மூலம் 'மாத்திரம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

இரண்டாவதாகவந்தசுற்றறிக்கை தமக்குத் தெரியப்படுத்தப்படவில்லை. யாழ்ப்பாணத்தில் கிளைகளைக் கொண்டிராத, தேசிய காப்புறுதி நிறுவனத்தினரிடம், வருடத்துக்கு தலா 5 ஆயிரம் ரூபா வீதம் முழுமையான காப்புறுதி பெற்றுக் கொள்ள வேண்டும் என்று தற்போது தான் தெரிவிக்கின்றனர். இவை முன்னரே தெரிந்திருந்தால், நாம் மோட்டார் சைக்கிளைப் பெற்றுக் கொண்டிருக்கமாட்டோம் என்று அரச உத்தியோகத்தர்கள் குறிப்பிடுகின்றனர்.

மோட்டார் சைக்கிளைப் பெற்றுக் கொண்ட அரச உத்தியோகத்தர்களுக்குக் கட்டம் கட்டமாகப் பதிவு செய்யப்பட்டமைக்கான புத்தகம் மற்றும் இலக்கத் தகடு என்பன வழங்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு பதிவு கிடைத்தவர்கள் வேறு தனியார் நிறுவனங்களில் காப்புறுதியைச் செய்துள்ளனர்.

தற்போது தேசிய காப்புறுதி நிறுவனத்தில் மாத்திரமே காப்புறுதி செய்ய வேண்டும் எனக் கோருவதால் தாம் பாதிப்பை எதிர்கொள்வதாக அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

மேலும், கடந்த சில தினங்களாக தேசிய காப்புறுதி நிறுவனத்தினர் யாழ்ப்பாணத்தில் வந்து பதிவுகளை மேற்கொண்டனர். பெரும்பான்மையான அரச உத்தியோகத்தர்கள் அதனைப் புறக்கணித்துள்ளனர். அவ்வாறு தேசிய காப்புறுதி நிறுவனத்தில் காப்புறுதியைப் பெற்றுக் கொள்ளாத உத்தியோகத்தர்களுக்கு வரி அனுமதிப் பத்திரம் வழங்கப்படாது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் அரச உத்தியோகத்தர்கள் மேலும் சிக்கல்களை எதிர்கொண்டுள்ளனர்.

ஜனாதிபதி வழங்கிய மோட்டார் சைக்கிள் உத்தியோகத்தர்களை ஒட்டு மொத்தமாக குழப்பத்திலேயே தள்ளி விட்டுள்ளது.

இதேவேளை– அரச உத்தியோகத்தர்களுக்கு மோட்டார் சைக்கிள் வழங்கப்படுவதற்கு முன்னரே சகல விடயங்களும் தெரியப்படுத்தப்பட்டே வழங்கப்பட்டதாக யாழ். மாவட்டச் செயலக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். அத்துடன் தேசிய வரவு – செலவுத் திட்டத் திணைக்கள சுற்றறிக்கையின் பிரகாரமே நடவடிக்கை மேற்கொண்டதாகவும் அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

(த–5–9)



# 300 பெண்களுக்கு கைவினைப் பயிற்சி

யாழ்ப்பாணம், டிசெ. 8
பெண்களைத் தலைமையாகக் கொண்ட குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் கரவெட்டி மற்றும் ஊரெழு பிரதேசத்தில் 300 இற்கும் மேற்பட்ட பெண்களுக்கு பனை சார் கைவினைப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதாக பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் பசுபதி சீவரெத்தினம் தெரிவித்தார்.


அவர் மேலும் கூறுகையில்;

யாழ். மாவட்டத்தில் பனைசார் கைவினைப் பயிற்சிகள் பெண்களை தலைமைத்துவமாகக் கொண்டவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

வடக்கில் இதுவரை 400 இற்கும் மேற்பட்டடோர் சிறுசுவடுகள் அமைப்பில் உள்வாங்கப்பட்டு அவர்களுக்கான பயிற்சிகள் மற்றும்தொழில்முயற்சிக்குத்தேவையான உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இதனால் பெண்கள் தமது தொழில் முயற்சியை அபிவிருத்தி செய்துள்ளதுடன் வருமானத்தையும் பெற்று வருகின்றனர்.

இதனடிப்படையில் கரவெட்டி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட 2 கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த 260 பேரும், ஊரெழு கிராமத்தில் 27 பேருக்கு மேற்பட்டவர்களும் பனை சார் கைவினைப் பயிற்சியை வழங்குமாறு கோரியுள்ளனர். இவர்களுக்கான பயிற்சிகள் இம்மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளன. பயிற்சிகள் போதனாசிரியர்கள் ஊடாக வழங்கப்பட்ட பின்னர் உபகரணங்கள் வழங்கப்படும். இவர்கள் மூலம் தயாரிக்கப்படும் கைவினைப் பொருள்களை பனை அபிவிருத்திச் சபை கொள்வனவு செய்து சந்தைப்படுத்துவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன என்று தெரிவித்தார்.

(த–14)



# சாளை மீன்கள் ஏராளம்

யாழ்ப்பாணம்,டிசெ.8
பாஷையூர் கடலில் மீனவர்களின் வலையில் கூடுதலாகச் சாளை மீன்கள் சிக்குவதால் தாம் நட்டமடைவதாக மீனவர்கள் தெரிவித்தனர். நேற்றுமுன்தினம் மீனவர்களின் வலையில் பெரும் எண்ணிக்கையில் சாளை மீன்கள் சிக்கிக் கொண்டன. நுகர்வோர் இந்தச் சாளை மீனில் அதிக நாட்டம் காட்டாத நிலையில் அது விலை கிலோ 10 ரூபாவாக விற்கப்பட்டது. சந்தையில் விற்பனை இன்றித் தேங்கிய சாளை மீனை வியாபாரிகள் தென்பகுதிக்கு அனுப்பும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

(த–17)

# யாழ்.இந்தியத் துணைத் தூதரகத்தால் சுன்னாகம் வாழ்வகத்துக்கு உதவிகள்

யாழ்ப்பாணம்.டிசெ.8
யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்தால் சுன்னாகம் வாழ்வகத்துக்கு ஒருதொகுதி உதவிப்பொருள்கள் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன. பெங்களூர்றோட்டறிக்கழகத்தின் அல்சூர் கிளை, யாழ்– நல்லூர் றோட்டறி கழகத்தின் ஊடாக வகத்துக்கென கையளிக்கப்பட்டுள்ளன.



நிகழ்வில் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதரகத்தின் பதில் துணைத் தூதர் தெட்சணாமூர்த்தி, வட மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன், அல்சூர் றோட்டறிக் கழக நிர்வாகிகள் சோம சுந்தரம், சந்திரசேகர் மற்றும் சென்னை 'சன் சிட்டி' றோட்டறிக் கழக றோற்றேரியன் தனசேகர், ராம் பிரசாத், நல்லூர் றோட்டறிக் கழக தலைவர் ரவின தாஸ், தூதரக அதிகாரி ராஜ கோபால் ஆகியோர் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இந்தஉதவிகள்வழங்கப்பட்டன. வடமாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரனால் இந்த உதவிப் பொருள்கள் கையளிக்கப்பட்டன. ஒரு சலவை இயந்திரம், மூன்று மடிக் கணினிகள், ப்ரெயில் எழுது பலகை உட்பட ஒரு தொகுதி பொருள்கள் வாழ்

(வ–14)

# 4.2 மில்லியன் லீற்றர் மதுபானத்தை யாழில் நுகர்ந்தனர் 'பெருங்குடி' மக்கள்

## ஜனவரி முதல் செப்ரெம்பர் வரை

யாழ்ப்பாணம், டிசெ. 8
யாழ்.மாவட்டத்தில் இந்த வருடம் செப்ரெம்பர் மாதம் வரையான காலப் பகுதியில் 4.2 மில்லியன் லீற்றர் சாராயம் மற்றும் பியரை மதுப்பிரியர்கள் குடித்துத் தீர்த்துள்ளதாக மதுவரித் திணைக்களத்தின் புள்ளி விவரத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

கடந்த வருடங்களுடன் ஒப்பிடுகையில் வருடாந்தம் இரு மடங்காகச் சாராயம் மற்றும் பியர் நுகரப்பட்டு வருகின்றன. 2012 ஆம் ஆண்டு ஒரு மில்லியன் லீற்றருக்கு மேற்பட்ட சாராயம் நுகரப்பட்டுள்ள நிலையில் 2013 ஆம் ஆண்டு இரு மடங்காக 2 மில்லியன் லீற்றருக்கு மேற்பட்ட சாராயம் நுகரப்பட்டுள்ளது.

இதேவேளை–2013 ஆம் ஆண்டு 4 மில்லியன் லீற்றருக்கு மேற்பட்ட பியர் நுகரப்பட்டுள்ளது. அத்துடன் 2013 ஆம் ஆண்டு 5.6 மில்லியன் லீற்றருக்கு மேற்பட்ட கள்ளும் நுகரப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் தற்போது மதுப் பிரியர்களின் தொகை அதிகரித்துள்ளதுடன் இளைஞர்களும் மதுவுக்கு அடிமையாகி வருவதாக மதுவரித் திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

(த–14)

# கருத்து

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தமிழ்த் தரப்பினரும் கூட அதிர்ச்சி கொடுப்பார்களா?

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வெளிப்படையாகவே ஒரு விடயத்தை கூறத் தொடங்கியிருக்கிறார். இந்தப் பதவியில் தாம் தொடர்ந்து இருந்தால் மட்டுமே உலக நீதிமன்றத்தின் முன் தாம் நிறுத்தப்பட்டு குற்றவாளியாக்கப்பட்டு மின்சார நாற்காலியில் அமர்த்தப்பட்டு தண்டிக்கப்படுவதற்கு உருவாக்கப்பட்டுள்ள சதித் திட்டத்திலிருந்து தாம் மீள முடியும் என்பதாக. முன்பும் கூட இம்மாதிரி குற்றச்சாட்டுக்களை அவர் வெளியிட்டதுண்டு.

போர்க் குற்றங்கள், மனித உரிமை மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பான விசாரணைகள் மனித உரிமைகள் சபையின் விசாரணையில் இருந்து வருவது என்னவோ உண்மைதான். ஆனால் ஜனாதிபதி ராஜபக்ஷ இன்னும் இரண்டு ஆண்டுகள் பதவியில் நீடிக்கக் கூடிய வாய்ப்பிருக்கும் நிலையில் முன்கூட்டியே தேர்தலை நடத்த முண்டியடித்துக் கொண்டு அவர் முன்னிற்பது பகிரங்கவிடயம். அவ்வாறு அவரே உருவாக்கிய சூழ்நிலையில் எதிர்த் தரப்பினர் ஒன்று சேர்ந்து பொது வேட்பாளர் ஒருவரை போட்டிக்கு நிறுத்தியிருப்பது அவ்வாறு முன்னிறுத்தப்பட்டுள்ளவர் வெற்றியீட்டும் பட்சத்தில் தாங்கள் மேற்கொள்ளவிருக்கும் செயற்பாடுகள் குறித்து அவர்கள் சில கொள்கைப் பிரகடனங்களையும் செய்துள்ளார்கள். குறிப்பாக நிறைவேற்று அதிகாரத்துக்கு முடிவு கட்டுவது, 18 ஆவது அரசமைப்பு திருத்தத்தை ஒழித்து ஜனாதிபதியானவர் எத்தனை தடவையாகிலும் பதவிக்காகப் போட்டியிடுவதை நிறுத்துவது 17 ஆவது திருத்தத்துக்கு மீண்டும் உயிர்ப்பளிப்பது இன்னும் இந்தத் திட்டங்களை 100 நாள்களுக்கு முடித்து வைப்பது போன்றவை.

தேர்தலை முன்கூட்டியே நடத்துவதற்கான சரியான காரணம் எதுவும் இன்னமும் அரசுத் தரப்பிலிருந்து வெளிவந்ததாகத் தெரியவில்லை. 18 ஆவது திருத்தம் ஒழிக்கப்படுமா? ஜனநாயக ஆட்சிமுறைக்கு வலுச் சேர்க்கும் 17 ஆவது திருத்தம் உயிர்ப்பிக்கப்படுமா என்பவை பற்றியும் அவர்கள் வாய் திறப்பதாக இல்லை. ஜனநாயகத்தின் வாயிலாகக் கருதப்படும். மக்கள் பிரதிநிதிகள் சபைக்கு சகல நிறைவேற்று அதிகாரங்களும் வழங்கப்படுவதற்கான முயற்சிகளும் காணப்படவில்லை. பொதுவில் தேர்தலையடுத்து சாவகாசமாக நிறைவேற்று அதிகாரம் ஒழிக்கப்படுவதற்கான முயற்சிகள் எடுக்கப்படும் என்பது போன்ற ஒரு தோற்றப்பாடு உருவாக்கப்பட்டுள்ளது - அவ்வளவே.


தேசிய பிரச்சினை குறித்துப் போட்டியில் குதித்துள்ள இரு தரப்புமே நழுவலான அறிவிப்புக்களையே விடுத்துக் கொண்டிருக்கின்றன.

இதற்கிடையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பொதுஎதிரணியுடன் ஒப்பந்தம் ஒன்றை செய்து கொண்டுள்ளதாக அரசுத் தரப் பினர் பரப்புரை மேற்கொண்டு சிங்கள மக்கள் மத்தியில் கிலேசத்தை உருவாக்க முயற்சிக்கி றார்கள்.

உண்மையில் நிலைமை என்னவென்றால் அரசு தரப்பில் உச்ச நிலையில் இருந்து அடிமட்டம் வரை அனைவருமே மைத்திரிபால சிறிசேனவின் கடைசி நேர அதிரடி நடவடிக்கையால் பெரிதும் அதிர்ச்சிக்குள்ளாகி திக்குமுக்காடி போயுள்ளார்கள். அதனால்தான் பலரும் பலவிதமாக கருத்துக்களை அந்தரப்பட்டு வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் கடைசி நேரத்தில் அதிர்ச்சியான அறிவிப்பு எதனையும் வெளியிடலாம் என்று தமிழ் மக்கள் எதிர்பார்ப்பதிலும் நியாயம் இருக்கவே செய்கிறது.

# பொதுபல சேனாவும் முஸ்லிம் மக்களும்



சேரலாதன்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மீண்டும் போட்டியிடும் மஹிந்த ராஜபக்ஷவுக்கு பொதுபல சேனா ஆதரவு வழங்குமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளமை எவருக்கும் வியப்பை ஏற்படுத்தவில்லை. பொதுபல சேனா அரசின் வளர்ப்புப் பிள்ளை என்பதால் அதனால் இத்தகையதொரு தீர்மானத்தையே எடுக்க முடியும்.

பொதுபல சேனா தீவிரமான சிங்கள பௌத்த வாதத்தை தன்னகத்தே கொண்டு செயற்பட்டு வருகின்றது. அதன் செயலாளரான கலகொட அத்தே ஞானசார தேரர் எத்தகைய கருத்துக்களையும் தெரிவிக்கும் பூரணமான சுதந்திரத்தைக் கொண்டிருக்கின்றார். அவரை எதிர்த்து எவருமே கேள்வி எழுப்பமுடியாததொரு நிலையும் காணப்படுகின்றது. சிறுபான்மை மக்களுக்கு உரிமைகளை வழங்குவதைக் கடுமையாக எதிர்க்கும் பொதுபலசேனா இனவெறியைக் கிளப்பும் பரப்புரைகளை பெரும்பான்மையின மக்களின் மத்தியில் மேற்கொண்டு வருகின்றது. அண்மைக்காலமாக இதன் இனவெறிப் பார்வை முஸ்லிம் மக்களின் பக்கம் திரும்பி நிற்பதைக் காணமுடிகின்றது.

முஸ்லிம் மக்கள் வட, கிழக்கில் மட்டுமல்லாது, தெற்கிலும் பரந்து வாழ்கின்றனர். பெருமளவு பள்ளிவாசல்கள் அங்கு காணப் படுவதுடன் அவர்களுக்குச் சொந்தமான வர்த்தக நிலையங்களும் ஏராளமாக உள்ளன. இதனால் சிங்கள, முஸ்லிம் மக்கள் காலம் காலமாக அன்னியோன்னியமாக வாழ்ந்து வந்துள்ளனர். ஆனால் பொதுபல சேனாவின் தூண்டுதலில் இடம்பெறும் முஸ்லிம் மக்களுக்கெதிரான சம்பவங்கள் அந்த மக்களிடையே அச்ச நிலையத் தோற்றுவித்துள்ளது. பல பள்ளிவாசல்கள் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டதுடன் சில அவை முன்பிருந்த இடங்களிலிருந்து அகற்றப்பட்டுள்ளன. வர்த்தக நிலையங்களும் தாக்குதல்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளன.

முஸ்லிம்கள், பெரும்பான்மை மக்கள் வாழும் இடங்களில் வர்த்தக நடவடிக்கைகளைத் தொடர முடியாத அளவுக்கு இடையூறுகள் விளைவிக்கப்பட்டன. இதன் உச்சக் கட்டமாகவே அளுத்கம, பேருவளை போன்ற இடங்களில் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றன. இத்தகைய சம்பவங்கள் இன்னமும் தொடரவே செய்கின்றன.

வன்முறையைத் தூண்டும் விதமாக கலகொட அத்தே ஞானசாரதேரர் உட்பட பொதுபலசேனாவைச் சேர்ந்தவர்கள் கூட்டங்களில் உரையாற்றியபோதிலும் அவர்களுக்கு எதிராக எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. பொலிஸார் அவர்களுக்கு ஆதரவாகச் செயற்படுவதுடன் குற்றம் புரிபவர்களைக் காப்பாற்றுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவுக்கு பொதுபலசேனா வழங்கப் போகும் ஆதரவு சிறுபான்மையின மக்களுக்கு எதிராகவே அமையப்போகின்றது. இதை முஸ்லிம் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகள் உணர்ந்து கொண்ட போதிலும் தமது மக்களின் எதிர்காலம் தொடர்பான சிந்தனை அற்றனவாகவே காணப்படுகின்றன. தற்போது ஜனாதிபதிக்கு ஆதரவு தெரிவித்து வரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அமைச்சர் அதாவுல்லா தலைமையிலான கட்சி, அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தலைமையிலான கட்சி என்பன எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எவருக்கு ஆதரவு என்பது தொடர்பான ஒரு தீர்க்கமான முடிவை எடுக்க வேண்டிய நிலையிலுள்ளன.

அதாவுல்லா ஜனாதிபதிக்கே தமது ஆதரவு எனக் கூறியுள்ளபோதிலும் இதையொரு இறுதியான முடிவென இப்போது கொள்ளமுடியாது. ஏனென்றால் இறுதி வேளையில் மக்களின் விருப்பத்துக்கு ஏற்ப இதில் மாற்றங்கள் ஏற்படலாம். அனேகமான முஸ்லிம் மக்களைப் பொறுத்தவரையில் பொதுபலசேனா ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்குவதை ஆதரிப்பதாகத் தெரியவில்லை.

தற்போதுள்ள நிலையில் முஸ்லிம்களுக்கு எதிரான மனப்போக்கை பொதுபலசேனா கைவிடுமெனவும் எதிர்பார்க்க முடியாது. சிலவேளை ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்தர் வெற்றி பெற்றுவிட்டால் பொதுபல சேனாவின் நடவடிக்கைகள் அதிகரிக்கவே செய்யும். இதனைக் கட்டுப்படுத்துவதற்கு ஜனாதிபதி உட்பட எவருமே முன்வரமாட்டார்கள்.

எதிரணி வேட்பாளரான மைத்திரிபால சிறிசேன கூட தாம் சிங்கள, பௌத்தத்தைக் காப்பாற்றப் போவதாகவே கூட்டங்களில் தெரிவித்து வருகின்றார். சிலவேளை வாக்குகளைப் பெறுவதற்காக அவர் இவ்வாறு கூறியிருக்கலாம். ஆனால் பெரும்பான்மையின மக்களின் மனங்களில் உள்ள சிறுபான்மையினருக்கு எதிரான எண்ணங்களை எவராலும் இலகுவாகத் துடைத்தெறிந்துவிட முடியாது.

இந்த நிலையில் பொதுபலசேனாவுடன் இணைந்து தேர்தலின்போது செயற்பட முடியுமா? என்பதை முஸ்லிம் மக்கள் தீர்மானித்துக் கொள்ள வேண்டும். என்னதான் நடந்தாலும் அவர்கள் இந்த மண்ணில்தான் தமது வாழ்நாளைக் கழிக்கப் போகின்றனர். முடிவெடுக்க வேண்டிய உரிமையும் அவர்களிடம் தான் உள்ளது.

கட்டுரை

# புதிய நாடாளுமன்ற பிரதமர் அரசுதான் இனப்பிரச்சினை தீர்வு தொடர்பில் பேசும்

## எதிரணி உடன்படிக்கையில் இது தேவையில்லை என்கின்றார் மனோ

நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின்னர் உருவாகப் போகின்ற புதிய நாடாளுமன்ற பிரதமர் ஆட்சி அரசுதான் தேசிய இனப்பிரச்சினை தொடர்பாக கவனம் செலுத்தும். ஆகவே, இப்போதைய எதிரணித் தேர்தல் உடன்படிக்கையில், தேசிய இனப்பிரச்சினை பற்றி பேசப்பட வேண்டியதில்லை என நாம் நினைக்கின்றோம்.

ஜனவரி மாதம் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் பொது எதிரணியை உருவாக்குவதிலும் அதன் மூலம் பொது வேட்பாளரை அடையாளம் கண்டு களமிறக்குவதிலும் முக்கிய பங்காற்றிய தமிழ்க் கட்சியான ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் உதயனுக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவரின் செவ்வியின் முக்கியமான விவரம் வருமாறு:-

**கேள்வி:** சமஷ்டி முறையை பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேன நிராகரித்துள்ளார். அத்துடன், அதிகாரப் பரவலாக்கலுக்கு எதிராக குரல் எழுப்பும் ஜாதிக ஹெல உறுமயவும் அவருக்கு ஆதரவு வழங்குவதற்கு முன்வந்துள்ளது. இந்நிலையில், புரிந்துணர்வு உடன்படிக்கையிலும் அரசியல் தீர்வு பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை. எனவே, எந்த அடிப்படையில் பொதுவேட்பாளருக்கு நிபந்தனையின்றி ஆதரவு வழங்குவதற்கு ஜனநாயக மக்கள் முன்னணி முன்வந்துள்ளது?

பதில்: எங்கள் ஆதரவு என்பது, 'கிரிடிக்கல்' ஆதரவு என்ற 'விமர்சனத்துடன் கூடிய ஆதரவு' என்பதாகும். நிபந்தனையற்ற ஆதரவு, நிபந்தனையுள்ள ஆதரவு, பகிரங்க உடன்படிக்கை, இரகசிய உடன்படிக்கை ஆகிய இந்த வார்த்தைகளில் எல்லாம் எனக்கு நம்பிக்கையில்லை. நிபந்தனை போட்டாலோ, உடன்படிக்கை செய்தாலோ, அவற்றையெல்லாம் இவர்கள் தூக்கி வீசிவிடுவார்கள். வேறு விடயங்கள் தொடர்பில் உடன்படிக்கை போடலாம். ஆனால், இனப்பிரச்சினை தொடர்பில் போடுவதில் பிரயோசனம் இல்லை. அதற்குரிய உள்நாட்டு, வெளிநாட்டு சூழல் ஏற்படவேண்டும். அவற்றை ஏற்படுத்த இடைவிடாமல் முயற்சிக்க வேண்டும்.

உண்மையை அப்பட்டமாகச் சொன்னால் இதுதான், இன்று தமிழரின் தலையெழுத்து. இதன் காரணம், தமிழீழ விடுதலை புலிகளின் ஆயுதப் போராட்ட தோல்வியின் பின்னர் 'ஈகுவேசன்ஸ்' என்று சொல்லக்கூடிய சமன்பாடுகள் மாறிவிட்டன. இது சிந்திப்பவருக்கு நன்கு புரிய வேண்டும்.

புலிகள் பலமாக இருந்த காலத்தில் பேச்சு நடத்தி ரணில் அரசை ஏறக்குறைய சமஷ்டித் தீர்வு வரைக்கும் இழுத்துக்கொண்டு வந்தார்கள். அது மறைந்த பாலசிங்கத்தின் மிகப்பெரும் சாதனை.



**இன்று நாம் சுழியோடி எதிர்நீச்சல் போட்டுக்கொண்டிருக்கின்றோம். கேள்வி கேட் பதும், குறை சொல்வதும் சுலபம். மாற்று யோசனை தருவதே கஷ்டம். வெற்றிபெற்றால், மைத்திரி ஓர் இடைக் கால ஆட்சியை அமைத்து, இடைக் கால ஜனாதிபதியாக இருக்கப் போகின்றார். 18ஆம் திருத்தத்தை அனுப்பி விட்டு, 17ஆம் திருத்தத்தைக் கொண்டு வந்து, நிறைவேற்று அதிகாரத்தை நாடாளுமன்றத்துக்கு வழங்கி விட்டு புதிய பொதுத் தேர்தலுக்குச் செல்வோம் என்பதுதான் எதிரணியின் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள கொள்கையாகும்.**

புலிகளுடன் நேரடிப் பேச்சு இல்லாவிட்டாலும் கூட, அன்றைய தேசிய அரசியலில் புலிகளின் அழுத்தம் என்ற வகிபாகம் காரணமாக, சந்திரிகா அரசு, 'பக்கேஜ்' என்ற தீர்வுத் திட்டத்தைக் கொண்டு வந்தது. இந்தத் திட்டத்தின் உள்ளடக்கம் ஒப்பீட்டளவில் முன்னேற்றகரமானது.

அதில் இந்நாடு ஒரு ஒற்றையாட்சி நாடு என்பது மாற்றப்பட்டு, இந்நாட்டை 'பிராந்தியங்களின் ஒன்றியம்' என்று குறிப்பிடப்படும் அளவுக்கு இருந்தது.

அதற்கு முன்னால், அதே புலிகளின் மற்றும் ஏனைய ஆயுதப் போராளி இயக்கங்களின் அழுத்தம் காரணமாகத்தான், ஜே.ஆர். ஜெயவர்த்தனவும், ராஜீவ் காந்தியும் 13ஆம் திருத்தத்தின் மூலம் இன்றைய மாகாண சபைகளைக் கொண்டு வந்தார்கள்.

இன்றைய தினத்தில் இருந்து கொண்டு கொஞ்சம் திரும்பிப் பாருங்கள். சமஷ்டிவரை வந்த ரணிலைத் தோற்கடித்து ராஜபக்ஷவை நாம்தான் ஆட்சிக்கு கொண்டு வந்தோம். சந்திரிகாவுக்குத் தேவையான பெரும்பான்மையை நாடாளுமன்றத்திலே தர நாம் மறுத்தோம். சந்திரிகாவின் நண்பர் நீலன், இந்தத் தீர்வுத் திட்டத்தைத் தயாரிப்பதில் முன்னணி வகித்த காரணத்தால்தான் கொல்லப்பட்டார் என்பது மேலதிக உண்மை.

13ஆம் திருத்த மாகாண சபை திட்டத்தை அன்று நாம் ஏற்றுக்கொள்ளவில்லை. இன்று, அதே திட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துங்கள் என்று ஏறக்குறைய மன்றாடுகிறோம். மாகாணசபைகளை ஏற்றுக் கொள்ள எமக்கும் கஷ்டமாக உள்ளது. ஆகவே, அதைத் திருத்தி அமையுங்கள் என்று ராஜீவுக்கு கடிதம் எழுதி, இந்திய அரசுடன் இராஜதந்திர அரசியல் செய்ய முயன்ற அமிர்தலிங்கமும் கொல்லப்பட்டார் என்பது மேலதிக உண்மை.

வரலாறு முழுக்க சந்தர்ப்பங்களைத் தவறவிட்டோம். புதிய சந்தர்ப்பங்களும் ஏற்பட உடனடி வாய்ப்பு இல்லை. ஆயுதப்போராட்டத் தோல்வி, அனைத்தையும் மாற்றிப் போட்டு விட்டது. புலிகளின் தோல்வியை, தமிழ் மக்களின் தோல்வியாக மட்டுமல்ல, முஸ்லிம் மக்களின் தோல்வியாகவும்கூட கருதி முழு நாட்டையும் சிங்கள - பௌத்த நாடாக மாற்றும் பெருந்தேசியவாத முயற்சியில் இந்த அரசு திட்டமிட்டு இறங்கிச் செயற்படுகின்றது.

சமஷ்டி முறையை மைத்திரி நிராகரித்துள்ளதும், ஜாதிக ஹெல உறுமய அவருக்கு ஆதரவளிப்பதும், புரிந்துணர்வு உடன்படிக்கையில் அரசியல் தீர்வு பற்றி எதுவும் குறிப்பிடப் படாததும் இதன் பிரதிபலிப்புகள்தான். இந்த வரலாற்றுப் பின்னணி மற்றும் நிகழ்கால அரசியல் யதார்த்த சூழலில்தான் இந்தத் தேர்தலை நாம் எதிர்கொள்கிறோம். இதில் மறைப்பதற்கு எதுவும் இல்லை. இந்தச் சூழ்நிலையில்தான் நாம் சுழியோடி எதிர்நீச்சல் போட்டுக்கொண்டிருக்கின்றோம். கேள்வி கேட்பதும், குறை சொல்வதும் சுலபம். மாற்று யோசனை தருவதே கஷ்டம். வெற்றிபெற்றால், மைத்திரி ஓர் இடைக்கால ஆட்சியை அமைத்து, இடைக் கால ஜனாதிபதியாகவே இருக்கப் போகின்றார். 18ஆம் திருத்தத்தை அனுப்பி விட்டு, 17ஆம் திருத்தத்தைக் கொண்டு வந்து, நிறைவேற்று அதிகாரத்தை நாடாளுமன்றத்துக்கு வழங்கி விட்டுப் புதிய பொதுத் தேர்தலுக்குச் செல்வோம் என்பதுதான் எதிரணியின் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள கொள்கையாகும்.

நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின்னர் உருவாகப் போகின்ற புதிய நாடாளுமன்ற பிரதமர் ஆட்சி அரசுதான் தேசிய இனப்பிரச்சினை தொடர்பாக கவனம் செலுத்தும். ஆகவே, இப்போதைய எதிரணித் தேர்தல் உடன்படிக்கையில், தேசிய இனப்பிர்ச்சினை பற்றி பேசப்பட வேண்டியதில்லை என நாம் நினைக்கின்றோம்.

புலிகளின் போராட்டத்தின் போது இழந்த சந்தர்ப்பங்களைப் பார்த்தோம். அதேவேளை, இன்று புலிகளின் போராட்டத்தின் மூலம் எமது பிரச்சினை சர்வதேசத்துக்கு போயுள்ளது. இது புலிகள் மூலம் நாம் பெற்றுள்ள அனுகூலமாகும்.

சர்வதேச சமூகம் இன்று, எமது தேசிய இனப்பிரச்சினைத் தீர்வுக்காக இந்நாட்டு வாயிலருகே கதவைத் தட்டிக்கொண்டு நிற்கிறது. உள்நாட்டு சூழலைத்தான் நாம் இப்போது உருவாக்கிக் கொண்டுள்ளோம்.

உண்மையில் ஒரு விடயம் இங்கே பார்க்கப்பட வேண்டும், மஹிந்த இந்த முறையும் வெற்றி பெற்றால், 2022ஆம் ஆண்டு வரை எட்டு வருடங்கள் ஆட்சியில் இருக்கப் போகிறார். இந்த எட்டு வருடங்களில் வடக்கு மாகாணத்தில், பெரும்பான்மை இராணுவ குடியேற்றங்களை ஏற்படுத்தி, அங்கு இனப்பரம்பலை மாற்றியமைக்க வேண்டும் என்பதுதான் இவர்களது பிரதான திட்டம். அப்படியானால், இனப்பிரச்சினை என்ற ஒன்று இருக்காது என்பது இவர்களது திட்டம். இதுதான் மஹிந்தவின் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டம். உடனடி ஆட்சி மாற்றத் தேவைக்கு இதுவும் ஒரு பிரதான காரணம்.

# கருத்து

## வாசகர் திருமுகம்

# இவர்களைக் கவனிக்க யாரும் இல்லையா?

கடந்த25வருடங்களாகசொத்து இழந்து, சுகம் இழந்து, வீடு வாசல் உட்பட பூர்வீக நிலபுலங்களை இழந்து ஏதிலிகளாக நிற்கும் வலி.வடக்கு மக்களை அவர்களது சொந்த நிலத்தில் மீளக் குடியமர்த்துவதில் யாரும் அக்கறையாகச் செயற்படுவதாகத் தெரியவில்லை. தேர்தல் காலங்களில் என்றாலும் அரசுடன் பேரம் பேசிப் பார்க்கலாம் அல்லவா? பொன் விளையும் பூமி என்று சொல்லப்படுகின்ற இந்தப் பூமியில் அனைவரும் விவசாயிகளும் கடற்றொழிலாளிகளுமே. ஒவ்வொரு ஆண்டும் விவசாய உற்பத்தி யில் வீடு, வாசல் கட்டுவதிலும் தமது பெண் பிள்ளைகளை கரை சேர்ப்பதற்கும் மட்டுமல்லாது அவர்களது அன்றாட ஜீவனோபாயத்துக்கும் அந்தப்பூமி கைகொடுத்து உதவியுள்ளது. ஆகவே தமிழர்களின் பிரதி நிதிகள் என்று கூறிக் கொள்ளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினரும் இதில் கூடிய சிரத்தை எடுத்து பாடுபட வேண்டும்.

அண்மையில் வசந்தம் தொலைக்காட்சியில் வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சி தலைவர் எஸ்.தவராசாவுடன் ஒரு நேர்காணலை ஊடக அறிவிப்பாளர் யோகராஜ் நடத்தினார். அதில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் குரும்பசிட்டிப் பெண்மணி அழுது புலம்பலுடன் தமது சொந்த ஊருக்கு எம்மை அனுப்பவில்லையே என்று பெரும் ஆதங்கத்துடன் கேட்டார். இதற்கு அவர் தமக்கு வாக்குப்பலம், ஆசனம் போதாது என்றும் முன்பொரு தடவை தமக்கு 9ஆசனங்கள் இருந்த போது தாம் பலத்தைப் பிரயோகித்ததாகவும் கூறினார். சரி இனிவரும் தேர்தல்களில் ஒரு தடவை அவர்களுக்கு அதிக ஆசனத்தைக். கொடுத்து என்றாலும் பார்க்கலாம் அல்லவா?

த.தே.கூ. எதிர்ப்பு அரசியல் நடத்துகிறவர்கள் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினரோ இணக்க அரசியல் நடத்துபவர்கள் ஆகையில் நிச்சயமாக இவர்களுக்கு ஓர் அளவு பலம் இருந்தால் அரசுடன் பேரம் பேசும் ஆற்றலுண்டு. எந்தவொரு சத்தியாலும் வெல்ல முடியாதிருந்த போரை வென்று ஆயுதப் போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வந்ததாக மார்தட்டும் ஜனாதிபதிக்கு இந்த விடயம் ஒரு சுமையல்ல. அத்துடன் நிறைவேற்று அதிகாரமும் நாடாளுமன்றில் அறுதிப் பலமும் இருக்கும். இவருக்கு நினைத்தால் ஒரு இரவில் கூட வலி. வடக்கு மக்களை தமது சொந்த ஊரில் குடியமர்த்த முடியும்.

மறுபுறத்தில் நாட்டில் புலிகள் இல்லை. பயங்கரவாதிகள் இல்லை என்று கூறுகின்றனர். பின்பு ஏன் எதற்கு மக்களைக் குடியமர அனுமதிக்க மறுக்கின்றனர்? 1983 ஆம் ஆண்டுக்கு முன்பு இருந்தது போல் நாடு தற்போது இருக்கிறது. எனவே 1983ஆம் ஆண்டு போல் படைத்தளங் களைச் சுருக்கிப் பலாலி விமானநிலையத்தையும் காங்கேசன் துறைமுகத்தையும் பாதுகாப்புடன் வைத்துக் கொண்டு சகல இடங்களையும் விடுவித்து மக்களை மீளக்குடியமர்த்தலாம் அல்லவா? முதலில் இவைகளைச் செய்து விட்டு அதாவது அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்த்து விட்டுப் பின்னர் அரசியல்பேசுவதும் அதிகாரங்களைக் கேட்பதும் தான் சாலப் பொருத்தமாகும்.

இதற்கான சிலவழிகளையும் கூறலாம் என நினைக்கிறேன்.

1.ஒரு ஜனநாயக நாட்டிலே சோஷலிஸக் குடியரசிலே, இன்னமும் ஒரு பகுதியில் மக்கள் குடியமர்த்தப்படவில்லையானால் அங்கே இயல்புநிலை திரும்பவில்லை என்பது அர்த்தம். இயல்புநிலை திரும்பாத ஓர் இடத்தில் தேர்தல் வைப்பது அவ்வளவு பொருத்தமாக இருக்குமெனத் தெரியவில்லை. ஆகவே இந்தத் தேர்தலை தமிழ் மக்கள் சார்பாக யாழ்.மாவட்டத்திலாவது பகிஷ்கரிக்கலாம் அல்லவா?

2.மாவட்ட சுதந்திரக் கட்சி அமைப்பாளர் இ.அங்கஜனோ அல்லது ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினரோ, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரோ ஜனாதிபதி வேட்பாளருக்கு நீங்கள் இன்ன மாதிரி செய்தால் தான் எமதும் எமது மக்களதும் ஆதரவு உங்களுக்குண்டு என்று ஒரு யோசனை முன் வைக்கலாம் அல்லவா?

3.தேர்தலைப் பகிஷ்கரிக்கும் போது நிச்சயமாக ஐ.நா.மற்றும் இதர நாடுகளும் இதைக் கவனத்தில் கொள்ளும் அல்லவா?

4.த.தே.கூ.,ஈ.ம.ஜ.க.,அங்கஜன் போன்றவர்கள் இந்த வலி. வடக்கு மக்கள் விடயத்தில் என்றாவது ஒற்றுமையாக இருந்து அரசுக்கு அழுத்தம் கொடுக்கலாம் அல்லவா? தேர்தல் என்றதும் யாரை ஆதரிக்கலாம் யாரை வெற்றிபெறச் செய்யலாம் என்பதை விடுத்து யார் காலிலும் விழுந்தாவது அந்த மக்களை மீளக்குடிய மர்த்துவதில் கவனம் செலுத்துங்கள்.

*சிவஸ்ரீ.இராம.ஸ்ரீதரக்குருக்கள்.*
*குளக்கட்டு, விநாயகர் தேவஸ்தான பிரதம குரு.*

### கேலிச் சித்திரம்




நன்றி: மவ்பிம

## மீண்டும் வந்த நாவலன்

கடந்த சில வாரங்களாக நாவலர் விழா வடக்கு – கிழக்குப் பகுதிகளில் அனேகமாக எல்லா இடங்களிலும் கொண்டாடப்பட்டு வருகின்றது. குறிப்பாகப் பாடசாலைகளில் நாவலர் உருவச்சிலைகள் நிறுவப்பட்டுத் திறக்கப்படுகின்றன.

சைவத்தையும் தமிழையும் காக்கப் பாடுபட்டவர் நாவலர் என்பது அனைவருக்கும் தெரியும். ஆங்கிலேயர்கள் இலங்கையைத் தமது குடியேற்ற நாடாக ஆக்கிரமித்து வைத்திருந்தபோது தமிழர்கள் முடங்கிப் போயிருந்தனர். செய்வதறியாது விழிபிதுங்கிப் போயிருந்தனர். எல்லாவற்றையும் இழந்துவிட்டோம் என்று வாளாவிருந்தனர்.

நாவலர் அவர்களே அந்த நிலையில் இருந்து மீட்டார். ஆங்கிலேய ஏகாதிபத்தியத்துக்கு எதிராக சைவ மக்களை அணி திரட்டினார். அவர்களுக்கு முழு அளவில் தைரியம் ஊட்டினார். குட்டக்குட்டக் குனிபவன் மடையன் என்பதைப் புரிய வைத்தார். ஆங்கிலேயர்களுக்கு எதிராகவும் அவர்கள் பரப்பிய மதத்துக்கு எதிராகவும் சுதேசிகளிடம் ஒரு ஓர்மத்தைப் பரப்பினார். சைவத்தையும் தமிழையும் வீறுகொண்டு எழவைத்தார்.

நாவலர் ஆங்கிலேயர்களுடன் நட்பாக இருந்தவர்தான். அவர்களிடமிருந்து கற்றுக்கொண்டவர்தான். அவர்களுக்குக் கற்பித்தவர்தான். ஆனால், சுயத்தை இழக்காதவர். தன் மக்களும் சுயத்தை இழந்துவிடக்கூடாது என்று விரும்பியவர். தமிழர்கள் சுயத்தை இழந்துவிடக்கூடாது என்று போராடியவர். முடங்கிக் கிடந்த தமிழர்களை முழுத் திமிரோடு மீண்டெழ வைத்தவர். சைவத்தையும் தமிழையும் ஒருங்கிணைத்தவர். அடிப்படையில் ஆங்கிலேயர்களுக்கு எதிரான அகிம்சைப் போராளி அவர்.

சூரியன் அஸ்தமிக்காத பேரரசை எதிர்த்துப் போராடும் மனத் துணிவையும் வல்லமையையும் அவர் கொண்டிருந்தார். அதுவே ஈழத் தமிழர்களின் ஆன்மாவாகப் பின்னாள்களில் பரிமளித்தது எனலாம். துரதிர்ஷ்டவசமாகப் நாவலருக்குப் பின் வந்த காலங்களில் அவரது பணியை முன்னெடுக்கத் தக்க வீரியமுள்ள தமிழன் எவரும் இந்த அவனியில் அவதரிக்கவில்லை எனலாம்.

காலப்போக்கில் போராட்டங்கள் வன்முறை வடிவத்தை எடுத்துக்கொண்டபோது நாவலரைத் தமிழ்ச் சமூகம் மெல்ல மெல்ல மறந்துபோனது. இப்போது மீண்டும் தமிழ்ச் சமூகம் அவரைத் தேடுகின்றது. அவரது உருவச் சிலைகளை புதிதாகப் பாடசாலைகளில் நிறுவுகிறார்கள். மாணவர்களுக்கு நாவலரை அறிமுகப்படுத்துவதன் மூலம் சைவத்தையும் தமிழையும் மீண்டும் வளமூட்டப்பார்க்கிறார்கள். முடங்கிக் கிடக்கும் தமிழர்களைத் தட்டி எழுப்பப் பார்க்கிறார்கள். தெம்பூட்ட எத்தனிக்கிறார்கள்.

ஏன்? பௌத்தத்தை எதிர்த்துப்போராடவும் சிங்கள பௌத்த ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போராடவும் இங்கு சக்திமிக்க ஒரு நாவலன் இல்லை என்பது தான் காரணம். தமிழரின் பண்பாட்டையும் மொழியையும் சிதைக்கும் பௌத்தத்தை அதனைப் போற்றிப் பாதுகாக்கும் ஆட்சிகளை எதிர்த்து நிற்க ஒரு மனிதன் உருவாகவில்லை; அல்லது உருவாக்கப்படவில்லை. எனவேதான் நாவலனை மீண்டும் திருஉருவமாக நிலைநிறுத்துகிறார்கள்.

தமிழர்கள் புரிந்துகொண்டு மீண்டும் எழுச்சிபெற வேண்டும்.

பத்தி எழுத்து

# பள்ளிவாசல்களின் பாதுகாவலனாக நான் இருப்பேன்

## அனைத்து மக்களினதும் மதச் சுதந்திரத்தை பாதுகாப்பேன் என்றும் மைத்திரிபால உறுதி



கொழும்பு, டிசெ.8
ஜனவரி 8ஆம் திகதி ஸ்தாபிக்கப்படும் அரசானது அனைத்து மதங்களுக்கும் சம உரிமை வழங்குவதுடன், அனைத்து மக்களினதும் மதச் சுதந்திரத்தையும் பாதுகாக்கும் என்றும் எதிரணி யின் பொதுவேட்பாளர் மைத்திரி பால சிறிசேன நேற்று சூளுரைத்தார்.
அதேவேளை, பள்ளிவாசல்கள் மீதான தாக்குதல்களைத் தடுத்து நிறுத்தி அந்தப் பள்ளிவாசல்களின் பாதுகாவலனாக நான் இருப்பேன் எனவும் அவர் உறுதியளித்தார்.
கொழும்பு தெவட்டகஹ பள்ளிவாசலில் மைத்திரிபால சிறிசேன வின் வெற்றிக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விசேட 'துஆ' பிரார்த்தனையின் பின்னர் கருத்துத் தெரிவித்தபோதே மேற்கண்டவாறு அவர் கூறினார்.
அவர் அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,
"எதிர்வரும் ஜனவரி 8ஆம் திகதி அனைத்து இன மக்களினதும் ஆதரவுடன் தான் ஜனாதிபதியாவது நிச்சயம். இந்த நாட்டில் ஏற்பட்டுள்ள மதங்களுக்கிடையிலான முறுகல் நிலையை இனி நாட்டில் தொடரவிடமாட்டேன். அனைத்து மதங்களுக்கும் சம உரிமை வழங்கி நாட்டில் மதச் சுதந்திரத்தைப் பாதுகாப்பேன்" – என்றார்.

ப 1 விரிவு

அதேவேளை, அங்கு கலந்து கொண்ட முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ராஜித சேனாரத்ன கருத்துத் தெரிவிக்கும்போது,
"போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டாலும் சமாதானம் நிலை நாட்டப்படவில்லை. மதங்களுக்கிடையிலான புரிந்துணர்வு, ஒற்றுமை போன்றன ஏற்படுத்துவதில் அரசு தோல்வியையே கண்டுள்ளது." – என்று குறிப்பிட்டார். (ற)

# அரசுக்கெதிரான சதிக்கு அமைச்சர்களே காரணம்

## அரசின் நடவடிக்கைகளால் அவர்கள் அதிருப்தி; சம்பிக்க தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.8
அரச அமைச்சர்களே அரசுக்கு எதிரான தொழிற்சங்க மற்றும் பணிப் புறக்கணிப்புப் போராட்டங்களுக்கு காரணம் என ஜாதிக ஹெல உறுமயவின் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.
"அரசின் நிதி ஒதுக்கீடு காரணமாக அதிருப்தியடைந்துள்ளதன் காரணமாகவே அவர்கள் இவ்வாறு செயற்படுகின்றனர். தங்களுடைய அமைச்சுகளின் நாளாந்த நடவடிக்கைகளுக்கு போதிய நிதி ஒதுக்கப்படாத நிலையில் அவர்கள் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர்" –என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–
"வருடத்தின் முதல் மூன்று மாதங்களுக்கு அமைச்சுகளுக்கு நிதி வழங்கப்படுவதில்லை. இறுதி மூன்று மாதங்களிலும் இதே நிலைதான், வருடத்தின் ஆறு மாதங்களில் அவர்களுக்கு தேவையான நிதி கிடைப்பதில்லை,
ஒரு சிலரை தவிர பெரும்பான்மையான அமைச்சர்கள் அதிருப்தியடைந்துள்ளனர். அவர்களே தொழிற்சங்க போராட்டத்தில் ஈடுபடுகின்றனர். அரசுக்கு எதிரான சதி அதற்குள்ளிருந்தே வருகின்றது. அரசு நாட்டை ஆளும் விதமே இதற்குக் காரணம்.
அரசுக்கு சர்வதேச சதிகள் குறித்து பேசுவதற்கு அருகதையில்லை. அது முற்றாக வெளிவிவகார அமைச்சையும், வெளிவிவகார சேவையையும் சீரழித்துள்ளது. இன்று வெளிவிவகார அமைச்சை நடத்துபவர் யார்?. அவருக்கு சட்டவிரோத நடவடிக்கைகள் மாத்திரம் தெரியும்"– என்று தெரிவித்துள்ளார்.
அரசின் அமைச்சரவையில் இடம்பெற்றிருந்த சம்பிக்க, அண்மையில் தமது பதவியில் இருந்து விலகியிருந்தார். (ற)

# தேர்தல் செலவுகள் பல பில்லியன்களை தாண்டும்

கொழும்பு, டிசெ.8
எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலுக்காக பொதுமக்களின் பல பில்லியன் ரூபா நிதி செலவிடப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.
தேர்தல்கள் திணைக்கள மதிப்பீட்டின்படி ஜனாதிபதி தேர்தலுக்காக 2.5 பில்லியன் ரூபா நிதி செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. எனினும் திறைசேரியின் மதிப்பீட்டின்படி திணைக்களங்கள் மற்றும் மறைமுக செலவுகளை சேர்த்து 10.5 பில்லியன் ரூபா நிதி செலவாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
அலரி மாளிகையில் நாள் தோறும் நடத்தப்படும் அரச சேவையாளர்களுக்கான விருந்துபசாரங்களுக்காக 750 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என்றும், அதனை தவிர தேர்தல் வாக்கெண்ணும் பணிகளின் போது மாத்திரம் 1.5 பில்லியன் ரூபா செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற)

# கோப்புகள் விவகாரத்தில் மஹிந்த அடித்தார் 'பல்டி'

கொழும்பு, டிசெ. 08
கோப்புகள் குறித்து நான் கூறியதை ஊடகங்கள் தவறாகப் புரிந்து கொண்டு செய்தி வெளியிட்டு விட்டன என்று 'பல்டி' அடித்துள்ளார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.
அலரி மாளிகையில் ஊடகங்களின் ஆசிரியர்கள் மற்றும் நிர்வாகிகள் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அங்கு "அமைச்சர்களால் அமைச்சரவை கூட்டத்துக்கு அனுப்பி வைக்கப்படும் கோப்புகள் (அமைச்சரவைப் பத்திரம்) குறித்தே நான் அன்று கூறியிருந்தேன். அமைச்சரவைப் பத்திர மொன்றை வெளியிட முடியாது தானே. அவை இரகசியமானவைதானே. நான் சொன்னதை ஊடகங்கள் தவறாக விளங்கி வெளியிட்டன. எனக்கு ஒரு தொலைபேசி அழைப்பு மேற்கொண்டு இதைப் பற்றி விசாரித்திருந்தால் விளக்கம் கொடுத்திருப்பேன்" – என்று புதிய விளக்கம் கூறியுள்ளார் அவர்.
ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டு, மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட அமைச்சர்கள் எதிரணிக்குத் தாவியிருந்தனர். அந்தச் சந்தர்ப்பத்தில், அனுராதபுரத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றியிருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, "அரசில் இருந்து விலகிச் சென்ற அமைச்சர்களின் கோப்புகள் என்னிடம் உள்ளன. ஆனால் நான் அவற்றைப் பயன்படுத்தமாட்டேன்"– என்று குறிப்பிட்டிருந்தார். இந்த விவகாரம் கடந்த இரண்டு வாரங்களாக அரசியல் மேடைகளில் கடும் சர்ச்சையை உருவாக்கியிருந்தது. இந்தநிலையிலேயே ஊடக ஆசிரியர்களுடனான சந்திப்பில் அதற்கு புதிய விளக்கம் கொடுத்தார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. (ற–5)

# சொத்து விவரங்களை ஒப்படைக்க உத்தரவு

*வேட்பாளர்களுக்கு தேர்தல் ஆணையாளர் பிறப்பிப்பு*

கொழும்பு, டிசெ.8
ஜனாதிபதி வேட்பாளர்கள் தமது சொத்து விவரங்களை சமர்ப்பிக்க வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளார் தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய.
அதேவேளை, எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலுக்காக 18 வேட்பாளர்களின் சார்பில் கட்டுப்பணம் செலுத்தப்பட்டுள்ளது என்று பிரதித் தேர்தல் ஆணையாளர் எம்.எம். மொஹமட் தெரிவித்துள்ளார். சொத்து விவரங்கள் ஒப்படைக்க வேண்டியது கட்டாயமாக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ற)

# பொய்யுரைக்கின்றார் அமைச்சர் வீரக்கோன்

## அமெரிக்க தூதரகம் மறுப்பு

கொழும்பு, டிசெ. 8
அமைச்சர் குணரத்ன வீரக்கோன் பொய்யுரைப்பதாக அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது. அமெரிக்கத் தூதரகம் தொடர்பில் தவறான புரிதல்களையே அவர்கள் கொண்டிருப்பதையே இது எடுத்துக் காட்டுவதாகத் தெரிவித்துள்ளனர்.
'அமைச்சர் குணரத்ன வீரக்கோனுக்கு, அமெரிக்கத் தூதரகம் எந்தவொரு சலுகைகளையோ, லஞ்சத்தையோ வழங்க முற்படவில்லை' என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது.
அரன்வெல பகுதியில் நடந்த கூட்டம் ஒன்றில் உரையாற்றிய மீள்குடியேற்ற அமைச்சர் குணரத்ன வீரக்கோன், 'அமெரிக்கத் தூதுவர் என்னைச் சந்தித்தார். திறமைமிக்க அமைச்சர் என்றும், பணிகளைத் திறமையாக செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.
எனக்கும் எனது குடும்பத்தினருக்கும் அமெரிக்காவில் கிறீன் கார்ட் பெற்றுத்தருவதாக அவர் கூறினார். அமெரிக்காவில் வீடு ஒன்றைப் பெற்றுத் தருவதாகவும், எனது பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில் கிடைக்க ஏற்பாடு செய்வதாகவும் அவர் கூறினார்.
அவர் இதன் மூலம் லஞ்சம் கொடுத்து என்னை வாங்கப் பார்க்கின்றார்' என்று அமைச்சர் குறிப்பிட்டிருந்தார்.
இந்தக் குற்றச்சாட்டை அமெரிக்கத் தூதரகம் மறுத்துள்ளது. 'ஐ.நா. பதவியை ஏற்பதற்காக, இலங்கையில் இருந்து புறப்பட்டுச் சென்ற, முன்னாள் அமெரிக்கத் தூதுவர் மிச்செல் ஜேசிசன் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு அடிப்படையற்றது.
இலங்கை அதிகாரிகளுடனான எமது பேச்சுக்கள் குறித்து அடிப்படையில் தவறான புரிதலை கொண்டிருக்கிறார்கள் என்பதையே இது பிரதிபலிக்கிறது. இலங்கை தொடர்பான எமது கொள்கை, அமெரிக்காவின் அரசியல்பொருளாதார முறைக்கேற்பவே கையாளப்படுகிறது' என்று தெரிவித்துள்ளது. (த–5)

# ஆளும் தரப்பினரால் தேர்தல் விதிமீறல்கள்

## தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் சுட்டிக்காட்டு

கொழும்பு, டிசெ.8
ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் தேர்தல் விதி மீறல் சம்பவங்கள் அதிகளவில் நடந்து வருகின்றன என்று தேர்தல்கண்காணிப்பு அமைப்புக்கள் குற்றம் சுமத்தியுள்ளன.
ஆளும் கட்சியினரே இவ்வாறு விதி மீறல்களில் ஈடுபட்டு வருகின்றனர் என்றும் அந்த அமைப்புகள் கூறுகின்றன. சட்டவிரோதமான முறையில் நியமனங்கள், பதவி உயர்வுகள், இடமாற்ற உத்தரவுகள் உள்ளிட்ட பல்வேறு சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற)

# கோரிக்கையை கூறமுடியாது

## அமைச்சர் ரிஷாத் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.8

சொல்ல முடியாத கோரிக்கைகளுடன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்துள்ளனர் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் உயர் பீட உறுப்பினர்கள்.

இந்தச் சந்திப்பு நேற்றுமுன்தினம் நடைபெற்றுள்ளது.

குறித்த சந்திப்புத் தொடர்பில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் ரிஷாத் பதியுதீனைத் தொடர்பு கொண்டு கேட்டபோது–

நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி மஹிந்தவுக்கா அல்லது பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேனாவுக்கா அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆதரவை வழங்கவுள்ளது என்பது தொடர்பில் முஸ்லிம் சமூகத்தினர் மட்டுமன்றி அனைவரும் ஆர்வத்துடன் உள்ளனர்.

இந்த நிலையில் எமது தரப்பு சில கோரிக்கைகளுடன் மஹிந்தவை சந்தித்திருந்தது. அந்தக் கோரிக்கைகளுக்கு சரியான பதில் அரசிடம் இருந்து வரும் வரை கோரிக்கைகள் என்ன என்பது தொடர்பாக ஊடகங்களுக்கு கூறமுடியாது.

இன்று கூட நாம் ஜனாதிபதியைச் சந்தித்து கலந்தாலோசிக்கவுள்ளோம். அதன் பின்னர் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் ஆதரவு யாருக்கு என்பதில் தீர்மானம் எடுக்கப்படும் எனத் தெரிவித்தார். (த–10)





# மீண்டும் மஹிந்தவே ஜனாதிபதியாவார்

## கேரளாவில் கூறினார் பிரபா கணேசன்

திருவனந்தபுரம், டிசெ.8

பல லட்சம் மக்களின் வாக்குகளைப் பெற்று மீண்டும் மஹிந்த ராஜபக்ஷவே ஜனாதிபதியாக வருவார். கடந்த ஆட்சிக் காலங்களில் நாட்டில் ஏற்பட்ட அபிவிருத்திகளை மக்கள் மறந்துவிடமாட்டார்கள். யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பதில் மக்கள் உறுதியாகவுள்ளனர் என்று கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பிரபா கணேசன் நேற்றுக் கேரளாவில் தெரிவித்தார்.

கேரளாவில் உள்ள சுவாமிசுனில் தாஸ்ஜி ஆச்சிரமத்துக்கு நேற்று சென்றிருந்த பிரபா கணேசன் தமிழக ஊடகவியலாளர்களுடன் சந்திப்பு ஒன்றை மேற்கொண்டபோது இதனைத் தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர்களின் கேள்விக்குப் பதிலளித்த அவர் மேலும் தெரிவிக்கும் போது:–

இலங்கையில் தற்போது ஜனாதிபதி தேர்தலுக்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 30 லட்சம் தமிழர்களில் 16 லட்சம் தமிழர்கள் இந்திய வம்சாவளித் தமிழர்களாக உள்ளனர். இவர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட தொழில் வாய்ப்புக்கள், பிரதேச அபிவிருத்திகள், வர்த்தக அபிவிருத்திகள் என்பவற்றை மறந்து விடமாட்டார்கள். நூற்றுக்கு நூறுவீதமான இந்திய வம்சாவளித் தமிழர்கள் மஹிந்தவுக்கு வாக்களிக்கவேண்டும் என்னும் உறுதிப்பாட்டில் உள்ளனர்.

மூன்றாவது தடவையாகவும் ஜனாதிபதியாக வந்தால் தமிழ் மக்களுக்கு தீர்வு கிடைக்குமா என மக்கள் அச்சப்படத் தேவையில்லை. ஏனெனில் கடந்த அரசியலில் ஹெல உறுமய என்ற கட்சி பிரிவினைவாதத்தை ஏற்படுத்துவதில் முனைப்பாக இருந்தது. தற்போது அந்தக் கட்சி பிரிந்துள்ளதால் இனி வடக்கு–கிழக்கு தமிழ் மக்களுடன் பேச்சு நடத்தித் தீர்வைப் பெற்றுக் கொடுக்க வாய்ப்பாக இருக்கும். இனி அந்தக் கட்சி ஒருபோதும் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது.

தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு இது சரியான சந்தர்ப்பம். விடுதலைப் புலிகளுக்குப் பல சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டன. ஆனால் அவர்கள் எதையும் கேட்பதாக இல்லை. போராடித்தான் தீர்வைப் பெற முடியும் என்ற பிடிவாதக் குணத்தால் மீண்டும் மீண்டும் போராட்டத்தை நடத்தி இன்று இல்லாமல் போய்விட்டார்கள். தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் வடக்கு–கிழக்கில் உள்ள தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்றுத் தருவதன் ஊடாகத் தாம் கேட்கின்ற இராணுவப் பிரசன்னத்தையும் வேறு கோரிக்கைகளையும் தேர்தலுக்குப் பின்னர் பெற்றுக்கொள்ள முடியும். ஆனால் அவர்கள் தமக்குள் ஒரு அரசியலை நடத்த நினைக்கிறார்கள்.

மீனவர்கள் எல்லை தாண்டி மீன்பிடிப்பதை தவிர்ப்பதற்கு மத்திய அரசால் கடல் எல்லைகளில் சமிக்ஞை விளக்குகளைப் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கது–என்றார். (த–14)



# தனியொரு குடும்பம் நாட்டைச் சீரழிக்கிறது

## ஐ.தே.க எம்.பி. தெவரப்பெரும

கொழும்பு, டிசெ. 8

தனியொரு குடும்பம் நாட்டை சீரழித்து வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பாலித தெவரப்பெரும தெரிவித்துள்ளார்.

நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்;

இலங்கையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் உள்நாட்டுப் போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதை நாங்கள் ஏற்றுக் கொள்கின்றோம். அதனை நாங்கள் மறுக்கவில்லை. எனினும் நாட்டின் சட்டம், ஒழுங்கு, கல்வித்துறை, ஒழுக்கவிழுமியங்கள் எனப் பலவும் சீரழிந்துள்ளன.

உள்நாட்டுப் போரை இல்லாதொழித்ததாக மார்தட்டும் அரசு நாட்டில் சட்டம் மற்றும் ஒழுங்கை நிலைநாட்ட முனைப்புக் காட்டத் தவறியுள்ளது. ஒரு குடும்பம் ஒன்றிணைந்து இந்த நாட்டை அழிவுப் பாதைக்கு நகர்த்தியுள்ளது என்பதே உண்மை. இந்த நிலையில் மாற்றமொன்று அவசியம்–என்றார். (த–10)

# மஹிந்தவின் ‘கட்அவுட்’கள் அகற்றப்படாவிடின் வழக்கு

## சட்டத்தரணிகள் சங்கம் அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 8

கொழும்பு நகர எல்லைக்குள் காட்சிப்படுத்தப்பட்டுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தேர்தல் பரப்புரைக் கட்அவுட்களை இன்று திங்கட்கிழமைக்குள் அகற்றத் தவறும் பட்சத்தில் கொழும்பு மாநகர மேயர் முஸம்மிலுக்கு எதிராக வழக்கு தொடரத் தீர்மானித்துள்ளதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் அறிவித்துள்ளது.

ஜனாதிபதி தேர்தல் பரப்புரைகளை முன்னெடுக்கும் முகமாக கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் காட்சிப்படுத்தப்பட்டுள்ள கட்அவுட்களை அகற்றுமாறு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கொழும்பு மாநகர மேயர் முஸம்மிலிடம் ஏற்கனவே கோரிக்கை விடுத்துள்ளதுடன் இது தொடர்பான முறைப்பாட்டையும் கையளித்திருந்தது.

கொழும்பு மாநகர எல்லைக்குள் மட்டும் சுமார் ஆயிரத்து 800 பனர்கள் மற்றும் கட் அவுட்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதாகவும், இது தேர்தல் விதிகளை மீறும் செயல் எனவும் மேயரிடம் சட்டத்தரணிகள் சங்கத்தினர் சுட்டிக்காட்டியிருந்தனர்.

இதற்கு எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்படாத நிலையில் இன்று திங்கட்கிழமைக்குள் கட்அவுட்கள் அகற்றப்படா விட்டால் மேயருக்கு எதிராக வழக்குத் தொடரவுள்ளதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது. (த–10)

# உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்தவரே மைத்திரிபால

## மஹிந்தவுக்கே தமது ஆதரவு என்கின்றனர் ம.வி.மு. மூத்த உறுப்பினர்கள்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்கவுள்ளதாக 1971ஆம் ஆண்டு மக்கள் விடுதலை முன்னணியின் போராட்டத்தில் கலந்து கொண்டோர் அமைப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பிலான ஊடகவியலாளர் மாநாடு கடந்த புதன்கிழமை இலங்கை மன்றக் கல்லூரியில் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் நெல்ஸன் எதிரிசிங்க தலைமையில் நடைபெற்றது. இதன் போதே மேற்கண்டவாறு அறிவிக்கப்பட்டது.

ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்து தெரிவித்த அமைப்பின் உயர்பீட உறுப்பினர் சந்திரமோகன், “1971 ஆம் ஆண்டு மக்கள் விடுதலை முன்னணியின் போராட்டத்தில் கலந்து கொண்ட கட்சிக்காக பல தியாகங்களைச் செய்துள்ளோம். ஆனால் இன்று இந்தக் கட்சி திசை மாறிச் செல்கின்றது. இதனை கட்சியின் மூத்த உறுப்பினர்கள் என்ற ரீதியில் எம்மால் அனுமதிக்க முடியாது.

கடந்த இரு தடவைகள் போன்றல்லாது தமிழ் மக்கள் இந்த முறை நன்கு சிந்தித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவளிக்க வேண்டும்.

வயது சென்ற வயோதிபர்கள் இப்போது ஏன் இங்கு வரவேண்டும்? எதற்காக இப்படி கருத்துகள் வெளியிட வேண்டும்? என்று நீங்கள் நினைக்கலாம். பிள்ளைகள் வழி தவறிச் செல்லும் போது எந்தவொரு பெற்றோராலும் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. பல போராட்டங்களுக்கும் பலரின் உயிர்த் தியாகங்களுக்கும் மத்தியில் கட்டியெழுப்பிய மக்கள் விடுதலை முன்னணியை பாதுகாக்க வேண்டியது எமது பொறுப்பும் கடமையுமாகும்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா எப்போதும் கொள்கையில் உறுதியுடன் இருப்பவர். அவர் எப்போதும் சிந்தித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாக செயற்பட்டு வருபவர். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்குமிடையில் உள்ள நல்லுறவைப் பயன்படுத்தி நமது பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள முடியும்.

உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்த மைத்திரிபால சிறிசேனவால் ஒரு போதும் ஜனாதிபதியாக வரமுடியாது. ரணில் விக்கிரமசிங்க, சந்திரிகா, கரு ஜெயசூரிய, சஜித் இவர்கள் எல்லோரும் வங்குரோத்து அரசியலைச் செய்து வரும் பச்சோந்திகள். இவர்களால் இந்தத் தேர்தலில் ஒருபோதும் வெற்றியீட்ட முடியாது”– என்று தெரிவித்தார். (ற–10)

# தொழில்நுட்பம்


## மைக்ரோமேக்ஸ் போல்ட்

மைக்ரோமேக்ஸ் நிறுவனம் புதிய போல்ட் ஸ்மார்ட் போன் அறிமுகத்தைத் தனது இணையத்தளம் வாயிலாக அறிவித்துள்ளது. இதன் விலையை அதிகாரபூர்வமாக இன்னும் தெரிவிக்கவில்லை.

இந்த ஸ்மார்ட் போன் இரட்டை சிம் வசதி கொண்டுள்ளது. 4.5 இன்ச் டிஸ்பிளே, பிராசஸர் மற்றும் 512 எம்பி ரேம் கொண்டுள்ளது. இரட்டை கமரா வசதியும் இருக்கிறது. வை.பை மற்றும் ப்ளுடூத் 4.0 வசதியும் உண்டு. இதன் முன்பக்க இரட்டை ஸ்பீக்கர்கள் ஒலி பயனாளிகளை நோக்கி வருவது போன்ற உணர்வைத் தரும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.



## புதிய கேம்கள்




கேம் வடிவமைப்பில் பிரபல்யமான Telltale நிறுவனம் Game of Thrones எனும் வீடியோ கேமின் புதிய தொடர்களை அறிமுகம் செய்யவுள்ளது.

PlayStation 4 மற்றும் டெக்ஸ்டாப் கணினிகளில் பயன்படுத்தக்கூடிய இந்தக் கேம்கள் இந்த மாதம் அறிமுகப்படுத்தப்படவுள்ளதுடன், Xbox One மற்றும் Xbox 360 என்பவற்றில் பயன்படுத்தக்கூடிய பதிப்பும், iOS சாதனங்களில் பயன்படுத்தக்கூடிய பதிப்பும் வெளியிடப்படவுள்ளது. மேலும் இது 6 பகுதிகளாக வெளியிடப்படவுள்ளது. இந்தக் கேம்கள் 5 அரசர்களுக்கு இடையே இடம்பெறும் போரை காட்டுகின்றன.




## அப்பிள், சம்சுங்

### மோதல் ஆரம்பம்

சில மாதங்களுக்கு முன்னர் சம்சுங் நிறுவனம் அப்பிள் நிறுவனத்துக்கு ஒரு பில்லியன் டொலர்கள் நஷ்டஈடு வழங்கியிருந்தது. இந்தநிலையில் இந்த வழக்கு தொடர்பாக சம்சுங் நிறுவனம் மீண்டும் மேன்முறையீடு செய்துள்ளது. இதில் 930 மில்லியன் டொலர்கள் நஷ்டஈடு கோரப்பட்டுள்ளது. எது எவ்வாறாயினும் அப்பிள் நிறுவனத்தின் சில தயாரிப்புக்களுக்கான இலத்திரனியல் சாதனங்களை சம்சுங் நிறுவனமே இன்று வரை வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.




## FIRE FOX பாவனையாளர்களுக்கு

உலகில் அதிகளவான பயனர்களால் பாவனை செய்யப்படுகின்ற முன்னணி இணைய உலாவிகளில் ஒன்றான Fire fox உலாவியின் தேடுதல் வேகத்தை அதிகரிக்க Mozilla நிறுவனம் முன்வந்துள்ளது. இதற்காக புதிய தேடுதல் இடைமுகம் Fire fox உலாவில் தரப்பட்டுள்ளது. இதன் மூலம் அதிகளவில் பயன்படுத்தப்படும் இணையத்தளங்கள் உட்பட பிரபல்யமான சொற்களை உட்புகுத்தும்போது அந்தத் தளங்கள் வரிசைப்படுத்தப்படும். இதில் தேட வேண்டிய சொல்லின் மீது ஒரே ஒரு கிளிக் செய்வதன் மூலம் தேடுதலை விரைவு படுத்தலாம்.

## தொல்லை தந்தவன் திருந்தியது எப்படி?

ஒரு ஊரில் அழகான பூந்தோட்டங்களுடன் அமைந்த வீட்டில் தனது சீடர்களுடன் புத்தத்துறவி ஒருவர் வசித்து வந்தார். அவரைப் பார்ப்பதற்காகத் தினமும் பலரும் வந்து செல்வர். துறவியின் பக்கத்து வீட்டில், தன் பிள்ளைகள் மேல் அதிகமான பாசம் வைத்திருக்கும் பக்சேசூரா என்ற ஒருவன் வாழ்ந்து வந்தான். பக்சேசூராவுக்குத் துறவியைச் சிறிதும் பிடிக்காது. அதனால் அவன் துறவிக்கு ஏதாவது தொல்லையைக் கொடுத்துக் கொண்டே இருந்தான். கழிவுகளைத் துறவியின் வீட்டின் எல்லைக்குள் எறிவது, துறவியை சந்திக்க வருபவர்கள், அவன் வீட்டைகடக்கும்பொழுதுஅவர்கலள் ஏதாவது சொல்லித் திட்டுவது, சில சமயம் வீட்டில் இருந்து கல்லெறிவது, துறவியின்சீடர்கலளத்தாக்குவது என்று தொல்லையைக் கொடுப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தான். அவனின் தொல்லையைப் பொறுக்கமுடியாத துறவியின் சீடர்கள் அவனை ஏதாவது செய்ய வேண்டும் என்று துறவியைக் கேட்டுக் கொண்டார்கள். துறவியும் அவர்களிடம், சரி, ஏதாவது செய்வோம்' என்று சொல்லி சமாளித்தார். துறவியின் வீட்டுத் தோட்டத்தில் அந்தப் பகுதிக் குழந்தைகள் அனைத்தும் வந்து விளையாடிக் கொண்டிருக்கும். பக்சேசூராவின் குழந்தைகளும் அந்தக் குழந்தைகளுடன் சேர்ந்து வந்து விளையாடிக் கொண்டிருக்கும்.துறவி பக்சேசூராவின் குழந்தைகளை மட்டும் தலையில் நான்கு குட்டுகள் குட்டி, இனிமேல் இந்தப் பக்கம் விளையாட வரக்கூடாது எனச் சொல்லி விரட்டினார்.இதனால் அவனது குழந்தைகள் மற்ற குழந்தைகளுடன் சேர்ந்து விளையாட முடியாமல் தவித்தன. தன்னுடைய குழந்தைகள் மட்டும் தனித்து விடப்பட்டதைப் பார்த்த பக்சேசூரா, முதலில் மனந்திருந்தியதை போல் நடித்துத் தன்து தொல்லைகளைக் குறைத்துக் கொண்டான். அது நடிப்பு என்று துறவி புரிந்து கொண்டாலும் பக்சேசூராவின் குழந்தைகளைத் தன் வீட்டுத் தோட்டத்தில் விளையாட அனுமதித்தார்.சில நாள்களில் பக்சேசூராவும் மனம் திருந்தினான். அவனும் அந்தத் துறவியிடம் வந்து அவர் கூறும் நல்ல கருத்துக்களைக் கேட்டுச் செல்லத் தொடங்கினான்.








## விடை தெரிந்தால் சொல்லுங்க...?

1. அழுவேன், சிரிப்பேன். நான் யார் தெரியுமா?
2. இவன் வாளுக்கு இவ்வுலகமே நடுங்கும். இவன் யார் தெரியுமா?
3. பல் துலக்காதவனுக்கு உடம்பெல்லாம் பற்கள். இவன் யார்?
4. வெளிச்சத்தில் வரும் இவன் இருட்டாயிருந்தால் காணாமற் போய்விடுவான். இவன் யார்?
5. கண்ணுக்குத் தெரியாது. ஆனால் உயிருக்கு உடைமை இது. யார் இது?
6. வெள்ளை மாளிகைக்குள் மஞ்சள் புதையல். அது என்ன?
7. அள்ள அள்ளக் குறையாது குடிக்க உதவாது. அது என்ன?
8. நாலு கால் உண்டு. ஆனால் வீசத்தான் வாலில்லை. இவன் யார்?



1. முகம் பார்க்கும் கண்ணாடி
2. தேள்
3. சீப்பு
4. நிழல்
5. காற்று
6. முட்டை
7. கடல்நீர்
8. நாற்காலி

**விடைகள்**

# உலகச் செய்திகள்



## ஐ.எஸ்ஸால் தலை துண்டித்து கொல்லப்படும் ராணுவத்தினர்

சிரியாவில் சிறைப் பிடிக்கப்பட்டஇராணுவத்தினரைமிகமிகக் கொடூரமாக ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகள் தலை துண்டித்து படுகொலை செய்வது போன்ற காணொலி வெளியாகியுள்ளது.

சிரியாவின் டெயில் எஸோர் என்ற இராணுவ விமான நிலையத்துக்கு அருகே உள்ள அரசாங்க தளத்தின் மீது ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர். அத்துடன் அங்கிருந்த சிறைப் பிடிக்கப்பட்ட படையினருக்கு தலை துண்டித்து சாவுத் தண்டனை நிறைவேற்றியுள்ளனர்.

இந்தக் காட்சிகள் அடங்கிய காணொலி வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அந்தக் காணொலியில் தலை துண்டிக்கப்படும் முன் படைவீரர்கள் தீவிரவாதிகளிடம்தங்களதுஉயிர்களுக்காக கெஞ்சுகின்றனர்.

அத்துடன் இராணுவ விமானத் தளத்தில் இருந்த இராணுவ உபகரணங்களை அபகரிப்பது போன்ற காட்சிகளும் உள்ளன. மேலும் அதில் ஐ.எஸ். தீவிரவாதிகள் போர் விமானம் ஒன்றைச் சுட்டு வீழ்த்துவது போன்ற காட்சிகளும் இடம்பெற்றுள்ளது. (வ)

# ஒபாமாவின் இந்திய வருகையின்போது தாக்குதலா?

## உளவுத்துறை எச்சரிக்கை

டில்லி, டிசெ.8

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா இந்திய வருகையின் போது, டில்லியில் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தக் கூடும் என்று உளவுத் துறையினர் எச்சரித்துள்ளனர். அடுத்த மாதம் 26 ஆம் திகதி டில்லியில் நடைபெறும் குடியரசுத் தின விழாவில் ஒபாமா சிறப்பு விருந்தினராகப் பங்கேற்கவுள்ளார். இதற்காக அவர் இரண்டு நாள் பயணமாக இந்தியா செல்லவுள்ளார்.

வெள்ளிக்கிழமை காஷ்மீரில் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தியுள்ள நிலையில், ஒபாமா வருகையின் போது டில்லியில் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்த திட்டமிட்டிருப்பதாக உளவுத்துறையினருக்கு தகவல் கிடைத்துள்ளது. அதையடுத்து, டில்லி முழுவதும் கண்காணிப்பை தீவிரப்படுத்துமாறு உள்துறை அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது.

டில்லி சர்வதேச விமான நிலையம் உள்ளிட்ட முக்கிய இடங்களில் பாதுகாப்பை பலப்படுத்துமாறு, உள்துறை அமைச்சகம் கடிதமும் எழுதியுள்ளது. இதனிடையே, பயங்கரவாத பிரச்சினைகுறித்துபிரதமர்மோடியை ராகுல்விமர்சித்ததுகுறித்துகருத்து தெரிவித்துள்ள பாரதிய ஜனதா, பயங்கரவாதபிரச்சினையை அரசியலாக்க ராகுல் முற்படுவதாகவும், காங்கிரஸ் சிறுபிள்ளைத்தனமாக நடந்து கொள்வதாகவும் விமர்சித்துள்ளது. (வ)




பெங்களூர், டிசெ.8

இந்தியாவின் தகவல் தொடர்பு செயற்கைக்கோள் ஜிசாட்–16 வெற்றிகரமாக விண்ணில் நிலை நிறுத்தப்பட்டது. இதற்கு பிரதமர் மோடி, விஞ்ஞானிகளுக்கு பாராட்டு தெரிவித் துள்ளார்.

இந்திய விண்வெளி ஆய்வு மையம் இஸ்ரோ தொலை தொடர்பு வசதியை மேம்படுத்தும் வகையில் ஜிசாட்16 என்ற செயற்கைக்கோளை தயாரித்தது. இந்தச் செயற் கைக்கோள் 12 ஆண்டுகள் செயற்படும் விதமாக வடிவமைக்கப்பட்டது. ஜிசாட்–16 செயற்கைக்கோள் நேற்றுபிரான்ஸ்நாட்டின்பிரெஞ்ச் கயானாவில் உள்ள கவுரு ரொக்கெட் தளத்தில் இருந்து அதிகாலை 2 மணி 10 நிமிடங்களுக்கு ஏரியான் 5விஏ221 என்றரொக்கெட்மூலம்,விண்ணில் ஏவப்பட்டது. திட்டமிட்டப்படி செயற்கைக்கோள் புவிவட்டப் பாதையில் நிலைநிறுத்தப்பட்டது என்றும் செயற்கைக்கோள் இயக்கம் நல்ல நிலையில் இருக்கிறது என்றும் இஸ்ரோ தெரிவித்துள்ளது.

ஜிசாட்–16 செயற்கைக்கோள் 3,181 கிலோ எடை கொண்டது. அதில் மொத்தம் 48 தகவல் தொடர்பு டிரான்ஸ் பாண்டர்கள் பொருத்தப்பட்டுள்ளன. இதுவரை இஸ்ரோ தயாரித்துள்ள செயற்கைகோள்களில் ஜிசாட்16 மட்டுமே அதிக டிரான்ஸ் பாண்டர்களை கொண்டது. இந்தச் செயற்கைக்கோளில் பொருத்தப்பட்டுள்ள டிரான்ஸ் பாண்டர்களின் உதவியால் ரி.வி, வானொலி சேவைகள் பெரிய அளவிலான இணையத்தள பயன்பாடுகள், தொலைபேசி நிலையங்கள் மேம்படுத்தப்படும்.(வ)

## அல்குவைதா முக்கிய தளபதி சுட்டுக்கொலை



அல்குவ்வைதாவின் உலகளாவிய தீவிரவாத செயல்களை மேற்கொண்டு வந்த முக்கிய படைத் தளபதி அடனான் சுக்ரிஜுமாஹ் நேற்று முன்தினம் சுட்டுக் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தெற்கு வர்ஜிஸ்தான் மலைப் பகுதியில் பதுங்கியிருந்த அவரைப் பாகிஸ்தான் ராணுவம் நேற்று முன்தினம் நடத்திய தீவிர வேட்டையின்போது சுட்டுக் கொன்றது.

39 வயதான சுக்ரிஜுமாஹ் நியூயோர்க் சுரங்கப்பாதை குண்டு வெடிப்பு மற்றும் இரட்டைக் கோபுரத் தாக்குதலில் தேடப்பட்டுவரும் குற்றவாளியாவார். அவரது தலைக்கு 5 மில்லியன் டொலர் வழங்கப்படும் என்று அமெரிக்க அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது. (வ)

## கிறிஸ்மஸ்ஸை சிறப்பாக்க புதிய ஹாரி பொட்டர் கதைகள்



கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு, ரசிகர்களை ஆச்சரியப்படுத்தும் விதமாக, புதிய ஹாரி பொட்டர் கதைகள் வெளியிடப்படும் என்று, எழுத்தாளர் ஜே.கே. ரவுலிங் கூறியுள்ளார்.

1997 ஆம் ஆண்டு ஹாரி பாட்டர் முதல் புத்தகம் வெளியாகி விற்பனையில் சாதனை படைத்தது. ஹாரி பொட்டரின் நாவலாசிரியர் ஜே.கே ரவுலிங்கும் உலகப் புகழடைந்தார். மேலும் 6 பாகங்கள் 2007ஆம் ஆண்டுவரைவெளியாகிதொடர்ந்து விற்பனையில் புதிய சாதனைகளைப்படைத்தது.புத்தகங்களோடு மட்டுமல்லாமல், ஹாரி பொட்டர் திரைப்படங்கள், வீடியோ கேம், பொம்மைகள், தீம் பார்க் என ஹாரி பொட்ட ருக்கென தனி உலகம் உரு வானது.

ஹாரிபொட்டரின்கடைசிப்பாகம் 2007ஆம் ஆண்டு வெளியானது. தொடர்ந்து அந்தப் பாத்திரத்தை வைத்து வேறு எந்தக் கதைகளும் எழுதப்படவில்லை. தற்போது எதிர்வரும் 12 – 23 ஆம் திகதி வரையிலான 12 தினங்கள் இடைவெளியில், தினம் ஒரு ஹாரி பொட்டர் சிறுகதை வெளியிடப்படும் என்று அறி விக்கப்பட்டுள்ளது. பண்டிகை ஆச்சரியத்தின் ஒரு பகுதியாக இது நடைபெறுகிறது என்று ஜே.கே. ரவுலிங் தெரிவித்துள்ளார்.

மேலும் PottermoreC hristmas என்ற ஹாஷ்டேக்கை ருவிட்டரில் உருவாக்கி, பொட்டர்ரசிகர்கள்பிரபலப் படுத்தி வருகின்றனர். (வ)

# பிலிப்பைன்ஸில் மீண்டும் புயல் அபாயம் 6 லட்சம் பேர் பாதுகாப்பான இடங்களுக்கு

மணிலா, டிசெ.8

பிலிப்பைன்ஸில் 'ஹையான்' புயல் தாக்கிய தடங்கள் அழியாத நிலையில், ஹகுபிட் என்ற மற்றொரு புயல், கிழக்கு பிலிப்பைன்ஸ் பகுதியைத் தாக்க நெருங்கி வருகிறது. முன்னெச்சரிக்கையாக 6 லட்சத்துக்கும் அதிகமா னோர், பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

கடந்த ஆண்டு தாக்கிய ஹையான் புயல், 7 ஆயிரம் உயிர்களை பறித்துச் சென்றது. 40 லட்சம் பேரின் வீடுகள் சேதமடைந்திருந்தன. இந்த நிலையில் மீண்டும் 'ஹையான்' புயல் தாக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

விமான சேவை, மின்சாரம் உள்ளிட்டவை முற்றிலுமாக துண்டிக்கப்பட்ட நிலையில், புயல் நெருங்கி வருவதன் அறி குறியாக, நேற்று முன்தினம் தொடக்கம் சூறைக் காற்றுடன் கனமழை பெய்து வருகிறது. மரங்கள், கட்டடங்கள், வீடுகள் உள்ளிட்டவை கடுமையாக சேதம் அடைந்து வருகின்றன. போர்க்கால அடிப்படையில் பாதுகாப்பு ஏற்பாடுகளை அந்தநாட்டு அரசு துரிதப்படுத்தி உள்ளது. கரையை கடக்கும் சமயத்தில், ஹிகுபிட் புய லானது 210 கி.மீ. வேகத்தில் வீசும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (வ)





நாசா உருவாக்கிய புதிய வகை ஆளில்லா விண்கலம் ஓரியான், சோதனை முயற்சியாக நேற்று முன்தினம் விண்ணில் செலுத்தப்பட்டது. (வ)

## 4,500 ஆண்டுகள் பழமையான புற்றுநோயாளியின் எலும்புகள்



கனடாவின் சஸ்கற்சுவானை ஆய்வாளர்கள் குழு, உலகிலேயே மிக பழமையான மனித புற்றுநோயாளி என்று கருதப்படும் ஒருவரின் உடலைக் கண்டுபிடித்துள்ளனர்.

இதுகுறித்து ஆய்வாளர்கள் கூறுகையில்,

சைபீரியாவில் தோண்டி எடுக்கப்பட்ட மனிதன் ஒருவரின் எலும்புகள் 4,500 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்றும் அவருக்கு நுரையீரல் அல்லது புரொஸ்டேட் புற்றுநோய் இருந்திருக்கலாம் என்று கூறப் படுகிறது. அந்த மனிதன் ஒரு காட்டுவாசி என்றும் குளிர் காலநிலையில் சூடாக இருப்பதற்கு மரங்களால் தீ மூட்டியிருக்கலாம், அடிக்கடி புகை உள்ளிழுக்கப்பட்டதனால் அவருக்கு நுரையீரல் புற்று நோய் ஏற்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகின்றது. அவர் தனது சமுதாயத்தில் ஒரு தனித்துவமான வாழ்க்கை வாழ்ந்திருக்க வேண்டும் என்றும் 35-45 வயதுக்கு இடைப்பட்ட காலத்தில் இறந்தி ருப்பார் என்று தெரிவித்துள்ளனர். (வ)



## மறைந்தார் பெல்ஜியம் ராணி

புருசெல்ஸ், டிசெ.8

பெல்ஜியம் நாட்டின் முன்னாள் ராணி பாபியாலோ 86 ஆவது வயதில் மாரடைப்பால் நேற்று முன்தினம் மாலை காலமானார். பெல்ஜியம் அரண்மனையில் இருந்து அரசர் பிலிப் இந்தத் தகவலை வெளியிட்டார். பிரிட்டனைப்போலவே பெல்ஜியம் நாட்டிலும் அரச வம்சத்தினருக்கு மக்களிடையே செல்வாக்கு உள்ளது. பெல்ஜியம் நாட்டின் முன்னாள் அரசர் பாவுடோவின் மனைவி பாபியாலோ. ஸ்பெயின் நாட்டில் பிறந்தவரான பாபியாலோ, பெல்ஜியம் அரசர் பாவு டோவின் மறைந்தவுடன், புருசெல்ஸ்நகரில் உள்ள ஸ்டாய் வென்பெர்க் அரண்மனையில் வசித்து வந்தார்.


அவருக்கு பெல்ஜியம் அரசு ஓய்வூதியம் அளித்து வந்தது. பாபியாலோ கடந்த சில ஆண்டுகளாக நோய்வாய்ப்பட்டிருந்தார். இந்த நிலையில் நேற்று முன்தினம் அவர் மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழந்தார். இந்த தகவலைப் பெல்ஜியம் அரசர் பிலிப் நேற்று முன்தினம் இரவு புருசெல்ஸில் வெளியிட்டார். (வ)

## சாவுத் தண்டனை கைதிகளின் உறுப்புக்களை எடுக்கும் சீனா

### அந்த நடைமுறையில் மாற்றம்

பீஜிங், டிசெ.8

மோசமான குற்றங்கள் புரிந்து சாவுத் தண்டனை விதிக்கப்படும் கைதிகளுக்கு தண்டனையை நிறைவேற்றிய பின்னர், அவர்களின் உடல் உறுப்புகளை சீனா அகற்றி வருகிறது. உலகிலேயே சீனாவில் மட்டும்தான் இந்த வழக்கம் உள்ளது.



இவ்வாறு அகற்றப்படும் உடல் உறுப்புகள், மாற்று அறுவைச் சிகிச்சை செய்கிறவர்களுக்கு வழங்கப்பட்டு வந்தன.

இப்படி சாவுத்தண்டனை கைதிகளின் உடல் உறுப்புகளை எடுத்து, பிற நோயாளிகளுக்கு வழங்குவது உலகளவில் சர்ச்சையை ஏற்படுத்தி வந்தது.

இந்த நிலையில், இந்த நடைமுறையை நிறுத்த சீனா முடிவெடுத்துள்ளது. புதிய நடைமுறை அடுத்த மாதம் முதல் நடைமுறைக்கு வரவுள்ளதாக சீன அரச ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சீன மனித உறுப்பு நன்கொடை கமிட்டியின் தலைவர்ஹுவாங்ஜீ கூறுகையில், உறுப்பு மாற்று அறுவைச் சிகிச்சைகளுக்காக சாவுத் தண்டனை கைதிகளின் உறுப்புகளை, அவர்களது குடும்பத்தினரின் ஒப்புதலுடன் அகற்றி வந்தது சர்ச்சையை ஏற்படுத்தியது. எனவே அத்தகையை ஒரு செயலை நிறுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

சீனாவில் உறுப்பு மாற்று அறுவைச் சிகிச்சை செய்து கொள்ள, உறுப்பு கிடைப்பதற்காக ஆண்டு தோறும் 3 லட்சம் நோயாளிகள் காத்திருப்பது குறிப்பிடத்தக்கது.(வ)

## பருவநிலை மாற்றம் குறித்து ஒப்பந்தம்

### பான் கீ மூன் தெரிவிப்பு

பருவநிலை மாற்றம் குறித்த சர்வதேச அளவிலான ஒப்பந்தத்தை ஏற்படுத்துவதில் உறுதியாக உள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலர் பான் கீ மூன் தெரிவித்துள்ளார்.

புவி வெப்பமயமாதலைத் தடுக்கும் நோக்கில் ஐ.நா. உறுப்பு நாடுகள் எடுத்து வரும் நடவடிக்கைகள் நம்பிக்கை அளிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த மாதத்தில் சீனா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் கூட்டாக வெளியிட்ட பருவநிலை மாற்றம் தொடர்பான அறிவிப்பைச் சுட்டிக்காட்டிய பான் கீ மூன், சுற்றுச் சூழலுக்கு கேடு விளைவிக்கும் கார்பன்டை ஆக்ஸைட் அளவைக் கட்டுப்படுத்த ஐரோப்பிய யூனியன் மற்றும் ஜேர்மனி ஆகியவை எடுத்து வரும் முயற்சிகளையும் பாராட்டினார். (வ)

## ஒரே இதயம் இரு உடல்களுடன் ஒட்டிப் பிறந்த இரட்டையர்



அட்லாண்டாவில் தம்பதியினருக்கு ஒரே இதயம், இரு வேறு உடல்களைக் கொண்ட இரட்டை ஆண் குழந்தைகள் ஒட்டிப் பிறந்துள்ளன.

அட்லாண்டாவில் உள்ள வடக்கு பகுதி மருத்துவமனையில் நேற்று முன்தினம் காலை ராபின்- மைக்கேல் என்ற தம்பதிக்கு ஒட்டிப்பிறந்த இரட்டை ஆண் குழந்தைகள் பிறந்தன.

இந்த குழந்தைகள் ஒரே கைகள், கால்கள் மற்றும் உடல் என ஒட்டிப் பிறந்த இரட்டையர் ஆகும். அவர்களுக்கு ஆஷா மற்றும் எலி ஹாம்பே என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. பிறந்த போது 9 பவுண்டுகள், 10 அவுன்ஸ் எடையுடன் இருந்தனர் இந்த இரட்டையர்கள்.

தற்போது நலமாக உள்ள இந்தக் குழந்தைகளுக்கு ஒரே இதயம், மூன்று நுரையீரல்கள் உள்ளன, மூன்றாவது நுரையீரல் பகிர்ந்து கொள்ளப்பட்டுள்ளது. (வ)

## ஐ.எஸ்.ஸிடமிருந்து முக்கிய இடங்கள் மீட்பு

### ஈராக் பிரதமர் தெரிவிப்பு

பக்தாத், டிசெ.8

இஸ்லாமிக் ஸ்டேட் இயக்கத்தினரிடமிருந்து பல்வேறு முக்கிய இடங்களை அரச படையினர் மீட்டுள்ளதாக ஈராக் பிரதமர் ஹைதர் அல்-அபாதி தெரிவித்துள்ளார்.

அரசுமுறைப்பயணமாக பிரான்ஸ் சென்றுள்ள அபாதி அந்நாட்டு ஜனாதிபதி பிரான்சுவா ஹொலந்தைச் சந்தித்துப்பேசிய பின்னர் செய்தியாளர்களிடம் இவ்வாறு கூறினார். அமெரிக்கா தலைமையிலான சர்வதேசப் படையினரின் வான் தாக்குதல் உதவியோடு ஈராக் அரச படையினர் வடக்குப் பகுதி நோக்கி நகர்ந்து வருவதாகத் தெரிவித்தார். பாக்தாத்திலிருந்து நினெவி செல்வதற்கான வீதி திறக்கப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டிய அவர், டியாலாவின் முக்கிய பகுதிகளை ஆயுதக்குழுவினரிடம் இருந்து மீட்டுள்ளதாகவும் கூறினார்.

அபாதியுடன் செய்தியாளர்களைச் சந்தித்த பிரான்ஸ் ஜனாதிபதி, ஐ.எஸ். அமைப்புக்கு எதிரான தாக்குதல் நடவடிக்கையை அதிகரிக்க தயாராக உள்ளதாகத் தெரிவித்தார்.

இந்நிலையில், மோசுல், ரமாதி, தல் அபார், சின்ஜார் மற்றும் பலுஜா ஆகிய இடங்களில் அமெரிக்கா தலைமையிலான சர்வதேசப் படை நடத்திய தாக்குதலில் ஐ.எஸ். பயங்கரவாதிகளின் பதுங்கு குழிகள், வாகனங்கள் மற்றும் இரு ஆயுதக் கிடங்கு போன்றவை தகர்க்கப்பட்டதாகத் தகவல் வெளியாகியுள்ளது. (வ)

# பல்சுவை

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 6 | | 2 | | |
| 9 | 5 | | | | 3 | | 7 | 6 |
| | 3 | | 2 | 4 | | | 5 | 1 |
| 4 | | | | | | 7 | 9 | |
| | 1 | 9 | 7 | | 4 | 8 | 6 | |
| | 6 | 5 | | | | | | 4 |
| 6 | 9 | | | 7 | 1 | | 4 | |
| 2 | 7 | | 4 | | | | 8 | 9 |
| | | 4 | | 9 | | | | |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக் கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண் கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப் பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 8 | 3 | 9 | 4 | 6 | 2 | 7 | 1 |
| 4 | 9 | 2 | 5 | 7 | 1 | 8 | 6 | 3 |
| 6 | 7 | 1 | 8 | 2 | 3 | 9 | 5 | 4 |
| 1 | 3 | 8 | 4 | 6 | 5 | 7 | 9 | 2 |
| 9 | 6 | 4 | 2 | 3 | 7 | 5 | 1 | 8 |
| 7 | 2 | 5 | 1 | 9 | 8 | 4 | 3 | 6 |
| 2 | 1 | 7 | 3 | 8 | 9 | 6 | 4 | 5 |
| 3 | 4 | 6 | 7 | 5 | 2 | 1 | 8 | 9 |
| 8 | 5 | 9 | 6 | 1 | 4 | 3 | 2 | 7 |

**நேற்றைய சுடோக்கின் விடை**

**நாளை**

**கார்த்திகை-23**
**செவ்வாய்க்கிழமை 09.12.2014**

திதி:திருதியை மு.இ.08.19வரை
நட்சத்திரம்: புநர்பூசம் பி.இ.04.24 வரை
சுபநேரம்: 10.48-12.18 வரை
இராகுகாலம்: 03.18-04.48 வரை

## மாற்றமடைந்து வரும் இளைஞர் சமுதாயம்

(கடந்த வாரத் தொடர்ச்சி)

இதனால் ஒரு விடயம், அல்லது தத்துவம், அல்லது கோட்பாடு அறிவியல் ரீதியாக மட்டுமன்றி விஞ்ஞான ரீதியாகவும் சரியா அல்லது தவறா என்பதை நிரூபிக்க வேண்டியுள்ளது. இதற்கும் மேலாக மாற்றங்களின் அதி வேகத்தன்மை 'இதுதான் இறுதியானது' என எதையுமே வரையறுத்துக் கூற முடியாமல் செய்து விடுகின்றது. இன் றைய புதியவைகள் அன்றைய தினத்திலேயே பழையவையாகி விடுகின்றன. அந்த வேகத்தில் மாற்றங்கள் நிகழ்கின்றன. இதனால் இன்றைய இளைஞர்கள் பிறரின் நம்பிக்கைகளை அப்படியே ஏற்றுக்கொள்ளத் தயாரில்லை. இந்த ஏற்றுக்கொள்ளாத தன்மை காலத்தின் தேவையாக அமைந்துவிட்டது.




இன்றைய இளைஞர்களின் எதிர்ப் புத்தன்மை காலத்தின்கட்டளை. வாழ்வியல்நடைமுறைக்கு ஒவ்வாத தத்துவங்களும், கோட்பாடுகளும், மரபுகளும் விலக்கப்பட்டு மனிதனின் தனித்துவத்துக்கு பாதகமாக அமையும் வேறுபாடுகளும் முரண்பாடுகளும் களையப்பட்டு உண்மை எது என்பதைத் தேடும் முயற்சியின் ஆரம்பம் தான் இன்றைய இளைஞர்களின் எதிர்ப் புத்தன்மை. அவர்கள் எதிர்ப்பது புளித்துப் புரையோடிப்போன, நடைமுறை வாழ்வியலுக்கு ஒவ்வாத மூட நம்பிக்கைகளையும் அதன் தற்போதைய உடமையாளர்களையும் தான். அறிவியல் ரீதியாகவும், விஞ்ஞான ரீதியாகவும் மனிதவாழ்வுக்கு உகந்தது எவை என்பதை உறுதிசெய்வதுதான் இன் றைய இளைஞர்களின் தாகம். அதனால் தான் அவர்கள் எந்தவொரு விடயமும் அறிவியலாலும் விஞ்ஞானத்தாலும் உண்மை என நிரூபிக்கப்படும் வரை அவற்றில் நம்பிக்கை கொள்வதில்லை. எனவே, இன்றைய இளைஞர்களின் தாகத்தை நாம் புரிந்து கொண்டால் அவர்களின் எதிர்ப்புத்தன்மை காலத்தின் தேவை என்பதும் உண்மையைத் தேடும் பயணம் என்பதும் புலனாகும்.

(முற்றும்)

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### அஹிம்சையின் மாபெரும் சக்தி தீமையை எதிர்ப்பதாகும்

அஹிம்சை, லட்சியம் அன்பு முதலியவற்றைப் பற்றிப் பேசும் போது உண்மையில் நாம் எதைக் குறிப்பிடுகிறோம் என்பதில் கவனமாக இருக்க வேண்டும். எதிர்ப்பதற்கான வலிமை நம்மிடம் இருக்கிறதா இல்லையா என்பதை முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். ஆற்றல் இருந்தும் அதைப் பயன்படுத்துவதில்லை என்ற உறுதியுடன் எதிர்க்காதிருந்தோமானால் அது மகத்தான அன்பின் விளைவாக எழுந்த செயல். நம்மால் எதிர்க்கவே முடியாத நிலையில் இருந்து கொண்டு, மேலான அன்பின் காரணமாகத்தான் அப்படி எதிர்க்காமல் இருக்கிறோம் என்று எண்ணி நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வது அஹிம்சைக்கு முற்றிலும் எதிரான ஒன்று. தனக்கு எதிராகப் பெரிய படையைப் பார்த்த அர்ஜுனன் கோழையாகிவிட்டான். அந்த அன்பு காரணமாக நாட்டுக்கும் அரசனுக்கும் தான் ஆற்ற வேண்டிய கடமையை மறந்தான். அதனால்தான் கிருஷ்ணர் அவனைக் கப்டன் என்று கூறினார். நீ புத்திசாலி போல் பேசுகிறாய். உன் நடத்தையோ உன் கோழைத்தனத்தைக் காட்டிக் கொடுத்துவிடுகிறது. எனவே எழுந்து நில். போரிடு. இதுதான் கர்மயோகத்தின் மையக்கருத்து, அஹிம்சையே மிக உயர்ந்த லட்சியம். அதேவேளையில் அப்படி எதிர்க்காதிருத்தல் என்பது நடைமுறை வாழ்வில் மாபெரும் சக்தியின் வெளிப்பாடு. அது மட்டுமல்ல, தீமையை எதிர்ப்பது என்பது அஹிம்சை என்னும் ஒரு மாபெரும் சக்தி வெளிப்பாட்டை அடைவதற்கான பாதையில் ஒரு படி என்ற உண்மையை அறிபவனே கர்மயோகி இந்த உயர்ந்த லட்சியத்தை அடையும் வரையில் தீமையை எதிர்ப்பதே ஒருவனின் கடமை. அவன் செயலில் ஈடுபடட்டும், அவன் போராடட்டும், முடிந்த அளவு ஆற்றலுடன் எதிர்க்கட்டும். அப்போது மட்டுமே, எதிர்க்கின்ற ஆற்றலைப் பெற்ற பிறகு மட்டுமே அஹிம்சை ஒரு நற்பண்பாக அமைய முடியும்.

## சந்தைகளின் இன்றைய நிலைவரம்

| | மருதனார்மடம் | முல்லைத்தீவு | சாவகச்சேரி | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|---|
| கத்தரி | 180 | 140 | 140 | 200 | 140 | 150 |
| கரட் | 240 | 280 | 180 | 200 | 220 | 220 |
| மரவள்ளி | 40 | 70 | 40 | 50 | 40 | 60 |
| கருணைக்கிழங்கு | 40 | 250 | 60 | 60 | 70 | 80 |
| பயிற்றை | 400 | 200 | 200 | 280 | 240 | 200 |
| பாவல் | 500 | 150 | ~ | 280 | 300 | 160 |
| வெங்காயம் | 80 | 100 | 80 | 80 | 80 | 140 |
| பூசணி | 40 | 60 | 40 | 50 | 40 | 40 |
| தக்காளி | 200 | 150 | 180 | 200 | 240 | 180 |
| வாழைக்காய் | 70 | 80 | 80 | 80 | 80 | 80 |
| கீரை | 60 | 30 | 50 | 30 | 60 | 30 |
| பொன்னாங்காணி | 50 | 30 | 40 | 50 | 50 | 30 |
| உருளைக்கிழங்கு | 120 | 160 | 140 | 140 | 120 | 140 |
| லீக்ஸ் | 300 | 280 | 200 | 300 | 280 | 220 |
| பீற்றூட் | ~ | 200 | 150 | 200 | 160 | 200 |
| மிளகாய் | 300 | 400 | 300 | 350 | 260 | 400 |
| வெண்டி | 200 | 140 | 120 | 120 | 200 | 120 |
| கோவா | 150 | 140 | 120 | 120 | 180 | 140 |
| புடோல் | 140 | 160 | 90 | 100 | 120 | 120 |
| போஞ்சி | 180 | 200 | 150 | 200 | 220 | 180 |
| தேசிக்காய் | 100 | 150 | 120 | 100 | 120 | 120 |
| தேங்காய் | 35 | 40 | 30 | 40 | 40 | 50 |

# சனி பெயர்ச்சி உங்களுக்கு எப்படி? 02.11.2014 - 2017



## 27 நட்சத்திரங்கள், 12 ராசிகளுக்குமான பலன்களும் பரிகாரங்களும்

### மீனம்



***மீனராசி நேயர்களே!***

கம்பீரமான தோற்றத்துடன் சாதாரண உயரத்தைவிட சற்று உயரம் குறைந்தவர்களாகவும், ஏர் நெற்றியுடனும் இருப்பார்கள். நீண்ட மூக்கும், சிறிய குவிந்த உதடுகளும், வரிசையான பற்களும் காணப்படும். மாநிறமும், மிருதுவான கைகளும் அமைந்திருக்கும். கண்கள் மீன் போன்று, புருவங்கள் வில் போன்றும் அழகாக இருக்கும். கனிந்த பார்வையுடனும், மலர்ந்த முகத்துடனும் மற்றவர்களை எளிதில் வசப்படுத்தி விடுவார்கள். பேசுவது கூட மெல்லிய குரலில்தானிருக்கும். நடக்கும்போது கைகள் இரண்டையும் வீசி உடல் குலுங்கும்படி நடப்பார்கள். எப்பொழுதும் கற்பனை உலகில் மிதப்பவர்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. மனத்தெளிவுடன் இருக்கும் போது தயாள குணமும், பொறுமையும், தன்னம்பிக்கையும் கொண்டு திறமைசாலிகளாகவும் இருப்பார்கள். மற்றவர்களின் சுக துக்கங்களையும் தம்முடைய சுக துக்கங்களாக நினைப்பார்கள். தன்னிடமுள்ள எந்த ரகசியத்தையும் மறைக்கத் தெரியாது. சமயத்திற்கேற்றால் போல மாறிவிடும் சுபாவம் கொண்டவர்களாதலால் துர்போதனைகளுக்கும், கெட்ட சகவாசங்களுக்கும் எளிதில் அடிமையாகிவிடுவார்கள். எவ்வளவு சீக்கிரத்தில் ஒருவரிடம் அன்பாக பழகுகிறார்களோ அவ்வளவு சீக்கிரத்தில் விலகி விடவும் செய்வார்கள். பயந்த சுபாவம் கொண்டவர்களாதலால் இவர்களை நம்பி எந்தக் காரியத்திலுமே இறங்க முடியாது. வீண் விவகாரங்களில் அடிக்கடி தலையிட்டு வம்பை விலைகொடுத்து வாங்குவார்கள். இதனால் இவர்கள் வசிக்கும் இருப்பிடத்தை கூட அடிக்கடி மாற்றி விடுவார்கள். தங்களுடைய தேவைகள் பூர்த்தியடைய காலம் நேரம் பார்க்காமல் பிறரின் உதவியை நாடுவார்கள். இவர்கள் பேச்சாற்றல் மிக்கவர்கள் என்பதால் இவர்களிடம் பேசும்போது வார்த்தைகளை அளந்து பேசவேண்டும். சின்னச் சின்ன விடயங்களில் கூட குற்றம் கண்டுபிடிப்பதில் வல்லவர்கள். சமயம் பார்த்து காலை வாரிவிடுவார்கள். நேர்மை, கள்ளம் கபடமற்ற மனம் மற்றும் சீரிய சிந்தனை குணம் கொண்டவர்கள். பாவம் செய்வதற்கு அஞ்சும் இவர்கள் திடீர் யோகம் கொண்டவர்கள். பணம் பல வழிகளில் திடீரென்று வரும். இருபது வயதில் சம்பாதிக்கத் தொடங்குவார்கள். தொலை தூரப் பயணம் செய்வார்கள். தனது ஓய்வு நேரத்தையும் உபயோகமாகச் செலவழிப்பார்கள்.

கடந்த இரண்டரை வருட காலமாக சனி பகவான் உமது ராசிக்கு 8 இல் அதாவது அஷ்டமச் சனி என சஞ்சரித்தார். அகப்பட்டவனுக்கு அஷ்டமச் சனி என சொல்வழக்கு உண்டு. இதனால் சேமிப்பு கரைந்தது. பிணை அளித்த வகையில் இக்கட்டான சூழ்நிலை என நேர்ந்தது. எனினும் உமது ராசிநாதன் குருவின் கோசார பலத்தினால் நிம்மதி பெருமூச்சு விட்டீர்கள். 2.11.2014 இல் சனி பகவான் உமது ராசிக்கு 9 இல் வருகிறார். இது பாக்ய ஸ்தானமாகும். முதலீடு பெருகும். தந்தை வழியில் அனுகூலம் கிட்டும் சிலர் வெளிநாடு செல்வர். ஏற்றுமதி, இறக்குமதி வாணிபம் சிறப்படையும். 26.1.2017 வரை அங்கு சஞ்சரிப்பார்.

சனி பகவானின் 3,7,10 ஆகிய பார்வையினால் உமது ராசி 11, 3, 6 ஆகிய வீடுகளைப் பார்வை செய்வார்.

சனி பகவான் உமது ராசிக்கு 11 ஆம் வீட்டைப் பார்வை செய்வதால் தொழில் மற்றும் உத்தியோக வழியில் அனுகூலம் கிட்டும். மாமன் மைத்துனர் வழியில் உதவியும் ஒத்தாசையும் கிட்டும். நாத்திகம் பேசிய சிலர் ஆத்திகம் பேசுவர். புத்திர பாக்கியம் கிட்டும்.

சனிபகவான் உமது ராசிக்கு 3 ஆவது வீட்டைப் பார்வை செய்வதால் சரளமான பணப்புழக்கம் உண்டாகும். கடன் கணிசமாகத் தீரும். இளைய சகோதர வழியில் ஏற்றம் கிட்டும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். சிலர் தந்தையின் அறிவுரைப்படி சிறு பிரயாணங்களை ஏற்க நேரும். தூரதேசத்திலிருந்து நற்செய்தி கிட்டும்.

சனி பகவான் பார்வை உமது ராசிக்கு 6 ஆவது வீட்டை பார்வை செய்வதால் வழக்கில் வெற்றி கிட்டும். எதிரிகள் விலகுவர். வராத கடன் திரும்ப வரும். நாள்பட்ட நோய் விலகும். மகன் (அல்லது) மகள் வருவாய் உயரும். தொழில்வழி பயணங்கள் வெற்றி தரும். பூர்வீக சொத்தில் வில்லங்கம் தீரும். குலதெய்வத்து நேர்த்திக் கடனை செலுத்துவீர்கள். அரசு வழியில் நிலவிய கெடுபிடிகள் குறையும். அல்லல் அகலும்.

13.7.2015 வரை குரு 5 லிருப்பதால் புத்திர பாக்கியம் கிட்டும். மகன் (அல்லது) மகள் வழியில் நற்செய்தி கிட்டும். பூர்வீக சொத்து உமது வசமாக இடமுண்டு. 14.7.2015ல் குரு 6 இல் வருவதால் உத்தியோக உயர்வு கிட்டும். பணிச்சுமை கூடும், நிலுவை ஊதியம் கணிசமாகக் கிட்டும் செல்வந்தர்களின் (அல்லது) உயர் பதவியில் உள்ளவர்களின் நட்பு கிட்டும்.

தற்போதுள்ள ராகு 7 ஆம் இடத்தில் இருப்பதால் உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவது நல்லது. கேது ஜென்மராசியில் உள்ளதால் குடும்பத்தில் சிறு சிறு பிரச்சினைகளை உண்டாக்கும். பேச்சில் நிதானத்தை கடைப்பிடிப்பது நன்மை தரும். பிறர் விவகாரங்களில் தலையிட வேண்டாம்.

**உத்தியோகத்தர்கள்:** உத்தியோகத்தர்களுக்கு தடைப்பட்ட பதவி உயர்வுகள் மளமளவென கிடைக்கப்பெறும். அதிகாரிகளின் கெடுபிடிகள் குறைந்து உத்தியோகத்தில் ஈடுபாடு உண்டாகும். வெளியூர், வெளிநாடு சென்று பணி புரிய விரும்புவோரின் விருப்பமும் நிறைவேறி மகிழ்ச்சி தரும்.

**மாணவர்கள்:** கல்வியில் கவனத்துடன் ஈடுபட்டு சாதனைகள் படைப்பீர்கள். விளையாட்டுத் துறைகளிலும் பேச்சுப் போட்டி, கட்டுரை, கவிதைப் போட்டிகளிலும் பரிசுகளையும், பாராட்டுக்களையும் தட்டிச் செல்வீர்கள்.

**அதிர்ஷ்டக் குறிப்புகள்:**
எண் – 50, 60, 62, 70, 72, 74,
நிறம் – கறுப்பு, நீலம், கிழமை – சனி, புதன், திசை – மேற்கு, கல் – கருமுத்து, தெய்வம் – ஐயப்பன்.





# ஆண் சூழலில் வாழும் பெண்கள்



ஆண்களிடத்தில் உள்ள பயன்படுத்துதல் என்ற ஒன்றே பெண்களுக்கு எதிரான அடக்குமுறைகளுக்கும், பெண்களுக்கு எதிரான செயல்பாடுகளுக்கும், ஆணாதிக்கத்துக்கும் காரணமாக அமைந்து விடுகின்றது. குழப்பான சூழலில் பெண்கள் இருக்கிறார்கள் என்பது தெளிவாகிறது. ஆண் சூழலுக்குள் தன்னை இழந்து நிற்கிறார்கள் என்பது உண்மை. இவர்களை மீட்டுத் தன்னை உணர்ந்து கொள்ளச் செய்ய வேண்டிய பெண்ணியம், பெண்ணியவாதிகள் செய்தது என்ன? செய்ய வேண்டியது என்ன? என்பதை ஒரு மீளாய்வுக்கு உட்படுத்த வேண்டும். பெண்கள் பள்ளிக்கூடம், பெண்கள் கல்லூரிகள் போன்றன தொடங்கப் பெற்று விட்டன. இவற்றில் பெண்களே வேலை பார்க்கிறார்கள். படிக்கிறார்கள்.

தோட்டக்காரர்கள் முதல் துணைவேந்தர் வரை பெண்கள்தான். என்றாலும் அவர்கள் படிக்கும் படிப்பு பெண்ணுக்குச் சாதகமானதா என்ற கேள்வியை எழுப்பிப் பார்க்க வேண்டும். பாடதிட்டம், அதற்குள் இடம்பெறும் பாடங்கள், அதனை எழுதிய ஆசிரியர்கள் போன்றவற்றை ஆராய்ந்து பார்த்தால் பத்து விழுக்காடு கூட பெண்கள் தொடர்புடையதாக இருக்க வாய்ப்பிருக்காது.

ஆணின் பாடங்களைப் படித்து வரும் பெண்கள் எப்படி உண்மையான பெண்களாக இருக்க இயலும். பெண்களே எழுதும் புத்தகங்கள், தொகுக்கும் புத்தகங்கள் வந்துவிட்டன. எனினும் பெண்கள் தொகுக்கும் புத்தகங்களில் பெண்களுக்கு உரிய சாதகமான கருத்துக்கள் இடம்பெற்றுள்ளனவா என்பது கேள்விக்குறிதான். ஆண்கள் எவ்வளவு விழிப்பாக எழுதினாலும் அதற்குள்ளும் ஆணாதிக்கக் கருத்து வந்து புகுந்து கொள்ளும் என்பது தான் உண்மை. புறச்சூழலை மாற்றி அமைக்க முடிந்தால் மட்டுமே, அல்லது புறச்சூழல் மாறினால் மட்டுமே பெண் உண்மையான பெண்ணாக வலம் வர இயலும்.

# ஆக்கம்

# காதலரின் நண்பர்களுடன் நட்பு பாராட்டலாமா?

என்.ஜி

உங்கள் காதலரின் நண்பர்களுடன் பழகுவதில் எந்த அளவுக்குக் கவனமாக இருக்கிறீர்களோ, உங்களுக்கும் உங்கள் காதலருக்குமான உறவை அந்த அளவுக்கு அது மேம்படுத்தும். முதன்முறையாகக் காதலரின் நண்பர்களைச் சந்திக்கும்போது அவர்கள் முற்றிலும் அந்நியமானவர்களாகத் தெரியலாம். ஆனால், அவர்கள் உங்கள் காதலரின் நண்பர்கள். உறவு என்பது ஏற்றுக்கொள்வதிலும், அனுசரித்துப்போவதிலும்தான் வளர்கிறது. அதில் உங்கள் துணையின் நட்புவட்டத்தை அங்கீகரிப்பதிலும் அடங்கியிருக்கிறது. காதலரின் நட்புவட்டத்துடன் பழகுவதற்குச் சில வழிமுறைகள்:

### சகஜமாகப் பழகுபவராக?

ஒருவேளை, நீங்கள் சகஜமாக இருப்பதை விரும்பாதவர் என்றால், உங்கள் காதலரின் நண்பர்களைச் சந்திக்கும் நிகழ்வு நிச்சயம் கடினமானதாகத்தான் இருக்கும். இதற்கு நீங்கள் எதிர்மாறானவர் என்றால் இந்தச் சந்திப்பு எளிதானதாக இருக்கும். முதல் சந்திப்பைக் கடந்துவிட்டால், உங்கள் காதலரின் நட்புவட்டத்தைப் பற்றிய புரிதல் கிடைத்துவிடும். அதற்குப் பிறகு நடக்கும் சந்திப்புக்கள் அவர்களை உங்கள் நண்பர்களாகவும்மாற்றிவிட வாய்ப்பு இருக்கிறது.

### வாங்க பழகலாம்!

மற்ற உறவுகலைளவிட நட்பு நீண்ட மதிப்பைக் கொண்டது. உங்கள் காதலருக்கு அவருடைய நண்பர்களை நீண்டகாலமாகத் தெரிந்திருக்கலாம். உங்கள் காதலர் உண்மையிலேயே உங்களைப் பற்றி உண்மையாக இருக்கிறார் என்றால், முதலில் உங்கலை அவருடைய நட்புவட்டத்தில்தான் அறிமுகப்படுத்துவார்.

இந்த அறிமுகம்தான் உங்கள் உறவுக்கான நீண்டகால அடித்தளத்தை அமைக்கப் போவதற்கான அறிகுறி. இதை மனதில் வைத்துக்கொண்டு, அவருடைய நண்பர்கலை உங்கள் நண்பர்களாக மாற்றிக்கொள்ளுங்கள்.

### தீர்ப்புகள் வேண்டாம்

நண்பர்கள் எப்படியிருந்தாலும் நண்பர்கள்தான். உங்கள் காதலரிடம் அவருடைய நண்பர்களின் நடவடிக்கைகளைப் பற்றித் தொடர்ந்து குறைசொல்லிக் கொண்டிருந்தால், அது நிச்சயம் உங்கள் உறவிலும் பிரதிபலிக்கும். அவருடைய நண்பர்களின் நடவடிக்கைகளில் ஏதாவது வித்தியாசமாகவோ, தவறாகவோ தோன்றினால் உடனடியாக அதைத் தெரிவிக்க வேண்டாம். ஒரு சில வாரங்கள் காத்திருங்கள்.

ஏனென்றால் நீங்கள் அவசரப்பட்டுக்கூட அவருடைய நட்பு வட்டத்தைப் பற்றிய தவறான முடிவுக்கு வந்திருக்க வாய்ப்பிருக்கிறது. காதலருடைய நட்புவட்டம் பற்றிய சிக்கல் தொடர்ந்து உங்களுக்கு இருந்தால், அதை உங்கள் காதலரிடம் மனம்விட்டுப் பேசுங்கள். அது பல பிரச்சினைகளைத் தீர்க்கும்.

### நட்புக்கும் எல்லைகள் உண்டு

உங்கள் காதலரின் நட்புவட்டம் உங்களுக்கும் உங்கள் காதலருக்குமான நேரத்தை முற்றிலும் எடுத்துக் கொள்வதாகத் தோன்றினால், அடிக்கடி நட்பு சந்திப்புக்களைத் தவிர்ப்பது நல்லது. ஆனால், அதே சமயம், உங்கள் காதலர் அவருடைய நண்பர்களைச் சந்திக்கவே கூடாது என்று கட்டுப்பாடெல்லாம் விதிக்காதீர்கள். இந்த நட்பு சந்திப்புக்கள் உங்கள் காதலரைப் பற்றி மேலும் தெரிந்துகொள்ள உதவும் என்பதை மறக்காதீர்கள்.

ஒருவேளை, உங்களால் உங்கள் காதலரின் நட்பு வட்டத்தை முற்றிலுமாக ஏற்றுக்கொள்ள முடியவில்லையென்றால், அதைப் பற்றி காதலரிடம் தெளிவாகப் பேசிவிடுங்கள்.

அவர்களுடனான சந்திப்புக்களையும் குறைத்துக் கொள்ளலாம். ஆனால், உங்கள் காதலரைப் பற்றித் தெரிந்து கொள்ள அவருடைய நண்பர்களைக் காட்டிலும் வேறு எவரும் உங்களுக்குப் பெரிதாக உதவ முடியாது.

அதனால், அவர்களுடன் நட்புப் பாராட்ட உங்களால் முடிந்த முயற்சிகளைச் செய்யுங்கள்.



# வணிகம்



## தகவல் தொழில்நுட்ப வார நிகழ்வுகள்

வலி.வடக்கு, டிசெ.8

யாழ்ப்பாணத்தில் தகவல் தொழில்நுட்ப வார நிகழ்வுகள் கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் ரில்கோ விடுதியில் ஏற்றுமதி சேவைப் பணிப்பாளர் எஸ்.கே. மல்டன் தலைமையில் நடைபெற்றது.

அதில், இலங்கை தகவல் தொழில்நுட்ப முகவர் நிலையத்தைச் சேர்ந்த ரிசான் தேவபுர, ஹேலீஸ் நிறுவன முகாமைத்துவப் பணிப்பாளர் அருள் சிவகணநாதன், வைரஸ் நிறுவன பொது முகாமையாளர் மடு ரட்நாயக்கா உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் தகவல் தொழில்நுட்பம் மற்றும் ஏற்றுமதி வியாபாரம் சம்பந்தமான நிறுவனங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். (ற-86)

## வருடத்தின் சிறந்த சி.எஸ்.ஆர். வர்த்தக நாமமாக சமபோஷ

சிலோன் பிஸ்கட்ஸ் லிமிட்டெட் நிறுவனத்தின் துணை நிறுவனமான பிளெண்டி பூட்ஸ்(பிரைவற்) லிமிட்டெட் நிறுவனத்தின் முன்னணி தானிய ஆகாரமான சமபோஷ, அண்மையில் இடம்பெற்ற சிலிம் வர்த்தகநாம சிறப்பு விருதுகள் வழங்கும் விழாவில் வருடத்துக்கான சிறந்த சி.எஸ்.ஆர். வர்த்தகநாமம் பிரிவில் தங்க விருதை தனதாக்கிக் கொண்டது.

இந்த விருதானது வர்த்தகநாம உத்தியின் ஒருங்கிணைந்த பகுதியாக சுற்றுச்சூழல் மற்றும் வர்த்தகத்துக்குச் சிறப்பானவற்றை செய்து பேண்தகைமை நோக்கி சமபோஷ மற்றும்; பிளெண்டி பூட்ஸ் ஆகியவை வழங்கிய முன்னுதாரணமான பங்களிப்பை அடையாளப்படுத்துவதாக அமைந்திருந்தது.

வருடத்துக்கான சி.எஸ்.ஆர். வர்த்தக நாமம் பிரிவில் தங்க விருதை வென்றமையும், பேண்தகைமை மற்றும் எமது ஒட்டுமொத்த கூட்டாண்மை சமூக பொறுப்புணர்வு முயற்சிகள் தொடர்பான எமது ஈடுபாடு கௌரவிக்கப்பட்டமையும் பெருமைக்குரிய விடயமாகும் என பிளெண்டி பூட்ஸ் (பிரைவற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியும், பணிப்பாளருமான ஷம்மி கருணாரத்ன தெரிவித்தார்.

பின்தங்கிய ஒருங்கிணைப்பு திட்டம் மூலம் நிதிசார் மற்றும் தொழில்நுட்ப ஆதரவுகளை வழங்கி எமது விவசாயிகளின் பேண்தகைமைக்காக நாம் தொடர்ந்து செயற்பட்டு வருகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

நாட்டின் முன்னணி தானிய ஆகார வர்த்தகநாமமான சமபோஷ, உள்நாட்டில் விளையும் ஆரோக்கியமான மூலப் பொருள்களைக் கொண்டு உற்பத்தி செய்யப்படுகிறது. இந்நிறுவனமானது தேசிய விவசாய சமூகத்தினை மேம்படுத்துவதற்கு உதவியாக அதன் வணிக மாதிரி ஊடாக விவசாயிகளின் நலன் தொடர்பில் அக்கறை செலுத்தி வருகிறது.

இன்று நாடு முழுவதும் உள்ள 8000க்கும் மேற்பட்ட விவசாயிகள் சமபோஷ உற்பத்தியுடன் இணைந்து கொண்டுள்ளனர். பிளெண்டி பூட்ஸ் நிறுவனத்தின் பிரதான கூட்டாண்மை சமூக பொறுப்புணர்வு திட்டமான 'கொவி பவுல' மூலம் கிராமிய விவசாயிகளின் வாழ்க்கையை பலப்படுத்துவதற்குத் தேவையான ஆதரவு வழங்கப்படுவதுடன், அவர்களின் வாழ்க்கையும் மேம்படுத்தப்பட்டு வருகிறது. அவற்றுள் விவசாயிகள் மற்றும் அவர்களின் குடும்ப அங்கத்தவர்களின் குதூகலத்துக்காக 'கொவி சதுட்ட' திட்டம், அவசியமான தருணங்களில் உதவிகளை வழங்க 'கொவி சரண' திட்டம், விவசாய அறிவை மேம்படுத்த 'கொவி தெனும' திட்டம், சமய கலாசார அபிவிருத்திகளுக்கு 'கொவி அரண' திட்டம் போன்றன உள்ளடங்குகின்றன. (கு)

செய்திகள்

# தமிழர்களின் வரலாறுகள் பாடநூல்களில் வேண்டும்

## கொழும்பு அரசைக் கோரும் தீர்மானம் வடக்கு மாகாண சபையில் நிறைவேற்றம்

யாழ்ப்பாணம், டிசெ.8

தமிழர்கள் தொடர்பிலானதும், தமிழர்களின் அரசுகள் தொடர்பிலானதுமான வரலாறுகள் திட்டமிட்டு மறைக்கப்பட்டு வருகின்றன.

எனவே, தமிழர்களின் வரலாற்றை எதிர்காலச் சந்ததியும் அறிந்து கொள்ளும் வகையில், கொழும்பு அரசையும், வரலாற்று பாடநூல் சபையையும், வடக்கு மாகாண சபை கோரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற வடக்கு மாகாண சபை அமர்விலேயே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

"கடந்த பல வருடங்களாக எமது வரலாறு சம்பந்தப்பட்ட பாடப் புத்தகங்கள் தமிழர் வரலாறுகளை உள்ளடக்கி வெளியிடப்பட்டு வந்தன. ஆனால் படிப்படியாக தமிழர் வரலாறுகள் பாடப் புத்தகங்களிலிருந்து அகற்றப்பட்டு தற்போது ஏறக்குறைய முற்றாக நீக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கையானது எமது சிறார்கள், மூதாதையரின் வரலாறுகளை அறிந்து கொள்வதைத் தடுப்பதுடன் முற்காலத்தில், தமிழர் அரசுகள் இலங்கையில் இருக்கவில்லை என்பதை எமது பரம்பரையினருக்கு நிரூபிக்க எடுக்கும் செயலாகவே கருத வேண்டியுள்ளது. ஆகவே தமிழர் வரலாறுகளை எமது புத்தகங்களில் சேர்க்க மத்திய கல்வி அமைச்சையும் அதனூடான வரலாற்றுக்கான பாடநூல் சபையையும் கோருகின்றது"– என்ற தீர்மானத்தை ஆளுங்கட்சி உறுப்பினர் அ.பரஞ்சோதி முன்மொழிந்தார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த ஆளுங்கட்சி உறுப் பினர் கலாநிதி க.சர்வேஸ்வரன், "வரலாறுதிரிக்கப்பட்டமையாலேயே இனப்பிரச்சினை தோன்றியது. மகாவம்சம் புராணம் போன்றவை இன்று வரலாற்று நூலாக ஏற்றுக் கொள்ளும் அவலமும் தோன்றியுள்ளது. கடந்த காலங்களில் பாடப் புத்தகங்களில் இவ்வாறான பிரச்சினைகள் வருவதைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆனால் அது இனவாதிகளினால் தடுத்து நிறுத்தப்பட்டது. இனவாதிகள் இதற்கு ஒரு போதும் அனுமதிக்க மாட்டார்கள்"– என்று தெரிவித்தார். இதன் போது கருத்துத் தெரிவித்தஎதிர்க்கட்சித்தலைவர்சி.தவராஜா, இது தொடர்பில் ஆதாரங்களுடன் கொழும்பு அமைச்சிடம்சமர்ப்பிக்க வேண்டும் என்று தெரிவித்தார். (ற–5)



## திருமறை கலாமன்றத்தில் இடம்பெற்ற குருதிக் கொடை

யாழ்ப்பாணம், டிசெ.8

திருமறைகலாமன்றத்தின் இயக்குநர் மரியசேவியர் அடிகளாரின் 75 ஆவது பிறந்த தினமும் திருமறைக்கலாமன்றம்50ஆவது ஆண்டில் கால் பதிப்பதை முன்னிட்டும் யாழ். திருமறைக்கலாமன்றத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட குருதிக்கொடை நிகழ்வு கடந்த புதன்கிழமை பிரதான வீதியில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின் பணியகத்தில் இடம்பெற்றது. இதில் இளைஞர்கள் மிகுந்த ஆர்வத்துடன் கலந்து கொண்டு குருதிக் கொடை வழங்கினர். (வ–23)

## மருத்துவ பரிசோதனை

தென்மராட்சி ,டிசெ. 8

சுகாதார அமைச்சின் தேசிய சுகாதார வாரத்தின் 5 ஆம் நாளான வெள்ளிக்கிழமை மருத்துவப் பரிசோதனைகள் நடத்தப்பட்டன.

சாவகச்சேரி சுகாதாரத்திணைக்களத்தினர் சாவகச்சேரி பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் பிரதேச சபை தலைவர், உறுப்பினர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் ஆகியோருக்கும், கைதடி சித்த ஆயுள் வேதமருத்துவமனை மருத்துவர்கள், சித்த மருத்துவ பீட இறுதி ஆண்டு மாணவர்கள் ஆகியோர் கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலையில் தரம் 9 ,10,11 ஆகிய வகுப்பு மாணவர்களுக்கும் மருத்துவப் பரிசோதனைகளை மேற்கொண்டனர். (வ–9)

## சரசாலைவாசிகள் மூவர் செலுத்தினர் 5,000 ரூ. அபராதம்

தென்மராட்சி ,டிசெ. 8

வாகனத்தில் அளவுக்கு அதிகமாக மாடுகள் ஏற்றிச் சென்ற சரசாலைவாசிகள் மூவருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் கடந்த வெள் ளிக்கிழமை தலா 5 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது. பொலிஸாரால் மிருகவதைச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு கடந்த வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதிவான் மூவருக்கும் தலா 5 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதித்தார்.

இதேவேளை– தலைக்கவசம், சாரதிய அனுமதிப் பத்திரமின்றி மோட்டார் சைக்கிள் செலுத்திய நபருக்கு 7 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (வ–9)

## சக்திவாய்ந்த மின்குமிழ் பொருத்தும் பணி

தென்மராட்சி ,டிசெ. 8

சாவகச்சேரி நகர்ப்பகுதியில் சக்தி வாய்ந்த மின்குமிழ்கள் பொருத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பரீட்சார்த்தமாக கடந்த வெள்ளிக்கிழமை சாவகச்சேரி சந்தியில் முதலாவது மின்விளக்கு பொருத்தப்பட்டது. சாவகச்சேரிநகரசபையில்நடைபெற்ற கூட்டத்தில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனைதொடக்கம்சாவகச்சேரி நீதிமன்றச் சந்திவரை சக்தி வாய்ந்தமின்விளக்குகள்பொருத்துவது என்று தீர்மானிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (வ–9)

## வெள்ளத்தில் மூழ்கியுள்ள அனலைதீவின் சில பகுதிகள்



அண்மையில் பெய்த அடை மழையால் அனலைதீவுப் பிரதேசத்தின் பெரும்பாலான பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கிக் காணப்படுகின்றன. பிரதேசத்தின் பெரும்பாலான வீதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதுடன் மருத்துவமனை, பொதுநூலகம், பாடசாலைகள், ஆலயங்கள், குடியிருப்புகள் போன்றவற்றைச் சுற்றி மழை வெள்ளம் சூழ்ந்து காணப்படுகிறது. (வ–9)

## வெள்ளம் பாதித்த மக்களுக்கு புலம்பெயர் புளொட் உறவுகள் உதவி

வலி வடக்கு, டிசெ.8

வலி.மேற்கு சுன்னாகம் பகுதிகளில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு புலம்பெயர் உறவுகளான சுவிஸ், ஜேர்மன், பிரான்ஸ் மற்றும் நோர்வே நாடுகளிலுள்ள புளொட் உறுப்பினர்கள் உதவிகளைவழங்கியுள்ளனர்.

மூளாய் தேவாலயம், சுழிபுரம் காட்டுப் புலம், சுழிபுரம் பாண்டு வட்டை, வட்டுக்கோட்டை இன் பச்சோலை, மூளாய் வீரவத்தை தேவாலயம்மற்றும்கந்தரோடை முகாம் பகுதிகளில் தஞ்சம் அடைந்திருந்த சுமார் ஆயிரம் பேருக்கு 2 லட்சம் ரூபா செலவில் உணவுப் பொதிகள், வெற்றுச் சாக்குகள் பால்மாவகைகள், நுளம்புத்திரிப்பெட்டிகள் மற்றும் மருந்து வகைகள் என்பன இதன்போது வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் புளொட் அமைப்பின் தலைவரும், தமிழ்தேசியக் கூட்டமைப்பின் வட மாகாண சபைஉறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த் தன், வட மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன், வலி. மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் திருமதி நாகரஞ்சினி ஐங்க ரன், புளொட்டின் நோர்வே



கிளை அமைப்பாளர் இராசசிங்கம் சிவராஜா (ராஜன்) மற்றும் வலி.மேற்கு பிரதேச சபை உறுப்பினர்களும் கலந்து கொண்டு மக்களுக்கான பொருள்களை வழங்கினர். (வ–86)

# செய்திகள்

## பூநகரி விபத்தில் இளைஞன் சாவு



கிளிநொச்சி, டிசெ.8
பூநகரி – பரந்தன் வீதியில் நேற்றுமுன்தினம் 9 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் தென்னிலங்கையைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் உயிரிழந்தார். இந்த விபத்தில் இந்திக சில்வா (வயது 19) என்பவரே உயிரிழந்தவராவார்.
வீதியில் நின்றவரை வாகனம் ஒன்று மோதிவிட்டுத் தப்பிச் சென்றது என்று தெரிவிக்கப்படுகின்றது. இவர் பணி நிமித்தம் தென்னிலங்கையிலிருந்து பூநகரிக்கு வந்திருந்தார் என்று கூறப்படுகின்றது. உயிரிழந்தவரது உடல் கிளிநொச்சி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ற)

## காணி அபகரிப்பை எதிர்த்து செட்டிகுளத்தில் ஆர்ப்பாட்டம்

வவுனியா, டிசெ.8
வவுனியா, செட்டிகுளம், பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட ஆண்டியாபுளியங்குளம் பகுதியில் உள்ள வாழவைத்தகுளம் கிராமத்தில் உள்ள காணிகளை இராணுவம் அபகரிப்பதாக தெரிவித்து அப்பகுதி முஸ்லிம் மக்கள் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாலை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
வவுனியா, ஆண்டியா புளியங்குளம், பகுதியில் உள்ள வாழவைத்தகுளம் கிராமத்தில் விளையாட்டு மைதானம், ஆரம்ப பாடசாலை மற்றும் ஆரம்ப சுகாதார நிலையம் என்பவற்றை அமைப்பதற்காக ஒதுக்கப்பட்ட 12 ஏக்கர் நிலத்தில் கட்டுமானப் பணிகளைச் செய்யவிடாது இராணுவம் தடுத்துள்ளது என்று அவர்கள் தெரிவித்தனர்.
அத்துடன், காணியைச் சூழவும் வேலிகளை அமைக்க முற்பட்டதுடன் இராணுவத்துக்கு ஒதுக்கப்பட்ட காணி என அறிவிப்புப் பலகையையும் அப் பகுதியில் நிறுவுவதற்கு இராணுவம் முயன்றது. இக் காணிகளை துப்பரவு செய்து முதற்கட்டமாக விளையாட்டு மைதானத்தை அமைப்பதற்கு கிராம மக்களால் நடவடிக்கை எடுக்கப்பட்ட போதே இராணுவத்தால் தடை விதிக்கப்பட்டது என்றும் இக் காணிகளுடன் சேர்த்து தற்போது விவசாயம் செய்து வரும் 160 ஏக்கர் வயல் நிலத்தையும் இராணுவ தேவைக்காக சுவீகரிகரித்துள்ளதாக இராணுவம் தெரிவித்துள்ளது என்றும்ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்தனர்.
வர்த்தக கைத்தொழில் அமைச்சரும் வன்னி அபிவிருத்திக் குழு தலைவருமான ரிசாத் பதியுதீன், வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் நுனைஸ் பாரூக், செட்டிகுளம் பிரதேச சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர் எம்.ஐ. சாருக் அவர்களின் ஒதுக்கப்பட்ட நிதியின் மூலம் மைதான வேலைகளை ஆரம்பித்த போதே இராணுவத்தினர் தடுத்து நிறுத்தி தமது வேலிகளை அமைக்க முற்பட்டுள்ளனர். அதனால் அப் பகுதி மக்களுக்கும் இராணுவத்துக்கும் இடையில் முறுகல் ஏற்பட்டதுடன் மக்கள் ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர். இதனையடுத்து அப் பகுதி இராணுவ அதிகாரி வருகை தந்து மக்களுடன் கலந்துரையாடியிருந்த போதிலும் சமரசம் ஏற்படாத நிலையில் தொடர்ந்தும் அப்பகுதி மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
இதனையடுத்து பொலிஸ் அதிகாரிகளும் சமரசம் செய்ய முயற்சித்த போதிலும் அதுவும் பயனற்று ஆர்ப்பாட்டம் சுமார் இரண்டு மணி நேரம் இடம்பெற்றிருந்தது. ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் "வெளியேறு வெளியேறு இராணுவமே வெளியேறு, காணி அதிகாரம் இராணுவத்திற்கா? பிரதேச செயலகத்திற்காக?, அரசு தரும் காணிகளை இராணுவமே பறிக்காதே, வடபகுதி பகுதிக்கு காணி அதிகாரத்தை தா, இராணுவ அராஜகம் ஒழிக, அரசே ஒரு கையால் தருவதை மறு கையால் பறிக்காதே, அரச உறுப்பினரின் கிராமத்திற்கே இந்த நிலையா? போன்ற கோஷங்களை எழுப்பினர். இதேவேளை, எதிர்வரும் 8 ஆம் திகதிக்கு முன்பாக தமக்கான காணியை ஒப்படைப்பதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் தாம் வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபடப் போவதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (ற)

## ஹுனைஸ் பாரூக் வாகனம் மீது தாக்குதல்

கொழும்பு, டிசெ.8
ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்ட வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாரூக்கின் வாகனத்தின் மீது இனந்தெரியாதோர் நேற்று மாலை 5 மணியளவில் தாக்குதல் நடத்தியுள்ளனர்.
பொரல்லை, கோட்டா வீதியில் உள்ள அவரது இல்லத்தில் வைத்தே இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. சுமார் 11 பேர் கொண்ட குழுவால் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது என்றும், சம்பவத்தின் போது ஹுனைஸ் பாரூக் வீட்டில் இருந்தார் என்றும் கூறப்படுகின்றது. இந்தத் தாக்குதலில் ஹுனைஸ் பாரூக்கின் சகோதரர் இருவர், வாகனச் சாரதி ஆகிய மூவர் தாக்குதலுக்கு இலக்காகினர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)


பதவி வெற்றிடங்கள்

- Female Admin officer
- Receptionist

Age 20-32/ O/L, A/L
Salary Negotiable
Send Your CV With In 7 Days
WINSTAR
106, Postbox Junction,
Palaly Road,
Thirunelveli.
(54747)


## இலங்கை குடும்பத்தை நௌரு கொண்டு செல்வதற்கு எதிர்ப்பு

### போராட்டத்தையும் மீறி பொலிஸார் விமானம் மூலம் அனுப்பி வைத்தனர்

யாழ்ப்பாணம், டிசெ. 8
மேற்கு ஆஸ்திரேலியாவில் உள்ள பேர்த் தடுப்பு முகாமில் இருந்து, இலங்கையைச் சேர்ந்த இளம் குடும்பம் ஒன்றை நௌருவில் உள்ள தடுப்பு முகாமுக்கு கொண்டு செல்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட் டம் நடத்தப்பட்டுள்ளது.
எட்டு மாதங்களுக்கு முன்னர் ஆஸ்திரேலியாவில் புகலிடம் கோரிய இளம் தம்பதிகள், பின்னர், நௌரு தடுப்பு முகாமுக்கு அனுப்பப்பட்டிருந்தனர். அவர்களுக்கு குழந்தை பிறக்கவிருந்த நிலையில், மீண்டும் பேர்த்தில் உள்ள தடுப்பு முகாமுக்கு மாற்றப்பட்டனர்.
தற்போது அவர்களுக்கு குழந்தை பிறந்து ஆறு மாதங்களான நிலையில், மீண்டும் நௌரு தடுப்பு முகாமுக்கு அனுப்புவதற்காக, டார்வினில் உள்ள தடுப்பு நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர். பேர்த் தடுப்பு முகாமில் இருந்து இவர்களை டார்வினுக்கு அனுப்புவதற்காக விமான நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்ட போது அவர்கள் சென்ற வாகனத்தை மறித்து ஆஸ்திரேலிய அகதிகள் உரிமைக்கான நடவடிக்கை வலையமைப்பை சேர்ந்த சட்டவாளர்கள் போராட்டம் நடத்தினர்.
எனினும், ஆஸ்திரேலிய பொலிஸார் போராட்டம் நடத்தியோரைப் பலவந்தமாக இழுத்துச் சென்று அகற்றி, இலங்கைக் குடும்பத்தினரை விமானம்மூலம் டார்வினுக்கு அனுப்பி வைத்துள்ளனர். இவர்கள் உள்ளிட்ட 25 குடும்பத்தினரை ஆஸ்திரேலிய அரசு நௌரு தடுப்பு முகாமுக்கு அனுப்பவுள்ளது. (ற–5)

## அதிபர்களுக்கு இன்று கலந்துரையாடல்

மருதனார்மடம், டிசெ.8
வலிகாமம் கல்வி வலயத்துக் குட்பட்ட அதிபர்களுக்கான கலந்துரையாடல் இன்று காலை 9 மணிக்கு மருதனார்மடத்தில் அமைந்துள்ள வட இலங்கை சங்கீதசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
வலிகாமம் கல்வி வலய கல்விப் பணிப்பாளர் எஸ்.சந்திரராஜா மற்றும் உடுவில், தெல்லிப்பழை, சங்கானை, சண்டிலிப்பாய் கல்விக் கோட்ட கல்விப் பணிப்பாளர்களும் இக்கலந்துரையாடலில் கலந்து கொள்ளவுள்ளனர்.
வலிகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட அதிபர்களை இக் கலந்துரையாடலில் கலந்து கொள்ளும்படி வலிகாமம் கல்வி வலய அதிபர் சங்கத்தின் இணைச் செயலாளர்கள் கோரியுள்ளனர்.(ஒ–86)


சேவைநலன் பாராட்டு



செல்லத்துரை சிவானந்தன்
முகாமையாளர் -
இலங்கை வங்கி, கல்வியங்காடு
08.12.2014
வங்கியாளனாய் வலுநிறை பணிகள் செய்து
பொங்குபுகழ் பெற்றோயும் மேலோய் - பண்பான
நீர்வேலிக் கந்தன் நிறையருள் பெற்று நீவிர்
பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றோம்.
Best Wishes
கந்தசுவாமி தேவஸ்தானம்:
நீர்வேலி.


## விநாயகர் விரத இலச்சார்ச்சனை பெருவிழா

யாழ்ப்பாணம், டிசெ. 8
இருபாலை கோப்பாய் தென்கோவை அருள்மிகு கற்பகப் பிள்ளையார் தேவஸ்தான விநாயகர் விரத இலச்சார்ச்சனைப் பெருவிழா நேற்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 20 நாள்கள் நடைபெற்று எதிர்வரும் 26ஆம் திகதி வெள்ளிக்கிழமை கஜமுக சங்கார தினத்தில் இலச்சார்ச்சனைப் பெருவிழா நிறைவுறும்.
இலச்சார்ச்சனைப் பெருவிழா நாள்களில் சங்கடஹர சதுர்த்தி உற்சவம் நாளை மறுதினம் 10ஆம் திகதி புதன்கிழமையும், சதுர்த்தி உற்சவம் 25ஆம் திகதி வியாழக்கிழமையும் கஜமுக சங்காரம் 26ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெற்று அத்தினத்தில் இலச்சார்ச்சனைப் பூர்த்தியும் இடம்பெறும். (ற)


உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111



கனடாவில் படிக்க உழைக்க....

- சில மாகாணங்கள் IELTS இன் அவசியத்தை வலியுறுத்தாது படிக்க உழைக்க மாணவர்களை உள்ளீர்க்கவுள்ளது.
- IELTS இருப்பின் விசா வெற்றி உறுதி.
- 2 நாள்கள் மட்டும் - திங்கள், செவ்வாய் நேரில் சந்தித்து விண்ணப்பிக்கலாம்.

முற்பணம் – நுழைவுக்கட்டணம் இல்லவே இல்லை.
(ஞாயிறு மட்டும் விடுமுறை)

திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 221 9016



# விளம்பரங்கள்

## கடலில் தத்தளித்த இந்திய மீனவர்கள் சொந்த நாட்டுக்கு

மாதகல் கடற்பரப்பில் படகு பழுதடைந்து கடலில் தத்தளித்த நிலையில் மீட்கப்பட்ட இந்திய மீனவர்கள் மூவரும் இன்று அவர்களது சொந்த நாட்டுக்குஅனுப்பிவைக்கப்படவுள்ளனர். அவர்களின் உடல் நிலையைக் கருத்தில்கொண்டு அவர்களுக்குச் சிகிச்சைகள் வழங்கப்பட்டன. அதன்பின்னர் யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்தில் ஒப்படைக்கப்பட்ட மீனவர்களின் உடல் நிலைதற்போதுதேறியுள்ளதால், அவர்களது சொந்த நாட்டுக்குப்படகுமூலம் திருப்பி அனுப்புவதற்கான ஏற்பாடுகளை இந்தியத்துணைத்தூதரகம்மேற்கொண்டுள்ளது.

(ற-14)

# மரண அறிவித்தல்

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 27 | | 07 |
| 04 | | 12 |
| 1934 | | 2014 |



## சின்னத்துரை பரஞ்சோதி

(ஓய்வு பெற்ற வைத்தியசாலை மேற்பார்வையாளர்)

அல்வாய் தெற்கு 'செல்வஜோதி'யைச் சேர்ந்த சின்னத்துரை பரஞ்சோதி அவர்கள் நேற்று (07.12.2014) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் நீற்றா செல்வத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சின்னத்துரை நல்லதங்கம் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரும், சூசைமரியம்மா தம்பதிகளின் மருமகனும், சசிதரன், காலஞ்சென்ற சசிகரன் மற்றும் சசிகலா, சசிரேகா, சசிபாரதி, சசிவண்ணன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற செல்வவதனா காந்திமதி நிமலராஜன் தவராசா விஜயகுமார் ஆகியோரின் அன்பு மாமனும், சசிகாந், திருமதி மகிந்தன் சசீனா, சசீரா, சாந்தன், சசீக்கா, சசிப்பிரியா, விஜிதன் ஆகியோரின் பேரனும், அர்வின், பிரதிக்கா, றோசன், கோபிஷா, நிஷாரா, ஆகியோரின் பூட்டனும், காலஞ்சென்ற கனகசிங்கம், தங்கப்பாக்கியம் மற்றும் திருமதி ஆனந்தராசா சிவமலர் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 08.12.2014 திங்கட்கிழமை பிற்பகல் 02.30 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அல்வாய் பங்குவேம்படி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: ப. சசிவண்ணன் (மகன்)
(ஆசிரியர், வண்ணன் போட்டோ அன் வீடியோ உரிமையாளர், அல்வாய்)

செல்வஜோதி,
அல்வாய் தெற்கு,
அல்வாய்

(சி/18205)

# மரண அறிவித்தல்



## சங்கரப்பிள்ளை வைத்திலிங்கம்

கோண்டாவில் நெட்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற ஆசிரியர் சங்கரப்பிள்ளை வைத்திலிங்கம் அவர்கள் 07.12.2014 ஞாயிற்றுக்கிழமை காலமானார். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்

தகவல்
மகன்
வை.சங்கர்ராஜ்
(ஆசிரியர்.)

தொ.பே - 021 205 2792
077 800 9661

# மரண அறிவித்தல்



## திருமதி பராசக்தி (பவளம்) செல்லத்துரை

புங்குடுதீவு 12ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பராசக்தி (பவளம்) செல்லத்துரை நேற்று (07.12.2014) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை - செல்லம்மா தம்பதியரின் மகளும் விஸ்வலிங்கம் தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற செல்லத்துரையீன் மனைவியும், காலஞ்சென்றவர்களான விசாலாட்சி, கணேசன், சிவபாதம் மற்றும் கைலாசபிள்ளை கோபாலபிள்ளை ஆகியோரின் சகோதரியும், செல்வராணி, லலிதாராணி, பத்மராஜா (ராசன்), உதயராசா, காலஞ்சென்றவர்களான முருகராசா, ரவீந்திரராசா ஆகியோரின் அன்பு சிறியதாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.12.2014) திங்கட்கிழமை மு.ப. 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மணல்காட்டு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: சகோதரர்
க.கைலாசபிள்ளை

புங்குடுதீவு - 12

(54746)

# மரண அறிவித்தல்



## குழந்தைவேலு சிவப்பிரகாசம்

(முன்னாள் உரிமையாளர் - சிவப்பிரகாசம் அன்சன்ஸ்)

காரைநகர், பலகாட்டைப் பிறப்பிடமாகவும் 466, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட குழந்தைவேலு சிவப்பிரகாசம் நேற்று (07.12.2014) ஞாயிற்றுக்கிழமை சிவபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குழந்தைவேலு - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லையாபிள்ளை - தங்கமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புக் கணவரும், சண்முகதாஸ், குகதாஸ் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுகந்தினி, விஜியலட்சுமி ஆகியோரின் பாசமிகு மாமனும், பூமிஜா, பிரணவிமகேசிஜா, விதுஷன், இந்துஷன், மதுஷன் ஆகியோரின் பேரனும், காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் சௌந்தரம், காலஞ்சென்ற சிவஞானம் மற்றும் கமலாதேவி, தவமணிதேவி, இராமச்சந்திரன், இராசலிங்கம், இராசலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம், சண்முகராசா மற்றும் கிருஷ்ணவேணி, நடேசன், வரதராஜா, காலஞ்சென்ற சச்சிதானந்தம் மற்றும் மகேஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.12.2014) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

466, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 6220

தகவல்: குடும்பத்தினர்

(54748)

# 2 ஆம் ஆண்டில் வெற்றிகரமாக உங்கள் வீட்டு அறிவியல் சஞ்சிகை




~~ரூபா 100~~ ரூபா 60

## டிசம்பர் மாத இதழ் தற்போது விற்பனையில்

அரசியலோ பாலியலோ கலக்காத ஒரு பரிணாமப் படைப்பு

## தரம் 5 பல்திறன் பரிசுப் போட்டி


P. அம்பிகைபாகன்
கொழும்பு


N. S. தீபன்
வவுனியா


V. அன்பழகன்
யாழ்ப்பாணம்


K. சுதர்ஷன்
கொழும்பு

## நுழைவாயில்

- அடிமை ஏற்றுமதி (300 சடலங்கள்)
- O/L பரீட்சைக்கு தயாராவது எப்படி?
- தன்னம்பிக்கை வென்றது
- முயற்சி திருவினையாக்கும்
- மணவாழ்வில் மணம்வீச
- ரொமான்ஸ் இரகசியம்
- காதற் சுவை
- விந்தை உலகம்
- உறவுகள் சுகமானது
- மீளாத்துயரம்...
- மலாலை ஜோயா
- அர்ப்பணிப்புடன்...
- அழகான கால்களுக்கு
- வலைக் கீச்சுக்கள்
- பயம்
- கிழவனின் குதிரை
- இருட்டில் வைத்த குறி
- புரிதல்
- நீங்கள் நலமா?
- திருடன் போலீஸ்
- உங்களுக்குத் தெரியுமா?
- ஆசிரியப் பணியில்
- ஐம்பதிலும் ஆசைவரும்
- சுவர்களை உடையுங்கள் பாலங்களை உருவாக்குங்கள்
- வாசகர் வாழ்த்துக்கள்
- கிறிஸ்மஸ் ஸ்பெஷல்!
- பாலைவனத்து ஒட்டகம்
- அம்மாவின் கேள்வி - பதில்
- டிசம்பர் மாத இராசிபலன்
- குழந்தைகளும் நோய்களும்
- ஹொங்காங்கில் என்னதான் பிரச்சினை?
- 28 வருடங்களுக்குப்பின் மீண்டும் ஸ்ரீதேவி
- தோல் சுருக்கத்தைப் போக்க...
- முதலாம் ஆண்டு நிறைவு சிறப்புப்பக்கம்
- உலகம் கொண்டாடும் கிறிஸ்மஸ்

## போட்டிகள்

- விளையாட்டு அறிவுப் போட்டி
- குறுக்கெழுத்துப் போட்டி
- 130,000/= வினாவிடைப் போட்டி
- வர்ணம் தீட்டும் போட்டி (முன்பள்ளி)
- பல்திறன் அறிவுப் போட்டி (தரம் 4, 3)

இன்னும் பல சுவாரஸ்யமான அம்சங்களுடன் தற்பொழுது அமோக விற்பனையில்

உங்கள் பிரதிகளை பத்திரிகை முகவர்களிடமும் புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

விநியோகத் தொடர்புகளுக்கு:
0718 628379 / 011 5737592

விளம்பர தொடர்புகளுக்கு:
078 8864730 / 0787 273035

# தொடர்ச்சிகள்

### திடீர்

ஜனாதிபதித் தேர்தல் இடம்பெற வுள்ள நேரத்தில் திடீரென நகரில் இராணுவ அணிவகுப்பு நடத்தப் பட்டமை மக்கள் மத்தியில் பதற் றத்தையும் பரபரப்பையும் ஏற்ப டுத்தியது.

மன்னார்தள்ளாடிஇராணுவ முகா முக்கு முன் ஆரம்பமான அணி வகுப்பு மரியாதை மன்னார் பிர தான பாலத்தினூடாக மன்னார் நக ரின்மையப்பகுதியை அடைந்தது. பின் மீண்டும் தள்ளாடி படை முகாமை சென்றடைந்தது.

இராணுவஅதிகாரிகள்அருகில்வர, துப்பாக்கிகளைத் தூக்கிப் பிடித்த படி கரும்பச்சை நிறச் சீருடை அணிந்த சிப்பாய்கள் வேக நடை யில் நகருக்குள் நுழைந்ததைக் கண்ட மன்னார் கடைத்தொகுதி யிலிருந்த மக்கள் முதலில் என் னவோ ஏதோ என்று பதறியடித் தனர். பின்னர் பயிற்சி முடிந்த இரா ணுவத்தினரின் அணிவகுப்பு என்று தெரிந்த பின்னரே நிம்மதிப் பெருமூச்சு விட்டனர்.

(உ–56)

### தேர்தலுக்கு

நாளை செவ்வாய்க்கிழமை இந்தியா வுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ செல்லவுள்ளார். மறுநாள் புதன் கிழமை அதிகாலை திருப்பதி கோயி லுக்குச் சென்று வழிபாடுகளில் ஈடு படவுள்ளார்.

'ஈழத்தில் 2 ஆயிரத்துக்கும் அதிகமான இந்து ஆலயங்களை இடித்து தரை மட்டமாக்கிய மஹிந்தவை, திருப்பதி ஆலயத்தில் மரியாதையுடன் வரவேற் பது சாத்தானுக்கு சாமரம் வீசுவதற்கு இணையான செயலாகும். தமிழர்க ளின் உணர்வுகளை இதை விட மோச மாக யாராலும் புண்படுத்த முடியாது' என்று பா.ம.க நிறுவுனர் ராம தாஸ் தெரிவித்துள்ளார்.

'மஹிந்த ராஜபக்ஷ, இந்தியாவிற் குள் எப்போது வந்தாலும், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகம் அதனை எதிர்த்து அறப்போர் நடத்தும் என்று அறிவித்து இருக்கிறோம். எனவே, நாளை திருப்பதிக்கு வரும் ராஜபக் ஷவை எதிர்த்து, கறுப்புக் கொடி போராட்டம் நடக்கும்' என்று மதிமு.க பொதுச் செயலாளர் வை.கோ தெரிவித்தார்.

(ற–5)

### சிறுபான்மையினரது

"வெளிநாட்டு சக்திகளும் ஊடு ருவப்பார்க்கின்றன. அதற்கான ஓர் உதாரணமே வட மாகாண சபையில் செங்கோல் வீசி எறி யப்பட்டமை. போர் முடிந்தாலும் பிரச்சினைகள் தீரவில்லை. ஆகவே நிறைவேற்று அதிகார முறையை உடனடியாக நீக்க முடியாது மக் களின் தேவைகளை நாம் நிறை வேற்றியுள்ளோம். – என்று அவர் அங்கு மேலும் கூறினார்.

சிறுபான்மை மக்களோ அல்லது அவர்களின் அரசியல் கட்சிகளின் ஆதரவோ எமக்குத் தேவையில்லை. அவர்களின் ஆதரவின்றி எம் மால் வெற்றிபெறமுடியும்"– என் றும் அவர் தெரிவித்தார்.(ற–5)

### ஜீ.சீ.ஈ.

அவர்களில் 3 லட்சத்து 39 ஆயிரத்து 730 பாடசாலை மாணவர்களும், 2லட்சத்து 6ஆயிரத்து 481 தனிப் பட்ட பரீட்சார்த்திகளும் அடங்குவர். இவர்களுக்கென நாடு முழுவதும் 4ஆயிரத்து 279 பரீட்சை நிலையங் கள் அமைக்கப்பட்டுள்ளன என்று பரீட்சைத்திணைக்கள ஆணையாளர் நாயகம் டபிள்யூ.எம்.என். கே.புஸ்ப குமார தெரிவித்துள்ளார்(ற–108)

### போர்

"ஜனாதிபதி ஈழப்போரை முடிவுக் குக் கொண்டு வரும் திட்டம் ஒன் றைத் தயாரித்தார். அதனை அடிப் படையாக வைத்து இந்திய அதிகாரி களுடன் பேச்சு நடத்தினார். அந்தக் கலந்துரையாடல்களை அடுத்து, சமாதானத்துக்கு அவர் ஒருவாய்ப்பை வழங்கும் வகையில், முதல் நடவ டிக்கையாக விடுதலைப் புலிகளு டன் பேச்சு நடத்தினார்.

ஏனைய எல்லா வாய்ப்புகளும் அடைக் கப்பட்ட நிலையில், அவர் மீண்டும் போரைத் தொடங்கினார். போரில் பெற்ற வெற்றிக்கு எந்தவொரு கட்சிக்கும் உரிமை கொண்டாட முடி யாது. அது மஹிந்த ராஜபக்ஷவின் மூளையில் உதித்த குழந்தை"– என்றுஅவர்அங்குகுறிப்பிட்டார்.(ற–5)

### மைத்திரி

இவ்வாறு கட்சி தாவியவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று ஜனாதி பதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தி ருந்தார்.

இவ்வாறு ஒழுக்காற்று விசாரணை நடத்துவது, எதிரணிக்கே சாதகமாக அமையும். எனவே அத்தகைய நட வடிக்கையை முன்னெடுக்க வேண் டாம், என்று அமைச்சர்கள் குழு ஒன்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷவிடம் கோரியுள்ளது. அதனையடுத்து அந்த நடவடிக்கை ஜனாதிபதி தற்காலிகமாக ஒத்தி வைக் கப்பட்டுள்ளார் என்றும் கூறப்படு கின்றது.(ற–5)


### கட்சி

உள்ளூராட்சி சபை தேர்தல் வரலாற் றில் அதிக விருப்பு வாக்குகளைப் பெற்றவர் பிர சன்ன சோலங்க ஆராச்சி. இவர் அகில இலங்கை பி ரதேச சபைத் தலைவராகவும் பதவி வகித்து வருகின்றார். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைப் பிரதிநி தித்துவப்படுத்திய இவர், நேற்று பொது எதிரணி வேட்பாளர் மைத் திரிக்கு ஆதரவளிப்பதாகத் தெரிவித் துள்ளார்.

(ற–5)

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

(08.12.2014)



பிறப்பு
24.12.1956
08.02.1965

இறப்பு
08.12.2011
08.12.2011

மார்க்கண்டு உதயகுமார் உதயகுமார் வசந்திமாலா

**கருவில் உருவடித்து**
**ஊனில் உயிர் தந்து**
**வாழ்வில் வளம் தந்த**
**இதய தெய்வங்களே!**

அரக்கனின் அராஜகத்திற்கு ஆகுதி ஆனீரே
ஆண்டு மூன்று ஆனாலும்
ஆரும் இல்லை எம்துயர் போக்க
ஆண்டவனே! ஆணையிடு!
நீதி நிலைக்க, நீதித்தாயின் கண் திறக்க
அதுவே ஆருயிர் மருந்தாம் எமக்கு

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

*நீர்வேலி மேற்கு,*
*ராசவீதி,*
*4ஆம் மைல்,*
*நீர்வேலி.*

*பிள்ளைகள்*
*செந்தூரன், குகதீபன்,*
*சங்கீதன், கோபிகா.*

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி
செல்வராணி
கனகராசா



தோற்றம்
04.08.1949

மறைவு
08.12.2012

**அம்மா! உமையிழந்து ஆண்டு இரண்டு ஆனதுவோ!**
**ஆசைமுகம் மறைந்து அவலம் தான் சூழ்ந்ததுவோ!**
**செம்மையாம் சிரிப்பு செந்தளிப்பாம் பூவதனம்**
**சேர்ந்து மகிழ்ந்திருந்த செய்தியெலாம் மறைந்திடுமோ**
**உமைக் காக்க உழைத்தோம் முடியவில்லை**
**ஒவ்வோர் பொழுதுமிங்கு உம் நினைவில் வாடுகிறோம்**
**எம் வீட்டு நாயகியே! என்றென்றும் நாம் மறவோம்**
**இறைவன் தாள் மலரில் நீரமரப் பிரார்த்திப்போம்**

ஆடியபாதம் வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

கணவர், பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்



திருமதி
# அருந்தவ நாயகி தங்கராசா

யாழ்ப்பாணம், தும்பளை, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அருந்தவநாயகி தங்கராசா அவர்கள் நேற்று (07.12.2014) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகளும் செல்லப்பா - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தங்கராசா (ஓய்வு பெற்ற அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும், குமாரதாசன் (ஆசிரியர், யா/ சென்.ஜேம்ஸ் ம.வி) பிரேமதாசன் (ஆஸ்திரேலியா), தேவதாசன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், தர்மலிங்கம் காலஞ்சென்ற தர்மகுலசிங்கம், செல்வச்சந்திரா, சச்சிதானந்தம் ஆகியோரின் அன்பு சகோதரியும், நடராசா, செல்வராசா (ஓய்வு பெற்ற அதிபர்), காலஞ்சென்ற துரைராசா (ஓய்வு பெற்ற அதிபர்), காலஞ்சென்றவர்களான தவமணி, தயாமணி, மற்றும் மீனலோயினி, லோகராணி தவமலர், வாமதேவா (ஓய்வு பெற்ற வருமான மேற்பார்வையாளர்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் தேவகி, வித்தியா, கலைவாணி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், திலீபன் சசீனன், சர்விகன், வின்னுஜா, லோயிதா, மேனகன், தேனுயன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் தும்பளை வீதி, பருத்தித்துறையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (08.12.2014) திங்கட்கிழமை மு.ப. 11 மணிக்கு கோரியடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**242, தும்பளை வீதி, பருத்தித்துறை.**
**தொ.பே: 077 177 2600** (54754)

**தகவல்: குடும்பத்தினர்**

## கண்ணீர் அஞ்சலி



யாழ் மாவட்ட செயலக களஞ்சிய நலன்புரிக்கிளையில் முகாமைத்துவ உதவியாளராக கடமையாற்றும் திருமதி வி. சசிபாரதி அவர்களின் அன்புத்தந்தை

### சின்னத்துரை பரஞ்சோதி

அவர்கள் இறைபதம் அடைந்த செய்திகேட்டு ஆறாத் துயரடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதம கணக்காளர், கணக்காளர், மற்றும் சக உத்தியோகத்தர்கள், நிதிக்கிளை, களஞ்சிய நலன்புரிக்கிளை, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்

# செய்திகள்

## ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் இன்று

கொழும்பு, டிசெ.8
ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுத்தாக்கல் இன்று நடைபெறவுள்ளது. காலை 9 மணி முதல் 11 மணிவரை வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் எனத் தேர்தல் செயலகம் அறிவித்துள்ளது.

ஜனவரி 8ஆம் திகதி நடைபெறவுள்ள தேர்தலில் போட்டியிடுவதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, எதிரணியின் பொதுவேட்பாளர் மைத்திரி பால சிறிசேன உட்பட மொத்தமாக 18 பேர் இதுவரை கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர்.

இவர்களுள் 16 பேர் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் சார்பாகவும், இருவர் சுயேச்சையாகவும் களமிறங்கியுள்ளனர்.

அரசியல் கட்சி சார்பாக போட்டியிடும் வேட்பாளர் 50 ஆயிரம் ரூபா கட்டுப்பணமும், ஏனைய வேட்பாளர்கள் 75 ஆயிரம் ரூபா கட்டுப்பணமும் செலுத்தவேண்டும் என்பதுடன் கட்டுப்பணம் செலுத்துவதற்கான கால எல்லை நேற்று (ஞாயிற்றுக்கிழமை) நண்பகல் 12 மணியுடன் முடிவடைந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

ப 1 விரிவு

மேலும், வேட்புமனுத் தாக்கல் இன்று (திங்கட்கிழமை) காலை 9 மணி முதல் 11 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும் எனத் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய அறிவித்துள்ளார்.

அவற்றுக்கு எதிரான முறைப்பாடுகளும் இன்று காலை 9.30 முதல் 11.30 வரையிலான இரண்டு மணித்தியாலங்களுக்குள் ஏற்றுக்கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

வேட்புமனுக்களைத் தாக்கல் செய்வதற்கு வேட்பாளர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகளைத் தவிர, வெளியார் எவருக்கும் தேர்தல்கள் செயலக வளவுக்குள் பிரவேசிக்கவோ அல்லது ஊர்வலங்களை நடத்தவோ அனுமதியில்லை என்று குறிப்பிட்டுள்ள தேர்தல்கள் ஆணையாளர், தேர்தல்கள் ஆணையகத்தை அண் மித்த பகுதிகளில் ஒட்டப்பட்டுள்ள மற்றும் தொங்கவிடப்பட்டுள்ள அரசியல்வாதிகளின் பதாகைகளை உடனடியாக அப்புறப்படுத்துமாறும் வலியுறுத்தியுள்ளார்.

அத்தோடு, வேட்பாளர்களின் பாதுகாப்பைக்கருத்திற்கொண்டு இராஜகிரிய தேர்தல்கள் செயலக வளவிலும் அதனை அண்மித்த பகுதிகளிலும் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது எனப் பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

(ற-சி)

## மஹிந்தவைக் கூட்டில் ஏற்றவே பொது எதிரணி

### மைத்திரியின் 100 நாள் கதை பொய் நாடகம் என்கிறது அரசு



கொழும்பு, டிசெ.8
பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன 100 நாள்களில் நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்குவதாகக் குறிப்பிட்டு மக்களை ஏமாற்றி வாக்குகளைப் பெற முயற்சிப்பதாக அரசு கடுமையாகக் குற்றஞ்சாட்டியுள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது கருத்துத் தெரிவித்த தேசிய சுதந்திர முன்னணியின் ஊடகப் பேச்சாளர் முஸம்மில் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கொடூரமான போரை நிறைவுக்குக் கொண்டுவந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஐ.நா. மனித விசாரணை ஆணைக் குழுவால் தண்டனை பெற்றுக் கொடுக்கவே மைத்திரிபால தலைமையிலான பொது எதிரணி முயற்சிக்கின்றது. நாட்டில் அமைதியை ஏற்படுத்தி சமாதானத்தை உருவாக்கிய தலைவரை பொய்க் குற்றச்சாட்டில் தண்டனைப் பெற்றுக் கொடுக்க முயற்சிக்கின்றது.

மைத்திரிபால 100 நாள்களுக்குள் பல விடயங்களைச் செய்யப்போவதாக வாக்குறுதி வழங்கியுள்ளார். ஆனால், எதிரணிக்குள் தற்போதே பிரச்சினைகள் வெடித்துள்ளன. எதிர்க்கட்சிகளுக்கு அவர்களுடைய கொள்கையிலேயே குழப்பமான நிலை காணப்படுகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் இன்னும் விடுதலைப் புலிகளின் கொள்கைகள் இருக்கின்றன. அவர்களுடைய கோரிக்கைகளுக்கு உடன்படக்கூடியதாக எதிர்க்கட்சிகள் உள்ளன. இதனால் நாட்டில் மீண்டும் விடுதலைப்புலி இயக்கம் தலைதூக்கக் கூடிய அபாயம் நிலவுகின்றது" – என்று தெரிவித்தார்.

(ற-சி)

## நாட்டை மீட்க ஒன்றிணைய வேண்டும்

கொழும்பு, டிசெ.8
பாதாளத்தில் தற்போது விழுந்துள்ள நாட்டை மீட்பதற்கு நாட்டை நேசிக்கும் அரசியல்வாதிகளை போன்று, பொது மக்களும் ஒன்றிணைய வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

அத்தனகல்ல தொகுதியில் சிறி.சு.க ஆதரவாளர்களை சந்தித்த போதே அவர் இதனை தெரிவித்தார்.

"எனது தந்தை, தாய் மற்றும் எனது காலப்பகுதியில் சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் சமாதானமாக வாழ்ந்தனர். ஆனால் கடந்த ஓரிரு வருடங்களாக நாட்டில் இடம்பெற்ற விடயங்கள் குறித்து புதிதாக கூறுவதற்கு ஒன்றும் இல்லை. போரில் வெற்றிக் கொண்டதாக கூறி நாட்டில் உள்ள அனைத்து வளங்களும் இன்று சூறையாடப்படுகின்றன. அடிமட்டம் வரை சூறையாடியுள்ளனர். இந்த சொல்லிற்காக என்னை மன்னியுங்கள். சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஐக்கிய தேசிய கட்சி என இல்லை. நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்துள்ளோம்.."– என்று தெரிவித்துள்ளார். (ற)

## மஹிந்தவின் பரப்புரைக்காக இராஜதந்திரிகள் அழைப்பு

கொழும்பு, டிசெ.8
ஜனாதிபதித் தேர்தல் பரப்புரை நடவடிக்கைக்காக வெளிநாட்டுத் தூதரகங்களில் பணியாற்றும் இராஜதந்திரிகள் பலர் இலங்கைக்கு இரகசியமாக அழைக்கப்பட்டுள்ளனர்.

ப 1 விரிவு

அரச தரப்பின் வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷவின் தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளைக்கையாள்வதற்காக வெளிநாட்டுத் தூதரகங்களில் பணியாற்றும் இராஜதந்திரிகள் பலர் இலங்கைக்கு அழைக்கப்பட்டுள்ளனர் எனக் கூறப்படு கின்றது.

இவர்களில் பலர் வெளிவிவகார சேவையை சேராதவர்கள் எனவும், அரசியல் ரீதியிலான நியமனங்களைப் பெற்றவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஆஸ்திரேலியா தூதுவர் அட்மிரல் திஸர சமரசிங்க, ஜப்பானுக்கான தூதுவர் வசந்த கரன கொட மற்றும் பந்துல ஜயசேகர, லக்ஷ்மன் ஹுலுகல உட்படப் பலர் இவ்வாறு அழைக்கப்பட்டுள்ளனர்.

பகிரங்கப்படுத்தப்படாத இந்தப் பணிக்காக அவர்களுக்கு மேலதிக ஊதியமும், விசேட சலுகைகளும் வழங் கப்பட்டுள்ளன. அவர்கள் ஐந்து நட்சத்திர விடுதிகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். வெளிவிவகார அமைச்சிலுள்ள பலருக்குத் தெரியாமலேயே இவர்கள் அழைக் கப்பட்டுள்ளனர் எனவும் கூறப்படுகின்றது.

இதேவேளை, தெரிவுசெய்யப்பட்ட விதத்தில் அழைக்கப்பட்டவர்கள் தவிர, ஏனைய வெளிநாட்டுத் தூதுவர்களின் விடுமுறைகள் அனைத்தும் ஜனவரி 8ஆம் திகதி வரை இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை, அரசியல் ரீதியாக நியமனங்களைப்பெற்ற இன்னொரு தொகுதியினரும் மஹிந்தவின் தேர்தல் பரப்புரைக்காக அழைக்கப்படவுள்ளனர் எனவும் அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அரசுக்கு விசுவாசமான – துடிப்புடன் செயற்படக்கூடிய ஒரு குழுவினரே இவ்வாறு அழைக்கப்படவுள்ளனர் என அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன. (ற-5)

## மஹிந்த - மைத்திரி மோதல் தீவிரம்

கொழும்பு, டிசெ.8
ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் இரு பிரதான வேட்பாளர்களும் இன்று தமது வேட்பு மனுக்களைத் தாக்கல்செய்யவுள்ள அதேவேளை, அதனைத் தொடர்ந்து மஹிந்த – மைத்திரி மோதல் தீவிரமடையலாம் என்றஎதிர்பார்ப்புநிலவுகின்றது.

தேர்தல் செயலகத்தில் இடம்பெறவுள்ள வேட்புமனு கையளிப்பு நிகழ்வின்போது, தமது ஆதரவை வெளிப் படுத்துவதற்காக இரு பிரதான கட்சிகளும் தமது ஆதரவாளர்களை அழைத்துவரலாம் என்பதால் கொழும்பு நகரில் போக்குவரத்து நெருக்கடி ஏற்படலாம் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும், இராஜகிரியவைச் சுற்றியுள்ளபலபகுதிகளில்இன்றுபோக்குவரத்து தடைசெய்யப்பட்டுள்ளது.

ஜனவரி 8ஆம் திகதி நடைபெறவுள்ள தேர்தல் இதுவரை நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல்களில் கடும் போட்டியாகக் காணப்படுகின்றது.

மேலும், இம்முறை ஜனாதிபதித் தேர்தல் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக் குள்ளேயே இடம்பெறுவது போன்ற தோற்றமும் ஏற்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் எவர் வென்றாலும் அவர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவராகவே விளங்குவார்.

இதேவேளை, வேட்புமனுத் தாக்கலைத் தொடர்ந்து கட்சித்தாவல் தீவிர மடையலாம் எனவும் அரசியல் வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

(ற-சி)

## தீர்க்கமான முடிவை எடுக்கவேண்டும் மக்கள் - அரசு

கொழும்பு, டிசெ.8
ஜனாதிபதித் தேர்தல் குறித்து மக்கள் தீர்க்கமான முடிவை எடுக்க வேண்டும். அவர்கள் முடிவெடுக்க முன்னர் நாட்டின் பாதுகாப்பு, அரசின் ஸ்திரத்தன்மை மற்றும் கடந்த கால பொருளாதார முன்னேற்றம் என்பவற்றைக் கருத்தில்கொள்ள வேண்டும் என்று அரசு தெரிவித்தது.

நேற்று சிறிலங்கா சுதந்திரக் கட்சி யின் தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அமைச்சர் டலஸ் அழகப்பெரும இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "இலங்கையில் நிலவிய கொடிய போரை முடிவுக்குக் கொண்டுவந்ததன் பின்னர் நாட்டின் பாதுகாப்பு, அரசியல் ஸ்திரத்தன்மை மற்றும் பொருளாதார வளர்ச்சி என்பவற்றில் நல்ல நிலை காணப்படுகின்றது. ஆனால், இந்தநிலையைக் குழப்பி நாட்டில் மீண்டும் விடுதலைப்புலி இயக்கத்துக்குப் புத்துயிரளிக்க பொது எதிரணிக் கூட்டு முயற்சிக்கின்றது.

அதனைக் கருத்திற்கொண்டு மக்கள் ஜனவரி 8ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தலில் வாக்குகளைப் பிரயோகிக்குமாறு பணிவாகக் கேட்டுக்கொள்கிறோம்.

போரை முடிவுக்குக் கொண்டு வந்து சமாதானத்தை நிலைநாட்டியுள்ள நிலையில் மீண்டும் புலிகள் வெவ்வேறு வடிவங்களில் அரசுக்குஅச்சுறுத்தலாகஉள்ளனர். ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் புலம்பெயர் அமைப்புகள் மூன்று கோரிக்கைகளை முன்வைத்துள்ளன. அதில் பிரதானமாக புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழ்கின்ற தமிழ் மக்களுக்குத் தேர்தலில் வாக்களிப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்குமாறு. இதனை நாங்கள் முற்றாக மறுக்கின்றோம். காரணம், நாட்டின் அழிவுப்பாதைக்குக் கொண்டுசென்றவர்களைத் தேர்தலில் தீர்மானம்மிக்க சக்தியாகமாற்றமுடியாது. இவற்றை மைத்திரிபால ஏற்றுக்கொண்டுள்ளதாகத் தெரியவருகின்றது. இவ்வாறான பயங்கர நிலை தோன்றுமானால் மீண்டும் விடுதலைப்புலி இயக்கம் தலைதூக்கும் என்பதில் சந்தேகமில்லை" – என்றார்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சர் திஸ்ஸ விதாரண, தேசிய சுதந்திர முன்னணியின் ஊடகப் பேச்சாளர் முஸம்மில் ஆகியோரும் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தனர். (ற-சி)

# போராடி வென்றது இலங்கை

இலங்கை மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான 7 ஆட்டங்களைக் கொண்ட ஒரு நாள் தொடரின் நான்காவது ஆட்டத்தில் இலங்கை அணி போராட்டத்தின் பின்னர் வெற்றியைத் தட்டிப்பறித்தது.

முதல் மூன்று ஆட்டங்களும் நிறைவடைந்துள்ள நிலையில் இலங்கைஅணி இரு ஆட்டங்களிலும் இங்கிலாந்து அணி ஒரு ஆட்டத்திலும் வெற்றிபெற்றுள்ளன. தொடரில் நிலையான ஆதிக்கத்தை நிலைநாட்ட வேண்டுமாயின் கட்டாயம் இந்த ஆட்டத்தில் வெற்றிபெற வேண்டும் என்ற நிலையில் இங்கிலாந்து அணியும், இந்தியாவுடன் படுதோல்வியால் தொய்ந்திருக்கும் இலங்கை அணி, சொந்த மண்ணிலாவதுதொடரைக் கைப்பற்ற வேண்டும் என்ற உத்வேகத்துடனும் களமிறங்கியிருந்தன.

நேற்று கொழும்பு பிரேமதாச மைதானத்தில் நடந்த ஆட்டத்தில், நாணயச்சுழற்சியில்வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில்துடுப்பெடுத்தாடதீர்மானித்தது. ஆரம்பவீரர்களாக களமிறங்கிய அலி (19), கேல்ஸ் (0) என சொற்பஓட்டங்களுடன்வெளியேற இங்கிலாந்து அணி ஒரு கட்டத்தில் 29 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளை இழந்து தட்டுத் தடுமாறியது. ஆயினும் அதன்பின் வந்த மத்திய வரிசை வீரர்களின் சிறப்பான ஆட்டத்தால் 4 இலக்குகள் இழப்புக்கு 34 பந்துப் பரிமாற்றங்களில் 170 ஓட்டங்கள் என்ற கௌரவமானஓட்ட எண்ணிக்கைக்குச் சென்றது. ஆயினும் பின்வரிசை வீரர்கள் அதைத் தொடரத் தவறினர். பட்லர் (15), ஸ்ரோக்ஸ் (6), வோக்ஸ் (6), யோர்டான் (1) என வந்த வேகத்தில் பவிலியன் திரும்ப, இங்கிலாந்துஅணி50பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 265 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக ரெய்லர் 90ஓட்டங்களையும்,மோர்கன் 62 ஓட்டங்களையும், றூட் 36 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் இலங்கை சார்பாக டில்சான், ஹேரத்அஜந்தமெண்டிஸ்ஆகியோர் தலா 3 இலக்குகளையும் பிரசாத் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

266 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி எனும் இலகுவான இலக்குடன் களமிறங்கிய இலங்கையணிக்கு அதன் ஆரம்ப வீரரான டில்சான்16 ஓட்டங்களுடன்வெளியேறிஏமாற்றம்கொடுத்தார்.ஆனால் தொடர்ந்து வந்த சங்கா மற்றும் மஹேலவின் சிறப்பான இணைப்பாட்டத்தில் 96 ஓட்டங்கள் பகிரப்பட இலங்கையணியின் ஆதிக்கம் அதிகரித்தது. தொடர்ந்து களத்தில்நின்றசங்காஅதிகப்படியானபந்துகளை வீணடித்தார். அதனால் இறுதிப்பந்துப்பரிமாற்றம்வரை போராடி வெல்ல வேண்டிய இக்கட்டான நிலைக்குஇலங்கை தள்ளப்பட்டது. இலங்கையணி49.4பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து 267 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது.

அதிகப்படியாக சங்ககார 86 ஓட்டங்களையும்,மஹேல44ஓட்டங்களையும்,மத்தியூஸ்ஆட்டமிழக்காது51ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் இங்கிலாந்து சார்பாக யோர்டான் 2 இலக்குகளையும் வோக்ஸ் மற்றும் அலி ஆகியோர் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக சங்ககார தெரிவானார்.

7 ஆட்டங்களைக்கொண்டதொடரில் 3:1 என்ற அடிப்படையில் இலங்கை முன்னிலையில் உள்ளது. இரு அணிகளுக்குமான ஐந்தாவது ஆட்டம் நாளை மறுதினம் பல்லேகலயில் நடைபெறவுள்ளது. (ற–ரி)



அதிகப்படியாக 86 ஓட்டங்களைப்பெற்ற சங்ககார ஆட்டநாயகனாக தெரிவு செய்யப்பட்டார்.

## ஆஸிக்கெதிரான முதல் டெஸ்டில் டோனி களமிறங்க வாய்ப்பு

- தவான் ஆரூடம்

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதலாவது டெஸ்டில் ஆட்டத்தில் இந்திய அணித் தலைவர் டோனி விளையாட வாய்ப்புள்ளது என்று சக வீரர் ஷிகர் தவான் சூசகமாகத் தெரிவித்துள்ளார். இந்தியாமற்றும் ஆஸ்திரேலியா அணிகள்இடையிலான4ஆட்டங் களைக்கொண்டடெஸ்ட் தொடரில் முதலாவது டெஸ்ட் அடிலெய்டில் நாளை 9ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.அதுகுறித்து இந்திய அணியின் ஆரம்ப வீரர் ஷிகர் தவான் கருத் துத் தெரிவிக்கும்போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

"டோனி, விராட் கோஹ்லி இருவரும் ஆக்ரோஷமான தலைவர்கள். ஆனால் அணியை வழிநடத்தும் விதத்தில் நிச்சயம் இருவரிடமும் வேறுபாடுகள் உள்ளன. விராட் கோஹ்லி, களத்தில் ரொம்ப துடிப்புடன் காணப்படுவார். ஆனால் இருவரது தலைமையிலும் விளையாடுவது உற்சாகமான விடயம்."– என்று அவர் கூறியுள்ளார்.

"உரிய காலத்துக்குள் டோனி ஆஸ்திரேலியாவுக்கு வந்து விட்டால், இந்திய டெஸ்ட் அணியை வழி நடத்தும் வாய்ப்புக்காகவிராட்கோஹ்லிஇன்னும்நீண்டகாலம்காத்திருக்கவேண்டிஇருக் கும்.ஆஸ்திரேலியாவின் மிட்செல் ஜோன்சன், உலகின் தலைச்சிறந்த பந்து வீச்சா ளர்களில் ஒருவராக விளங்குகிறார். பந்தை அசுரவேகத்தில்துல்லியமாகவீசக்கூடியவர். ஆனால்இதுபோன்றவேகப்பந்துவீச்சைசமாளிக்கஏற்கனவே நாங்கள் பழகி இருக்கிறோம். அது மட்டுமின்றி ஜோன்சனுக்கு எதிராக நான் இந்திய மண்ணில் நடந்த சர்வதேச போட்டியிலும், ஐ.பி.எல். போட்டியிலும் விளையாடி இருக்கிறேன். ஆனால் ஆஸ்திரேலிய மண்ணில் அவரது பந்து வீச்சைச் சந்திக்கஇருப்பது இதுவே முதல்முறையாகும். இது எனக்குமிகப் பெரிய சவாலாக இருக்கும். ஆனால் அவரது பந்து வீச்சை உற்சாகமாக அனுபவித்து விளையாடுவேன் என்று நம்புகிறேன்."– என்று அவர் கூறினார்.



"ஆரம்பஆட்டக்காரர்என்பவர்ஆக்ரோஷமாக ஆடி ஓட்டங்கள் குவிப்பது மிகவும் முக்கியம். ஆஸ்திரேலியா வில் மட்டுமல்ல, இன்றைய காலகட்டத்தில் பொதுவாகவே ஆரம்ப வீரர் அதிரடியாக ஆட வேண்டியது அவசியமாகி விட்டது. இவ்வாறு ஆடுவது அணி சரியான உத்வேகத்துடன் பயணிக்க உதவும். எனது அணிக்காக நான் இது போன்று ஆட விரும்புகிறேன்"– என்றும் அவர் தெரிவித்தார்.(ற)

## ஹியூஸுக்கு ஆஸி. அணியினர் அஞ்சலி




[illegible]

ஹியூஸின் [illegible] மதிப்பளிக்கும் விதமாக அவருடைய டெஸ்ட் எண் 408ஐ தங்கள் சட்டைகளில் பொறித்துக்கொள்ள ஆஸ்திரேலிய அணியினர் முடிவு செய்துள்ளனர்.

ஹியூஸ், ஆஸ்திரேலிய டெஸ்ட் அணியின் 408ஆவது வீரர் என்பது குறிப்பிடத்தக்கது. அது தவிர ஹியூஸுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக மேலும் சில ஏற்பாடுகளை ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை செய்து வருகிறது.(ந)

# செய்திகள்

## முதல் ஆட்டத்தில் கிளார்க் விளையாடுவார்

### பிராட் ஹேடின் நம்பிக்கை



அடிலெய்டில் நடைபெறவுள்ள இந்தியாவுக்கு எதிரான முதல் டெஸ்ட் கிரிக்கெட் ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணித்தலைவர் மைக்கேல் கிளார்க் விளையாடுவார் என அந்த அணியின் இலக்குக் காப்பாளர் பிராட் ஹேடின் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

பிலிப் ஹியூஸின் உயிரிழப்பால் மனமுடைந்துபோன ஆஸ்திரேலிய வீரர்கள் கடந்த இரு நாள்களாக முதல் டெஸ்ட் ஆட்டத்துக்கான பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.


இந்நிலையில் இதுகுறித்துக் கருத்துத் தெரிவிக்கையில்,

"நாங்கள் மீண்டும் கிரிக்கெட்டுக்குத் திரும்பிவிட்டோம். கடந்த இரண்டு வாரங்களாக நடந் ததைப் பற்றிச் சிந்தித்து எங்களை குழப்பிக்கொள்ள மாட்டோம். பயிற்சியால் எங்கள் கால்களில் வலி ஏற்படுவதை விரும்பினோம். அது இப்போது கிடைத்துள்ளது. டெஸ்ட் ஆரம்பித்து விட்டால் நாங்கள் எங்களுடைய இயல்பான நிலைக்குத் திரும்பிவிடுவோம். டெஸ்ட் ஆரம்பித்தால் என்ன ஆகும் என்று யாரும் எண்ண வேண்டாம். நிச்சயம் செவ்வாய்க்கிழமை டெஸ்ட் கிரிக்கெட்டை காணவிருக்கிறீர்கள். உங்களைப் போலவே எங்களுக்கும் அது மகிழ்ச்சியளிப்பதாக இருக்கும். ஆஸ்திரேலிய ரசிகர்கள் மட்டுமல்லாமல் அனைவருடைய ஆதரவும் எங்களுக்குத் தேவை.

அடிலெய்டில் ஆஸ்திரேலிய அணிக்குத் தலைமை தாங்குவது பற்றி நான் யோசிக்கவில்லை. மைக்கேல் கிளார்க் நன்றாக பயிற்சி மேற்கொண்டார். அவர் எங்கள் அணிக்கு மிகவும் பலமாக இருக்கிறார். அவர் அடிலெய்டில் ஆடுவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகமாக உள்ளன. எங்கள் அணித்தலைவர் அடிலெய்டில் ஆஸ்திரேலிய அணிக்குத் தலைமை வகிப்பதையே நாங்கள் விரும்புகிறோம்"– என்று தெரிவித்தார்.

**ஊடகப் பணியில் ஜான்சன்**

முதல் டெஸ்ட் தொடர்பான பத்திரிகையாளர் சந்திப்பில் இருந்து மைக்கேல் கிளார்க் விடுவிக்கப்பட்டுள்ளார். கிளார்க்கிற்குப் பதிலாக வேகப்பந்து வீச்சாளர் மிட்செல் ஜான்சன் கலந்துகொள்வார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ற)



## தேர்வுக்குழு முடிவு அதிர்ச்சி அளிக்கவில்லை

**- சகீர்கான்**

உலகக் கிண்ணத் தொடருக்கான இந்திய அணியில் சேர்த்துக் கொள்ளப்படாமை குறித்துத் தான் அதிர்ச்சி அடையவில்லை என்று கூறியுள்ளார் முன்னணி வேகப்பந்து வீரர்களில் ஒருவராக திகழ்ந்த சகீர்கான்.

36 வயதான சகீர்கான் சர்வதேச ஆட்டங்களில் களமிறங்கி 8 மாதங்கள் ஆகிறது. பந்து வீச்சில் திறமை குறைந்ததால் சகீர்கான் அணியில் இருந்து ஓரங்கட்டப்பட்டார். 2 ஆண்டுகளுக்கு மேலாக ஒருநாள் போட்டியில் இருந்து நீக்கப்பட்டார். இறுதியாக 2012ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் இலங்கை அணிக்கு எதிரான ஒருநாள் ஆட் டத்தில் விளையாடினார்.

இந்திய அணியில் இருந்து தொடர்ந்து ஓரங்கட்டப்பட்ட அவர் உலகக் கிண்ணத் தொடருக்கான 30 பேர் கொண்ட உத்தேச அணியிலும் இடம்பெறவில்லை. அதுகுறித்துக் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

"சம்பியன் லீக் 'ரி/20' தொடரில் விளையாடுவதை இலக்காக வைத்து இருந்தேன். அது நடக்காதது எனக்கு அதிர்ச்சியை அளித்தது. உலகக் கிண்ண உத்தேச அணியில் இடம்பெறாதது எனக்கு ஆச்சரியம் அளிக்கவில்லை. உலகக்கிண்ணத் தொடர் தொடங்க இன்னும் சில காலமே உள்ளது.

நான் முழு உடல் தகுதியுடன் இல்லை. கிளப்புகள் இடையேயான ஆட்டம் அல்லது ரஞ்சி டிரா பியில் விளையாடுவதே எனது இலக்காக இருக்கிறது"– என்று அவர் தெரிவித்துள்ளார். (ற)

## உலகக் கிண்ண உத்தேச இலங்கை அணி அறிவிப்பு

உலகக்கிண்ண கிரிக்கெட் (2015) தொடருக்கான 30 பேர் கொண்ட இலங்கை உத்தேச அணி தெரிவு செய்யப்பட்டுள்ளது.

பந்து வீச தடை செய்யப்பட்டு, ஐ.சி.சியின் அனுமதிக்காக காத்திருக்கும் சுழற்பந்து வீச்சாளர் சசீத்ர சேனநாயக்கவும் அதில் இடம்பெற்றுள்ளார். அதே போல டில்ஹார பெர்னான்டோ, சமர கபுகேடிரா ஆகியோரும் காத்திருக்கின்றனர்.

புதிதாக அணியில் இடம்பெற்றுள்ள பந்துவீச்சாளர் லக்ஸ்ஹன் சந்தகன் இந்த உத்தேச அணியில் இடம்பெற்றுள்ளார். இவர் இங்கிலாந்து அணிக்கு எதிராக 4 ஆவது மற்றும் 5 ஆவது ஒருநாள் ஆட்டத்தில் இடம்பெற்றுள்ளார்.

30 பேர் கொண்ட உத்தேச இலங்கை அணியின் விவரம்:–

அஞ்சலோ மத்தியூஸ் (அணித்தலைவர்), டில்ஷான், லஹிரு திரிமன்ன, குமார் சங்கக்கார, மஹேல ஜெயவர்த்தன, குசால் பெரேரா, உபுல் தரங்க, திமுத்து கருணாரத்னே, தினேஷ் சண்டிமால், அஷான் பிரியன்ஜனா, கித்துருவான் விதானகே, நிரோஷன் டிக்வெல்ல, ரங்கன ஹேரத், டில்ருவான் பெரேரா, சீக்குகே பிரசன்ன, சசீத்ர சேனநாயக்க, அஜந்த மெண்டிஸ், தரிந்து காஸ்ஹல், ஜீவன் மெண்டிஸ், ரமித் ரம்புக்வெல, சுரங்க லக்மால், நுவன் குலசேகர, லசித் மலிங்க, தம்மிக்க பிரசாத், சமிந்த எரங்க, திஸர பெரேரா, பர்ளுஸ் மகரூப், நுவான் பிரதீப், லஹிரு கமகே, லக்ஸ்ஹன் சந்தகன். (ற)


**மாபெரும் மலிவு விற்பனை**

அன்பார்ந்த மாணவ, மாணவிகளே!

2015 ஆம் ஆண்டுக்குரிய எமது நிறுவன மற்றும் இலங்கையில் உள்ள முன்னணி வெளியீட்டாளர்களினது வெளியீடுகள், இந்திய வெளியீடுகள் மேலும் பல வகையான புத்தகங்கள் அனைத்தையும் **20% விலைக்கழிவில் பெற்றுக் கொள்ளலாம்.**

மற்றும் எழுது பொருள்கள், காகிதாதிகள், அப்பியாசப் புத்தகங்கள் அனைத்தையும் விசேட விலைக்கழிவில் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய இடம்:

**அம்பிகை புத்தக நிலையம்**

246, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சத்திரச்சந்திக்கு அருகில்)

(94742) (4.3.6) T.P:021 561 9294, 077 887 5357, 077 834 9507


**31 ஆம் நாள் நினைவு அஞ்சலியும் நன்றி நவிலலும்**



அன்னை மடியில் 01.08.1946

ஆண்டவன் அடியில் 09.11.2014

அமரர் **யோசவ் பிரான்சிஸ் சேவியர்** (சந்திரன்)

(Retd MIcroscopist)

கடந்த (09.11.2014) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவரின் 31 ஆம் நாளை நினைவுகூரும் வேளையில், இத் துயரச்செய்தி கேட்டு உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கட்கும், தொலைபேசி, ரெலிமெயில், கண்ணீர் அஞ்சலி பிரசுரம் மற்றும் பதாகை மூலம் தமது அனுதாபத்தையும், அன்பையும் தெரிவித்த நண்பர்கட்கும், அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் மற்றும் அன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த போது அவருக்கு சிகிச்சையளித்த வைத்தியர்கள் உத்தியோகத்தர்களுக்கும் புனித அன்னம்மாள் ஆலயப்பங்குச் சமூகத்தினர்க்கும் எமது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவரின் நினைவாக நாளை (09.12.2014) செவ்வாய்க்கிழமை காலை 6.00மணிக்கு யாழ் புனித அன்னாள் ஆலயத்தில் இடம்பெறும் இரங்கல் திருப்பலியிலும், அன்று மதியம் எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்திலும் பங்கு பற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.)

27/18 புங்கன்குளம் வீதி,
யாழ்ப்பாணம்.

மனைவி, மகள்.




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08.12.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# வரலாற்று சிறப்புமிக்க இந்த நாள் ஞாபகம் உள்ளதா?




**பாதுகாப்பான தேசம்**

வளமான எதிர்காலம்

இது கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரம்

# மரண அறிவித்தல்



## இராமநாதன் சோதிலிங்கம்

(அப்பையா அண்ணர்)

சுழிபுரம் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராமநாதன் சோதிலிங்கம் (05.12.2014) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பிரபல வர்த்தகர் இராமநாதன்- செல்லம்மா தம்பதியரின் சிரேஷ்ட மகனும், காலஞ்சென்றவர்களான நவரத்தினம்-யோகப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், தேவியின் அன்புக்கணவரும், சிவகுமார் (கனடா), செல்வகுமார் (நோர்வே) ஆகியோரின் அன்புத் தந்தையும், இரஞ்சினி (கனடா), சுமதி (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்றவர்களான தங்கரத்தினம், பூமணி மற்றும் தவராசா, இராசலட்சுமி (ஆஸ்திரேலியா), மகேஸ்வரி (கனடா), காலஞ்சென்ற குலவீர சிங்கம் ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்றவர்களான வேலாயுதம், மகேந்திரன் மற்றும் விமலாதேவி, சோமசேகரம் (ஆஸ்திரேலியா), சிறீதரன் (கனடா), சிவபாக்கியம் (கனடா), காலஞ்சென்ற மகேஸ்வரி (மலேசியா) மற்றும் சிவனேஸ்வரி, காலஞ்சென்ற கணேசதாசன் ஆகியோரின் மைத்துனரும், இராகவன், சிவானி (கனடா), நிசானி (கனடா), சிபீசன் (நோர்வே), மீராங்கி (நோர்வே), கபிலன் (நோர்வே) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.12.2014) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 11.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சுழிபுரம் கிழக்கு,
சுழிபுரம்.
T.P:021 300 1905

(54733)(4.3.6)

தகவல்:
குடும்பத்தினர்.

# அனுபவத்தின் பொக்கிஷம் முதியோர்

## வடமாகாண சபை உறுப்பினர் சிவமோகன் கருத்து



வவுனியா, டிசெ.8

முதியோர்கள் அனுபவத்தின் பொக்கிஷங்கள் அவர்கள்தான் இளைய தலைமுறையின் வழி காட்டிகள் என்று தெரிவித்தார் வடமாகாண சபை உறுப்பினர் மருத்துவர் சிசிவமோகன்.

வவுனியா மகாறம்பைக்குளத்தில அண்மையில் முதியோர் தினம் கொண்டாடப்பட்டது அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

வருடம் தோறும்'நாம் கொண் டாடுகின்ற முதியோர் தினமானது அவர்களை முதியோர் என்று தனிமைப் படுத்தி காட்டுகின்றோம். இந்தத் தினத்தை பெரியோர் தின்மாகக் கொண்டாட வேண்டும். அவர்கள் தாம் நிழல் ஆற முடியாது அந்த மரத்தின் பழங்களை உண்ண முடியாது என்று தெரிந்தும் தங்களது கடைசிக் காலத்தில் மரங்களை நடுவதில் ஊக்கமாக இருப்பார்கள்.

அவர்கள் தங்கள் ஓய்வு நேரத்தை கழிப்பதற்கான வசதிகளை ஒவ்வொரு கிராமம்தோறும் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். பெரியவர்களை அவர்களது காலத்தில் கௌரவமாக நடத்த வேண்டியது தற்போதைய இளைஞர் சமுதாயத்தின் தவிர்க்கமுடியாத கடமையாகும்" - என்றார்.

நிகழ்வில் கலந்து கொண்ட பெரியவர்ளுக்கு ஒரு தொகுதி பரிசுப் பொருள்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. வடமாகாண சபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் மற்றும் முதியவர்கள் பலரும் நிகழ்வில் கலந்துகொண்டனர். (வ-402)

# மரண அறிவித்தல்



## வல்லிபுரம் கனகசபை

கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், குடத் தனையை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் கனகசபை 06.12.2014 சனிக் கிழமை கால மானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - பத்தினி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற வைத்திலிங்கம் மற்றும் செல்லப்பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், மதியாபரணத்தின் அன்புக் கணவரும், கலாவதி (குடத்தனை) கனகலிங்கம் (கனடா), தியாகலிங்கம் (சுவிஸ்), அமிர்தலிங்கம் (ஜேர்மனி), சிவாஸ்கரலிங்கம் (குடத்தனை), ஆகியோரின் அன்புத் தந்தையும், பரமேஸ் வரன், கமலாம்பாள், சூரியகெங்கா, பிரியங்கா, பிரீதா ஆகியோரின் அன்பு மாமனும், கலாநிதி, தயாநிதி, மரன்ராஜ், சுயானா, ஆர்த்திகா, கவீனன், திவாகர், திவ்வியா, அனுயா, அனோச், அக்சயா, ரேகினி, கோபினி ஆகியோரின் பேரனும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை, வள்ளிப்பிள்ளை, கிட்டிணபிள்ளை, காலஞ் சென்ற நடராசா, தங்க வேலு, ஜீவகத்தினர், சுப்பிரமணியம், லோக நாதன் அகியோ ரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.12.2014) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10 மணியளவில் குடத்தனை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

குடத்தனை கிழக்கு,
குடத்தனை,
077 247 9090

(54738 (45.6)

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

பிறப்பு
25
.
05
.
1940



இறப்பு
07
.
12
.
2014

## அப்பாத்துரை பழனிவேல்சாமி

(ஓய்வுபெற்ற எழுதுவினைஞர் - பிரதேச சபை கட்டைவேலி)

இன்பருட்டி, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் தும்பளை பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட அப்பாத்துரை பழனிவேல்சாமி நேற்று (07.12.2014) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பாத்துரை - கண்மணி தம்பதியரின் அன்பு மகனும், கமலாதேவியின் பாசமிகு கணவனும், காலஞ்சென்றவர்கள்ான செரக்கலிங்கம்-செல்வரத்தினம் தம்பதியரின் பாசமிகு மருமகனும், அருளானந்தசாமி, சிவகாமி அம்மா ஆகியோரின் உடன் பிறந்த சகோதரனும், காலஞ்சென்ற பாலசுந்தரம் மற்றும் தங்கராணி ஆகியோரின் பிரியமான மைத்துனரும், காலஞ்சென்ற உதயராசா, உதயராணி (சுவிஸ்), இன்பராணி, பிறேமராணி, விஜிதராணி (நோர்வே), கண்ணதாஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கண்ணதாசன் (சுவிஸ்), சந்திரகலா (ஜேர்மன்), வெற்றிவேல், யோகேஸ்வரன், (மைதிலி ஆட்ஸ்),சந்திரமோகன் (நோர்வே), சுதர்சினி ஆகியோரின் பாசமிகு மாமனும், சத்தியா (சுவிஸ்), மகிந்தராஜ் (சுவிஸ்), கௌசியா (சுவிஸ்), பிரதீபா (ஜேர்மன்), உஷா (அபிவிருத்தி உத்தியோகத்தர்), அனுஷா (குடும்பநல உத்தியோகத்தர்), கிரிதரன், கஜேந்திரன் (பிரான்ஸ்), மயூரன், மைதிலி (பல்கலைக்கழக மாணவி),செந்தூரன், பிறைநிலா, சரவின் (நோர்வே), சரணியா (நோர்வே), பிரசாந்தி (பிரான்ஸ்), கௌதமன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பேரனும், ஹரிஸ் (சுவிஸ்), ரிஷிகா (சுவிஸ்), றொசானா (சுவிஸ்), சனா (சுவிஸ்), தபிஷன், ரகுராம் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.12.2014) திங்கட்கிழமை அவரின் மகளின் இல்லதில் (முருகன் கோயிலடி, நெல்லண்டை வீதி, தும்பளை) நடைபெற்று முற்பகல்10.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், அன்பர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நெல்லண்டை வீதி,
தும்பளை, பருத்தித்துறை.
T.P. 077 923 0254, 077 290 0002

(சி.18202) (45.6)

தகவல்:
குடும்பத்தினர்

# விளம்பரங்கள்

## சாவகச்சேரி மருத்துவமனை இயன் சிகிச்சைக்கு புதிய கருவி

தென்மராட்சி, டிசெ.8

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் இயங்கும் இயன் மருத்துவ பிரிவில் சிகிச்சை வழங்கவென புதிய கருவி யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையால் வழங்கப்பட்டு அந்தக் கருவி மூலம் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

குறித்த மருத்துவமனை இயன் மருத்துவப் பிரிவில் சிகிச்சை பெற வருவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதையிட்டு நிர்வாகம் மேற்கொண்ட நடவடிக்கையின் பயனாக புதிய கருவி வழங்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகிறது.

மூட்டுவாதம் கழுத்து, இடுப்பு போன்ற பாதிப்புக்கு உள்ளானவர்களுக்கு இந்தக் கருவி மூலம் இலகுவாக சிகிச்சை அளிக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை குறித்த கருவி இலங்கையில் கொழும்பு தேசிய மருத்துவமனையில் மட்டும் பொருத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ–9)

### தவறிவிட்டது

K.P. கோயிலடி, உடுவில் கிழக்கு, சுன்னாகத்தைச் சேர்ந்த செல்லத்துரை சண்முகானந்தன் என்பவரின் தேசிய அடையாள அட்டை(610161197V) யாழ்நகருக்கும் இணுவிலுக் கும் இடையில் தவறிவிட்டது.

தொடர்பு: 021 790 2224 (54739) (45.)

### JOB OPPORTUNITY

POSITION-
HOTEL RECEPTIONIST
(Female)
A/L Passed and fluent in English with communication skills &computer knowledge
Interview on 9th December 2014
come with CV
PILLAIYAR INN,
31,ManipayRoad, Jaffna.
Tel-0212222829
Fax-0212224449
Email-pillaiyar.in@gmail.com
(54740)(4.3.6)

## இரத்த தானம் வழங்கிய 49 பேர்

அளவெட்டி,டிசெ.8

கடந்த வெள்ளி, சனிக்கிழமை ஆகிய இரு தினங்களிலும் இடம்பெற்ற தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை இரத்த வங்கியின் நட்மாடும் சேவையினரால் 49 பேரிடம் குருதி சேகரிக்கப்பட்டது. கடந்த வெள்ளியன்று தாவடி சாகாய கட்டட ஒப்பந்த நிறுவனத்தின் ஊழியர்கள் 22 பேர் குருதிக் கொடையை வழங்கி இருந்தனர்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை ஏழாலை மகாவித்தியாலயத்தில் பொலிஸ் ஏற்பாடுசெய்ய இரத்தான முகாமில் பொலிஸாரும் இராணுவத்தினருமாக 27பேர் குருதிக் கொடை வழங்கினர். (ஒ–36)

## பயணிகள் வாகன தரிப்பிடம் அமைக்க நிதி ஒதுக்கீடு

தென்மராட்சி, டிசெ.8

சரசாலை கனகன்புளியடிச் சந்தி நுணாவில் வீதியில் 2 லட்சம் ரூபா செலவில் பயணிகள் வாகன தரிப்பிடம் அமைக்கப்படவுள்ளது. மக்கள் பிரதிநிதிகளின் விசேட அபிவிருத்தி வேலைத்திட் டத்தின் கீழ் சாவகச்சேரி நகர சபை உறுப்பினர் அலெக்ஸாண்டர் இதற்கான நிதியை ஒதுக்கீடு செய்துள்ளார். இந்த பயணிகள் வாகன தரிப்பிடக் கட்டட வேலைகள் சாவகச்சேரி நகர சபையினால் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ–9)

### செல்லா சினிமா யாழ்ப்பாணம்

விஜய், சமந்தா நடிப்பில்




(தினசரி 4 காட்சிகள்)
10.30, 2.30, 6.30, 9.30

எமது செல்லா சினி திரையரங்கில் உங்களது விளம்பரங்களை காட்சிப்படுத்த அழையுங்கள்: 077 326 6949

### வீடு விற்பனைக்கு

கச்சேரி கிழக்கு ஒழுங்கையில் A9 வீதிக்கு அருகில் கச்சேரிக்கு அருகில் 3 அறைகளுடன் ஒரு இணைந்த குளியலறையும், விசாலமான ஹோலுடன் கூடிய 3½ பரப்புடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 517 1874 (54728) (45.6)

### வீடு வாடகைக்கு உண்டு

கொக்குவில் கிழக்கு,
கொக்குவிலில் (றயில்றோட்),
வீடுவாடகைக்கு உண்டு.

தொடர்பு: 077 808 3425 (54731) (45.3)

### வீடு வாடகைக்கு உண்டு

மருதனார்மடம் உரும்பிராய் றோட்டில் இணுவில் றயில் நிலையத்துக்கு முன்னால் உள்ள வீடு வாடகைக்கு உண்டு. வாடகை நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: 077 298 0757, 077 298 0754 (54737) (45.3)

### தவறிவிட்டது

கோண்டாவில் வடக்கு, தில்லையம்பல வீதியைச் சேர்ந்த கிஷ்ணபாலன் பகீரதன் என்பவரது தேசிய அடையாள அட்டை (950221194V) பேர்சுடன் கடந்த (04.12.2014) வியாழக்கிழமை நல்லூர் வீதிக்கும் கோண்டாவிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ளவும்

தொடர்பு: 077 909 6022 (54736) (45.3)

### வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், அரியாலையில் கனகரட்ணம் வீதி வேலப்பர்லேனில் அமைதியான சூழலில் அமைந் துள்ள 3 பரப்பு காணியுடன் கூடிய வீடு விற்பனைக் குண்டு.

தொடர்பு: 077 627 2629
077 500 4869 (54743) (45.)

### வீடு வாடகைக்கு உண்டு

190/9, முதலாம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணத் தில் (வேம்படி மகளிர் கல்லூரிக்கு அருகில்) சகல வசதிகளும் கொண்ட மேல்மாடி வீடு வாடகைக் குண்டு. (கீழ்வீடு குசினி உட்பட 3அறை, மேல் வீடு குசினி உட்பட 3 அறை உண்டு)

தொடர்பு: ச. கனேசதாசன்
077 537 3797 (54743) (45.)

### புதிய பிரிவுகள் ஆரம்பம்

DMI INTERNATIONAL ENGLISH COLLEGE — DMI COMPUTER EDUCATION — City & Guilds

**சர்வதேச ஆங்கில பரீட்சைகள்**

**A1, A2, B1 B2** (ESOL) Diploma International English for Speakers of other Languages

திருமணம் செய்து நிரந்தர விசாவில் London செல்பவர்கள், உயர்கல்விக்கு UK செல்வோருக்கு பிரித்தானியஅரசால் கோரப்படும் ஆங்கில பரீட்சை

எமது நிறுவனத்திலே கற்று நிறுவனத்திலேயே பரீட்சைக்கு இலகுவாக தோற்றமுடியும்.

சித்தியடைவதற்கான 100% உத்தரவாதம்

**IELTS** (Duration: 50 hrs with 5 mock exams)
- Latest training materials.
- Skills development in all four categories.
- Personalised guidance and ample of opportunities to interact with the lecturer.

DMI British Council . இன் அங்கீகரிக்கப்பட்ட IELTS பரீட்சை பதிவு மையமாகும்.

**ஆங்கிலம் பேசுவதற்கு உத்தரவாதம்**

**Spoken English** Veta Fluency Diploma

யாழில் பல்கலைக்கழக, தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் 5000க்கு மேற்பட்டோர் தெரிவு செய்து வெற்றி பெற்று நிரூபிக்கப்பட்ட

ஒரே ஒரு முழுமையான ஆங்கிலக்கற்கைநெறி

**MiKids ENGLISH** சிறார்களுக்கான ஆங்கில கற்கைநெறி

ஆங்கிலத்தில் ஒரு வலுவான அடித்தளத்தை உருவாக்கி குழந்தைகள் முறையான உச்சரிப்புடன் ஆங்கிலம் பேச பிரித்தானிய ஆங்கிலக்கற்கை நெறியாகும்.

**DMI INTERNATIONAL ENGLISH COLLEGE**

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் |
|---|---|---|---|
| No.113, கஸ்தூரியார் வீதி, (சயன்ஸ் ஹோல் அருகாமை) | M.M.V வீதி. | கண்டி வீதி. (HNB அருகில்) | No. 130, கே.கே.எஸ். வீதி. (NSB வங்கி அருகில்) |
| Tel.: 021-222 4403 | Tel.:021-226 2470 | Tel.:021-227 0775 | Tel.:021-224 1970 |

### சிற்றுண்டிச் சாலைக்கான கேள்விப்பத்திரம் கோரல்

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியின் 2015 ஆம் ஆண்டுக்கான சிற்றுண்டிச்சாலையை நடத்துவதற்கான கேள்விப்பத்திரம் பெண்களிடம் இருந்து கோரப்பட்டுள்ளது. நாள் ஒன்றுக்கு ஆகக் குறைந்தது 475 ரூபா கேள்வித் தொகையாகும். விண்ணப்பிப்பவர்கள் தமது சுய விவரத்துடன் எதிர்வரும் 20.12.2014 இற்கு முன்னர் அதிபர், இராமநாதன் கல்லூரி மருதனார்மடம் சுன்னாகம் என்னும் முகவரிக்கு சுய விவரங்களுடன் விண்ணப்பங்களை நேரிலோ அல்லது தபாலிலோ அனுப்பிவைக்கும்படியும், விண்ணப்பங்கள் 23.12.2014 முற்பகல் 10 மணிக்கு பரிசீலிக்கப்படும் எனவும் விண்ணப்பதாரர்கள் நேரில் கலந்து கொள்ளவேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதிபர், இராமநாதன் கல்லூரி, மருதனார்மடம், சுன்னாகம்

தொடர்பு: 021 224 1762 (சி.18097) (45.6)

### வேலை ஆள்கள் தேவை

**சைவ உணவகம்** ஒன்றுக்கு கீழ்வரும் வேலையாள்கள் தேவை. மூன்று நேர உணவு, தங்குமிடவசதி, மாதாந்த சம்பளம் இவை அனைத்துடனுமான வேலை வாய்ப்பு

01. சப்பிளையர் (உணவு பரிமாறுதல்)
02. சமையலறை வேலையாள்கள்
03. சுத்திகரிப்பாளர்கள்
04. காசாளர்
05. ஏனைய இதர வேலைகளுக்கும்

தொடர்பு கொள்ளவும்: 077 791 7753

(வேலை நாள்களில் தொடர்புகொள்ளவும்)

36, 38 பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம்.

(சி.18097) (45.6)

### யா/கொற்றாவத்தை அ.மி.த.க. பாடசாலை வல்வெட்டித்துறை

Successful Grade Five Scholarship Candidates-2014




சித்தியடைந்தோர்:

| | | | |
|---|---|---|---|
| சி.ராகவி -147 | பி.பிரதீபன் -147 | வி.நிதர்சன் -147 | செ.கிருபாஞ்சலி -142 |
| சி.செளமியா-134 | கு.திவாஜினி -131 | வ.சந்தோஸ் -120 | க.சந்தியா -119 |
| அ.சஞ்சயன்-107 | அ.லக்சாயினி-107 | ஜெ.ஜெனிசா-105 | சி.அனுசியா -102 |
| கு.பிரித்திகா -100 | இ.அபிநயன் -99 | சு.திவாகரன் -99 | த.வைஸ்ணவன்-93 |
| அ.மதுசா -93 | வி.நிதுர்சன் -88 | சூ.சிநேகா -80 | ஜெ.மேகலன் -79 |
| கா.வானுஜா-78 | அ.பிரியங்கா -78 | அ.அபிர்சன் -83 | த.தனுஸ் -73 |
| | | க.அருசன் -73 | |

ஆகிய மாணவர்களையும் 77-5% எனும் உயர் சித்தி வீதம் எய்த அர்ப்பணிப்போடு செயலாற்றிய ஆசிரியர்களான திருமதி திருஞானசேகரன் தெய்வரதி திருமதி சின்னராசா யோகராணி ஆகியோரையும் அதிபர் அவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாரதி ச.ச.நி- பொலிகண்டி, நியூட்டன் ச.ச.நி- சமரபாகு, கலைமதி ச.ச.நி-நவிண்டில், கலைவாணி ச.ச.நி- கொற்றாவத்தை, ஸ்ரீ அம்பாள் ச.ச.நி- நாச்சிமார் கோவிலடி.

(சி/18096)(4.3.6)

## CAPS SPOKEN ENGLISH

Registered NADS 1354

மாணவர்களே!
ஆங்கிலத்தில் விரைவாகப் பேசிப் பயில
இன்றே எம்மை நாடுங்கள்



- முற்றிலும் நவீன முறையில் 100 மணித்தியாலங்களில் ஆங்கிலத்தில் பேசி மகிழுங்கள்!
- முன் அனுபவம் மிக்க பிரபல்யமான ஆசிரியர் குழுவினர்
- நுட்பமான விரைவான ஆங்கிலம் பேசும் பயிற்சி

தரம் 6 தொடக்கம், சாதாரணதரம், உயர்தரம், பல்கலைக்கழகம், பாடசாலை விட்டு விலகியோர் அனைவரும் பயிற்சிக்காக இணைந்து கொள்ளலாம். தொடர்பு கொள்ள

Spoken English with a new approach.

Mobile No.077 656 5258
Office 021 205 2240

CAPS
52 Palaly Road
Thirunelvely Junction (Near Sampath Bank)

(54735)(4.3.5)

# விளம்பரங்கள் / செய்திகள்

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

### திருமதி மகேஸ்வரி தருமலிங்கம்

(ஓய்வுபெற்ற நெசவு ஆசிரியை)



அன்னை மடியில்
28.11.1934

இறைவனடியில்
10.11.2014

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் திருமதி மகேஸ்வரி தருமலிங்கம் அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் இன்று (08.12.2014) திங்கட்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்தியம் 10.12.2014 புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெற உள்ளது. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். எங்கள் அம்மாவின் துயரச்செய்தி கேட்டு நேரில் வந்தும், தொலைபேசி ஊடாகவும் பல வழிகளிலும் எமக்கு ஆறுதல் சொல்லி உதவிகள் புரிந்த அனைத்து உள்ளங்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இல.12, புறாமு ஒழுங்கை,
அரியாலை, யாழ்ப்பாணம்.


அழைப்பு
குடும்பத்தினர்.

(54724)(4.3.6)

## 31 ஆம் நாள் நினைவலைகள்

### வைத்தியர் விஸ்வலிங்கம் சிறீஸ்காந்தன்

(ரஞ்சிதா வைத்தியசாலை)



அன்னை மடியில்
14.08.1953

ஆண்டவன் பாதத்தில்
08.11.2014

அன்பு மழை பொழிந்து
அழகாக உடை உடுத்து
அழகிய சிரிப்பு சிரித்து
அனைவரையும் அன்புடன் - வரவேற்று
அனைவருக்கும் சிறந்த வைத்தியம் செய்து
அதிசயமாய் நொடிப் பொழுதில்
அனைவரையும் கண்ணீர்க் கடலில்
அழ வைத்து விட்டு
ஆனந்தமாய் சென்றீரே!

குடும்பத்தினர்.

No.100, சுதுமலை மதீதி, மானிப்பாய்.

(54738)(4.3.6)

## எட்டாம் ஆண்டு நினைவலைகள்



| வையத்தின் மைந்தனாக: | தெய்வத்தின் சொந்தமாக: |
|---|---|
| 16 | 06 |
| 08 | 12 |
| 1963 | 2006 |

திதி - கார்த்திகை மாத அபரபக்க துதியை (08-12-2014)

### அமரர் நாகமுத்து ரவிச்சந்திரன்

(முன்னைநாள் ஆசிரியர், யா/மிருசுவில் அ.த.க. பாடசாலை)

ஓடி மறைந்தது எட்டாண்டுகள்
வாடி நிற்கின்றோம் நாம் இங்கு
எம்முள் இறையாகி என்றென்றும் வாழ்ந்து
எமக்கு நல்லன தந்திடுவீர்!

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

'ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

நாவற்காடு,
வரணி.

நீங்கா நினைவுகளுடன்
அன்பான மனைவி,
குடும்பத்தினர்.

(தி/1820)



## தியாகி அறக்கொடை நிலைய நிறுவுநரின் பிறந்த தினத்தை முன்னிட்டு உதவிகள்

யாழ்ப்பாணம், டிசெ.8

தியாகி அறக்கொடை நிலையம், ரி.சி.ரி நிறுவனம் ஆகியவற்றின் நிறுவுநரும், நிர்வாக இயக்குநருமான வாமதேவா தியாகேந்திரனின் 63 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு ரி.சி.ரி விற்பனை நிலைய மண்டபத்தில் கடந்த செவ்வாய்க் கிழமை பல்வேறுபட்ட உதவித் திட்டங்கள் மற்றும் நன்கொடைகள் வழங்கப்பட்டன.

கல்வி ஊக்குவிப்பு செயற்றிட்டம், மருத்துவ உதவிச் செயற்றிட்டம், கணவனை இழந்த குடும்பங்களின் வாழ்வாதாரத்துக்கான உதவித் திட்டம், மகளிர் மீள் எழுச்சித் திட்டம், சூழல் பாதுகாப்புத் திட்டம், பாடசாலைக்கான உதவித் திட்டங்கள், பாடசாலைக் கட்டட நிர்மாணங்களுக்கான உதவித் தொகை, மருத்துவமனைகளுக்கான கட்டட நிர்மாணங்கள் என்பனவற்றுக்கு மொத்தமாக ஒரு கோடி ரூபா நிகழ்வில் பகிர்ந்தளிக்கப்பட்டது.

குறித்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராகயாழ்.பல்கலைக் கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் ப.சிவநாதன், கௌரவ விருந்தினர்களாக யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியின் அதிபர் அருட்தந்தை ஜெறோம் செல்வநாயகம், ஊர்காவற்றுறை பிரதேச செயலர் திருமதி இ.அன்ரன் யோகநாயகம், யாழ்.பிரதேச செயலக உதவிப் பிரதேசசெயலர்செல்வி தனிஸ்கா வசந்தராஜா, சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழு செயலாளர் எஸ்.பரமநாதன், வடமாகாண சர்வோதய அலுவலக ஆலோசகர் அ.கி.சிவசுப்பிரமணியம், யாழ் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.மாணிக்கராஜா ஆகியோரும்–

கௌரவ விருந்தினர்களாக வவுனியா பொது மருத்துவமனையின் பணிப்பாளரும், மருத்துவருமான கே.அகிலேந்திரன், யாழ்.மாநகர சபை சுகாதார மருத்துவ அதிகாரி பொ.ஜசிதரன், சர்வதேச லயன்ஸ் கழகத்தின் யாழ். மாவட்ட உப ஆளுநர் வீ.தியாகராஜா ஆகியோரும்– அதிபர்கள், அருட்தந்தையர்கள், பெற்றோர், பாடசாலை மாணவர்கள்எனப் பலரும்கலந்துகொண்டதுடன் சர்வ மத தலைவர்களால் ஆசியுரைகளும் வழங்கப்பட்டன. (வ–ரி)

## மாணவர் கௌரவிப்பு

தென்மராட்சி,டிசெ. 8

உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்தில் கடந்த ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற சாதனையாளர்கள் கௌரவிப்பு நிகழ்வு அண்மையில் வித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்றது.

வித்தியாலய அதிபர் த.சோதிலிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமாரும், சிறப்பு விருந்தினராக வலய ஆரம்பப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் நா.சர்வேஸ்வரனும் கலந்து கொண்டனர்.

பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு மேல் புள்ளிகள் பெற்ற மாணவர்களுக்கு பதக்கங்களும், விருதுகளும் வழங்கப்பட்டதுடன் 70 இற்கு மேல்புள்ளிகள் பெற்ற மாணவர்களுக்கு விருந்தினர்களால் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (வ–9)

## கைதடியில் பொலிஸ் நடமாடும் சேவை

தென்மராட்சி,டிசெ. 8

சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தின் நடமாடும் சேவைப் பிரிவு கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூக நிலையத்தில் கடந்த 25 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. தொடர்ந்து எதிர்வரும் 25 ஆம் திகதி வரை நடைபெறும்.

தென்மராட்சி மேற்கு, தென்மராட்சி தெற்கு ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த அனைத்து கிராம மக்களும் தமது முறைப்பாடுகளை இந்த சேவை நிலையத்தில் மேற்கொள்ளலாம் என்று பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அறிவித்துள்ளார்.

ஒரு மாத காலத்துக்கு தமிழ் தெரிந்த பொலிஸார் 24 மணி நேரமும் கடமையில் இருப்பதால் மக்கள் தமது முறைப்பாடுகளை மேற்கொண்டு பிரதிகளைப் பெற்றுக்கொள்ளுமாறும் அறிவித்துள்ளார். (வ–9)

## பரிசளிப்பு விழா

தென்மராட்சி ,டிசெ. 8

கைதடி நவபுரம் நவசக்தி முன்பள்ளியின் பரிசில் நாள் நிகழ்வு நாளை செவ்வாய்க் கிழமை பி.ப.1.30 மணிக்கு கைதடி எழுதிடல் அ.த.க. பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கைதடி நவசக்தி சனசமூக நிலையத் தலைவர் சி.மன்மதராசா தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக கைதடி மக்கள் நலன்பேணும் நட்புறவுக்கழகத் தலைவர் இ.கந்தசாமி, சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் கி.பூபாலசிங்கம் ஆகியோரும்– கௌரவ விருந்தினராக கைதடி முன்பள்ளி இணைப்பாளர் அ.தனபாலசிங்கமும் கலந்து கொள்வர். (வ–9)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

### அமரர் இராசையா கணேஸ்வரலிங்கம்



தோற்றம்
07.10.1956

மறைவு
08.11.2014

கடந்த (08.11.2014) சனிக்கிழமை சிவபதமடைந்த அன்னாரின் இறுதிக்கிரியையில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதோடு, இன்று (08.12.2014) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரின் சகோதரியின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

குடும்பத்தினர்.
இ.சண்முகேஸ்வரலிங்கம்– சகோதரர்,
இ.பரமேஸ்வரலிங்கம்–J.P
(உப தவிசாளர்– வலி. தெற்கு பிரதேசசபை)
இ.மகேஸ்வரலிங்கம்–சகோதரன்
இ.சிவஞானேஸ்வரலிங்கம்–சகோதரன்
இ.கணேசலிங்கம்–மைத்துனர்

அம்பிகை இல்லம்,
சிவன் வீதி, உரும்பிராய் கிழக்கு.
உரும்பிராய்.

[54649][4.3.6]